தகட்டிற் செதுக்குவேலை பாதி செய்து முடிக்க எனக்கு உதவியது என் தகப்பனாருடைய மூக்குக் கண்ணாடி. அதை விட உயர்ந்த கண்ணாடி கிட்டவில்லை. அப்பால், வேண்டுமளவிற்குப் பொருளைப் பருக்கத் தோற்றுவிக்கும் பூதக் கண்ணாடி ஒன்று என் கைக்கு எட்டியது. அதன் உதவியால் என் வேலை நன்றாகச் சாய்ந்தது. தகட்டிற் சித்திரம் செதுக்கி வரும்பொழுது மீளாத சங்கடம் ஒன்று நேர்ந்து வேலையை முக்காலே மூன்று வீசம் நிறுத்திவிடும்படி ஆயிற்று. அது இன்னதென்று சொல்லுகிறேன். சில வேளை வேறு வேலை நெருக்கிடையால் சித்திரம் செதுக்குவதைப் பல நாள் வரையில் நிறுத்திவிட்டதும் உண்டு. தகட்டை ஒரு ஒதுக்கில் வைத்திட்டு, செதுக்கிய சித்திரத்தில் துருப் பிடிக்காவண்ணம் எண்ணெய் பூசி வைப்பேன். ஒரு முறை இப்படிச் செய்து நாட் சென்று எடுத்துப் பார்த்தேன். தைலம் இறுகிக் கறுத்துப் பசையாய் ஒட்டிக்கொண்டது. அதைப் பற்றற விளக்குவது பிராண சங்கடமாயிருந்தது. அந்தப் பற்றை ஒரு ஊசி முனையால் சுரண்டி விளக்க வெகு சிரமப்பட்டேன். அது கொஞ்சத்திலே போகுமா - இவ்வாறு பற்று விளக்கிச் சுத்தி செய்யச் செல்லும் காலத்தில் மீளவும் புதிதாகச் சித்திரம் செதுக்கலாகுமெனத் தோன்றியது. இதை நினைத்து நினைத்து என் மனம் மிகு துயரடைந்தது. இதற்கு என்ன உபாயமென்று நீள நினைத்துப் பார்த்த அளவில், எனக்கு ஓர் உபாயம் தோன்றியது. உவர் மண்ணைத் தண்ணீரிற் போட்டு அந்தச் சித்திரத் தகட்டை அதில் இட்டு அடுப்பில் வைத்துக் கொதிப்பித்த பின் இறக்கி, சித்திரம் செதுக்கிய சந்துவாயை எல்லாம் பற்குச்சியால் விளக்கினாற் பற்றுப் போய்விடுமென்று எண்ணிச் சோதனை பார்த்தேன். என் உள்ளம் உவக்க, இந்த உபாயம் பூர்த்தியாகப் பலித்தது. அம்மட்டில் எனக்குப் பாரிய சங்கடம் எல்லாம் பற்றறத் தொலைந்துபோயின. அப்புறம் என் உழைப்பைக் கடைத்தேற்ற வேண்டும் சாதனம் ஆகக் கூடிப் பொறுமையும் சலி

யா முயற்சியுமே. தகட்டிற் சித்திரம் செதுக்கி முடிக்க எனக்கு எவரும் யோசனை சொல்லவுமில்லை, கைத்துணை நிற்கவுமில்லை. ஆகவே, இந்த வேலைப்பாட்டில் ஏதும் நயம் உண்டானால், அது என் கைநயமென்றே சொல்லமாட்டுவேன்; நான் செய்து முடித்த இவ்வேலையில் சலிப்பறு முயற்சியும் சித்த நிர்ணயமுமுள்ளவர்களுடைய செய் திறம் பிரத்தியக்ஷமாய்த் தோன்றுமானால், நான் உரிமை பாராட்டி நிற்கும் கனம் எல்லாம் கூடி இம்மாத்திரந்தான்."

தகட்டிற் செதுக்கிய கொல்லுலைக்களச் சித்திரத்தை நுட்பமாகப் பார்வையிட்டுக் குறை கண்டு சொல்லப் புகுவது நமது அபிப்பிராயம் அல்ல; சித்திரவித்தியா பத்திரிகைகள் அதன் நாணயத்தைக் குறையுற வியந்து கூறியிருக்கின்றனவே. சாயரக்ஷைதோறும் வேலை ஒழிந்து வீட்டில் இருக்கும்பொழுது இச் சித்திரம் செதுக்கி முடிய ஐந்து வருஷம் பிடித்தது. அவன் அதை வர்ணக்காரனிடத்திற் கொண்டுபோனபொழுது பிறர் செதுக்கிய சித்திரத்தைக் கண்டான். அதற்கு முன் ஒரு பொழுதும் அவன் கண்டதில்லை. இவனுடைய கைத்தொழில் முயற்சியையும் விவேகத்தையும் பற்றி நாம் இங்கே சொன்னதெல்லாம் உள்ளது, வர்ணனை அல்ல. இதனுடன் பின்னும் ஒரு லக்ஷணத்தைச் சொல்லி விடுகிறோம். அது குடும்பலக்ஷணம். அதைப் பின்வரும் அவன் வாய்ப்பிறப்பால் அறியலாம்.—"எனக்கு விவாகம் முடிந்து ஏழு வருஷம். இந்த ஏழு வருஷமும் வார்ப்பிடச்சாலையில் அன்றன்று வேலை ஒழிந்து வீடு சேர்ந்தபின், தூரியக்கோலாவது செதுக்கூசியாவது கைக்கொண்டு சித்திரிக்க ஆரம்பிப்பேன். என் மனதிற்கு இதனிலும் உவந்த வேலை வேறு இல்லை. பெரும்பாலும் இராத்திரி நாழிகை ஏற நான் சித்திரித்துக்கொண்டிருக்க, மனைவி எனது அருகில் உட்கார்ந்து ஏதாயினும் ரசமான புஸ்தகம் எடுத்து எனக்குக் கேட்க வாசித்துக்கொண்டிருப்பாள்."—தொழிலாளரில் சிறந்த யோக்கியனும் மனதிற்கு இனியானும் ஆகிய

இவனுக்கு இயற்கையாயுள்ள தீர்க்க விவேகத்திற்கும் பிறப்புவாசியான மனநேர்மைக்கும் சாக்ஷி இதுதான். இது ஸ்வல்பமானாலும் சிறந்த சாக்ஷி.

கைத்தொழில் முயற்சியும் மனக்கருத்தும் ஓவியம் தீட்டும் வித்தையிலும் சித்திரம் அமைக்கும் வித்தையிலும் விசேஷ விற்பத்தியுடையோர் ஆவதற்கு இன்றியமையாத சாதனங்களென்று கண்டோமே - அவ்வாறே இவைகள் சித்திரவித்தையுடன் பிறந்த சங்கீத வித்தைக்கும் இன்றியமையாத சாதனங்கள்தான்.—சித்திரவித்தை என்பது வடிவு, வர்ணம் இவ்விரண்டின் செய்யுள், கீதவித்தை என்பது இயற்கை ஒலிச் செய்யுள். ஹான்டெல் (Handel) என்பவன் இளைப்பாறாது அடுத்து உழைத்தவன். செய்த முயற்சி சிதறும்பொழுது அவன் மனம் ஒரு நாளும் குன்றிப்போகவில்லை. மிடியில் அடிபடப்பட அவனுக்கு மேலுமேலும் ஊக்கம் பிறந்ததாகத் தோன்றியது. அவன் வாங்கின கடனை இறுக்க வசமற்று மனமடிவுற்று வருந்தியபொழுது, க்ஷணப்போதும் முயற்சியில் சோர்ந்துபோகவில்லை. சலிக்காது உழைத்து, ஒரு வருஷத்திற்குள் அவன் சாதித்த சீராய் சிறந்த இராகங்கள் 'ஸௌல்', 'இஸ்ரேயெல்', ட்ரைடென் இயற்றிய வண்ணத்திற்குப் பண், பன்னிரு பெரும்பல்லியம், ஆர்கேஸிலில் ஜூபித்தர் நாடகம் இவைகளே. அவன் சரித்திரம் எழுதிப் பிரசுரம் செய்த ஆசிரியர் "அவன் ஒன்றுக்கும் அஞ்சாத தீரன், பிறர் உதவியின்றித் தன் முயற்சியால் அவன் ஒருவன் பன்னிரண்டு பெயர் செய்யத்தக்க வேலையைச் செய்து முடித்தான்" என்று எழுதியிருக்கிறார்.

ஹேடன் (Haydu)தான் கற்ற வித்தையைச் சுட்டி "அது விஷயத்தைக் கைக்கொண்டு விட்டுவிடாமற் சாதிப்பதே" என மொழிந்தான். மோஜார்த் (Mozart) "எனது முக்கிய இன்பம் உழைப்பு" என்று உரைத்தான். "இம்மட்டுந்தான் இதற் அப்புறம் அங்குலமும் அடியெடுத்து வைக்கலாகாது"

எனவரையறுக்கும் தடை உயர்ந்தோங்க நாடும் ஜன்மவைத்திற்கும் முயற்சிக்கும் இல்லை" என்பது பீதொவென் (Beethoven) பிரியமாய்க் கொண்டாடிய நீதிச்சொல். மொஷீல்ஸ் (Moscheles) இன்னரத்தில் வாசிக்கும்படி இயற்றிய கீர்த்தனை ஒன்றை பீதொவென் இடத்திற்கு அனுப்ப, இவன் கடைப்பக்கத்தின் அடியில் "தெய்வம் துணை நிற்க முடிந்தது முற்றும்" என்று எழுதியிருந்தது கண்டு, உடனே அதன் கீழே "தோழா! உன் முயற்சியைத் துணைக்கொள்" என எழுதிவைத்தான். அவன் வித்தை பயின்ற துறையில் தலைமேற்கொண்டு நடந்த நீதி இதே. யோவான் ஸெபாஸ்தியன் பாக் (John Sebastian Bach) என்பவன் "நான் முயற்சியுள்ளவன்; என்னைப்போலக் கருமத்திற் கண்ணாயிருக்கும் எவனும் என்னைப்போலக் காரியசித்தி அடைவான்" எனத் தன்னைச் சுட்டி மொழிந்தான். ஆனால் ஒன்று மெய். அந்த பாக் என்பவனுக்குக் கீத வித்தியாபிலாஷை ஜன்ம இயற்கை. அவன் முயற்சியை இயக்கிய முக்கியாதாரமான கருவியும் அது, அவன் சித்திக்கு உள்ளுக்குள்ளான மர்மமும் அதே. அவன் ஏதும் அறியாத சிறுவனாயிருந்த காலத்தில் கீதவித்தையில் பிரவர்த்தித்த அவனுடைய கூர்மதியை வேறு துறையில் திருப்பிவிட விரும்பித் தமயன் அவன் எழுதி வைத்திருந்த பாடங்கள் சிலவற்றை எடுத்துக் கிழித்து எறிந்துவிட்டான். அந்தப் பாடங்களைப் பார்த்து எழுத ராத்திரிகாலத்தில் விளக்குக்கு வர்த்தி கொடுக்க வீட்டார் சம்மதிக்கவேயில்லை. அவன் நிலாவெளிச்சத்திற் பார்த்து எழுதினான் - அச்சிறுவனுடைய ஜன்ம விவேகம் கவிந்து சென்ற துறை இன்னதென்று இதனால் திர்ஷ்டாந்த பூர்வமாய்த் தெரிகின்றது. மெயர்பீயர் (Meyerbeer) என்பவனைப் பற்றி 1820-ம் ஆண்டு மிலனிலிருந்து பேல் எழுதிய வாக்கியம் இது:—"அவன் சிறிது சாமர்த்தியமுள்ளவன்தான், ஜன்ம விவேகியல்ல; அவன் எவரோடும் கூடுகிறதில்லை, தனித்திருந்து கீதவித்தியாதுறையை நித்தமும் பதினைந்து மணி நேரம் வருந்திக்

கற்றுக்கொண்டுவருவான்'' அந்த மேயர்பீயர் இவ்வாறு வருந்தி உழைத்தது ஒரு வருஷம் இரண்டு வருஷமல்ல, வெகு வருஷகாலம், உழைக்க உழைக்க, அடக்கமாயிருந்த அவன் விவேகஸ்வரூபம் முழுதும் வெளிவந்தது. இதை அவன் இயற்றிய 'ராபர்த்தோ' 'ஹ்யூகினூத்ஸ்' 'ப்ரொபீதி' முதலிய கிரந்தங்களிற் காணலாம். இக்காலத்தில் பாடிய நாடகங்களில் சிரேஷ்டமென்று இவைகளை எல்லோரும் ஒப்புக்கொள்வார்.

கீதகிரந்தங்களில் மிக வல்லவர்களென்று அங்கிலேயர் இதுவரையிற் பெருஞ்சுட்டுப் பெற்றதில்லை. அவர்கள் முக்கியமாய் இறங்கிய துறை இதல்ல. பெரும்பாலும் அவர்கள் முயற்சி காரியத்திற்கு விசேஷமாய் உதவும் வேறு திசைகளிற் பிரவர்த்தித்தது. ஆனாலும், இந்தத் துறையில் சலிப்பற முயலும் முயற்சியின் பலத்தால் நிபுணர்களான அங்கிலேயர் இல்லாதிருக்கவில்லை. ஆர்ணி (Arne) என்பவன் நாற்காலி பீடமுதலிய வீட்டுத் தட்டுமுட்டு செய்துவிற்றுப் பிழைத்த ஒருவன் மைந்தன். தகப்பன் அவனுக்குத் தர்ம நூலில் விற்பத்தி உண்டாக்குவிக்க நினைத்திருந்தான். ஆனால் அவனுக்குக் கீதவித்தையில் குன்றா வாஞ்சை உண்டாயிருந்தது. அதைத் தடுக்க முயன்றும் முடியவில்லை. நியாயவாதி ஒருவனுடைய உத்தியோகசாலையில் பண்பட்டுவரும்பொழுது, அவன் சீமானல்ல, ஏழையாயிருந்தான். பெரிய மனுஷர் கூடும் சபைகளுக்குக் கூசாமற் போகவராத் தகுதியான ஆடை இல்லை. இல்லாதிருந்தும், அவனுக்கு ஆசையும் அன்பும் கீதவாத்தியங்களின் பெயரில். அவ்வாசை தீர அவன் ஆடை இரவல் வாங்கித் தரித்துக்கொண்டு, நாடகசாலைக்குப் போய், வீட்டு வேலைக்காரர் முதலாம் கீழ்மக்கள் நிரையில் உட்கார்ந்திருப்பான். நாளாவர்த்தியில் கின்னரம் வாசிப்பதில் அவனுக்கு மெத்தவும் விற்பத்தி உண்டாயிற்று. இதை அவன் தந்தை அறியான். ஒரு நாள் பிதா அயலில் உள்ள துரைமகன் ஒருவர் வீட்டுக்குத் தற்செயலாகப் போனான்.

போனபொழுது, மகன் கீதவாத்தியக்காரர் சிலருடன் முதன்மையாய்க் கின்னரம் வாசித்துக்கொண்டிருந்தது கண்டு, அவனுக்குத் தீரா ஆச்சரியமும் திகிலும் உண்டாயின. தன் மகனுக்கு இந்தச் சாதனை உண்டென்று அவன் முதல் முதல் அறிந்தது அன்றுதான். அன்று நடந்த இச்சங்கதியால் ஆர்னியுடைய மனக்கருத்தின் வண்ணம் கருமம் முடிந்தது. அப்பால் தகப்பன் அவனை விரும்பியபடி செய்ய விட்டுவிட்டான் — தடுக்கவில்லை. நியாயவாதி ஆம்படி இருந்த அவன் அந்தத்துறையில் இறங்காதது ஊருக்கு நஷ்டமாய் முடிந்தும், அந்த நஷ்டத்திற்குத் தகும் ஈடு அவனால் உண்டாயிற்று. அவன் மிகு ரசமும் புத்தி நுணுக்கமுமுள்ள கீதவித்வானானான். அங்கிலேய கீதவித்தியா கிரந்தங்கள் பலவற்றுடன் அவன் இயற்றிய வெகு அரிய கிரந்தங்களும் சேர்ந்தன.

காலஞ்சென்ற உவில்யம் ஜாக்ஸன் (William Jackson) என்பவன் இயற்றிய 'இஸ்ரவேலர் இருஞ்சிறை மீட்சி' எனும் கீர்த்தனையை அவன் பிறந்த யோர்க் மாகாணத்தின் பிரதான நகரங்களில் நாடகமாய் ஆடினார்கள். அது நன்றாக வாய்த்தது. கீதவித்தியார்த்திகளுக்கு நேரிடும் இடைச் சலியா முயற்சியால் தடையற விலக்கி ஜயம்பெறலாகும் என்பதற்கு அவன் சரித்திரத்தில் சிறந்த திருஷ்டாந்தம் காணலாம். அவன் பிதா யோர்க்ஷீயர் மாகாணத்தின் வடமேற்குமூலையில் யோர் நதிக்கரை அயற் பள்ளத்தாக்கில் மாஷம் எனும் சிற்றூரில் இருந்த திரிகைக்காரன். அக்குடும்பத்தார் வமிசபரம்பரையாய்க் கீதவித்தையில் விசேஷ விருப்புள்ளவர்கள். உவில்யம் ஜாக்ஸனுடைய தகப்பன் மாஷம் கிராமத் தன்னிஷ்டபட்டாளத்தைச் சேர்ந்த கீதவாத்தியக்காரர் வகுப்பில் குழற்காரன்; அன்றியும் அங்குள்ள தேவாலயப் பாடகரில் ஒருவன்; அவன் பாட்டனும் மாஷம் தேவாலயத்தில் முக்கியபாடகன்; இசைக்கிய மணியும் அடித்துப் பயின்றவன். மேற்படி ஜாக்ஸன் ஆதியில் சிறுவனாயிருக்கும்பொழுது ஞாயிற்றுக்கிழமைக் காலைதோறும் தேவாலயத்தில் மணி அடிக்

கப்படும் சமயத்தில் போயிருந்து அதன் நாதத்தைக் கேட்டு ஆனந்திப்பான். ஆராதனைக்காலத்தில் குழாய்ச் சுரமண்டல வாத்தியம் வாசிக்கப்படுவது கேட்கக்கேட்க அவனுக்கு மனம் கொள்ளா ஆச்சரியம் உண்டாகும். கீதநாதம் ஆலயத்தில் எங்கும் புகுந்ததாய்ச் செல்லும்படி சுரமண்டலத்தின் கதவுகளைத் திறந்து பின்மடக்காக மடிக்கிவிட்டிருப்பார்கள். ஆனதுபற்றி, தரிப்புமூலை, சிறுகுழாய், பெருங்குழாய், கீலமூலை, சுதிப்பலகை, தனிரசம்புக்கருவி என்னும் அகத்துறுப்பு அனைத்தும் வெளிவெளியாகத் தெரியும். தெரியவே, பிறபக்கத்தில் உத்தளத்தில் உட்கார்ந்திருக்கும் இளைஞர் அவைகளைக் கண்டு வியப்புறுவார்கள். மேற்குறித்த கீதசிரேட்டன் ஆகிய இளைஞனுக்கு விசேஷ ஆச்சரியம் உண்டாம். எட்டுப் பருவத்தில் அந்தப் பையன் பிதாவுடைய பழங்குழலை எடுத்து ஊத ஆரம்பித்தான். அதில் டி (D) என்னும் சுரம் சப்தியாது. இச்சங்கடத்தைத் தவிர்த்திக்கும்படி தாய் அவனுக்கு ஏக சுதிக்குழல் ஒன்று கிரயத்திற்கு வாங்கிக் கொடுத்தாள். அதன்பின் சிறிது காலம் சென்று அண்டையில் இருக்கும் துரை ஒருவர் வெள்ளிச்சுரம் காலு உள்ள குழல் ஒன்று வெகுமதியாய்க் கொடுத்தார். பள்ளிக்கூடத்தில் அச்சிறுவனுக்குப் பாடம் ஏறவேயில்லை. பாடம் படிப்பதிலும் பந்தாடுவதும் கோலியாடுவதும், முட்டியுத்தம் செய்வதும் அவனுக்கு அதிகம் பிரியமாயிருந்தன. ஆனதுகொண்டு, அந்தக் கிராமப்பள்ளி உபாத்தியாயர் அவனுடன் கஷ்டப்படுவது வியர்த்தமென்று அவனைத் தள்ளிவிட்டார். தள்ளிவிட, பெற்றோர் பேதனி டிரீட்டு எனும் ஊர்ப்பள்ளி ஒன்றுக்கு அனுப்பினார்கள். அங்கிருக்கும் காலத்தில், பிரிக் ஹௌஸ் கேட் எனும் கிராமத்தில் தேவாலய பாடகர் கூட்டத்திற் சேர்ந்தான். அவர்கள் சகவாசம் அவன் மனதிற்கு ஒத்திருந்தது. அவர்களோடு கூடி அவன் இங்கிலாந்திற் பூர்வம் வழங்கிய முறைப்படி சுரம்பாடப் பயின்றான். இவ்வாறு அப்புஸ்தகம் பார்த்துச் சாகித்யம் தவறாமற் பாடப் பயின்று

கொஞ்சக் காலத்திற்குள் தேர்ந்த நிபுணனானான். அவன் தேற்றத்தைக் காணக்காண அந்தப் பாடகருக்குப் பிரமை உண்டாயிற்று. தெலித்தியா பண்டிதனுடைய பேராசை பூர்த்து அவன் வீட்டுக்குத் திரும்பினான். அப்பால் தகப்பன் வைத்திருந்த பழைய கின்னரம் வாசிக்கப் பயின்றான். அவன் கின்னரம் வாசிப்பது சாரீரமாயிருக்கவில்லை. பின்பு விரலால் மீட்டும் கீதக்கருவி ஒன்று வேண்டும் எனும் ஆவலுடையோனானான். ஆனாலும் அதற்கு நிர்வாகம் இல்லாதே போயிற்று. அந்தச் சமயத்தில் அயற்கோவிற்பற்றுப் புரோஹிதர் ஒருவர் பழுதுற்ற சிறு கொட்டுச் சுரமண்டலம் ஒன்று ஸ்வல்ப கிரயத்திற்கு வாங்கினார். அது சங்கீதத்தில் வல்லவர்கள் சிலர் வட மாகாணங்களில் எங்கும் கொண்டு திரிந்து வாசித்து வாசித்துச் சீர்குலைந்திருந்தது. அதைக் குருவானவர் மீளவும் சீர்ப்படுத்தப் பார்த்தார். அவரால் ஆகவில்லை; அறுதியில் அவர், இவ்வூர்க்கோவிலில் இருக்கும் கைச்சுரமண்டலத்தை ஜாக்ஸன் எனும் வாலிபன் பழுதறச் சீர்ப்படுத்தித் திருத்திக் கொடுத்தானே - இதில் அவன் சமர்த்தைப் பார்க்கலாம் என்று எண்ணமிட்டு, ஒரு நாள் ஒரு கழுதை வண்டியில் தமது கீதக்கருவியை ஏற்றிக்கொண்டு போய் வீட்டில் வாலிபனைக் கண்டு ஒப்பித்தார். சிறிது காலத்திற்குள் அவன் அதைக் கையாடித் திருத்தி ஆதியில் உள்ளபடி சிவதவறு காதும் பிறக்க வாசித்தான். அது கேட்டக் குருவிற்கு மனம் கொள்ளாத் திருப்தி உண்டாயிற்று.

அதன்பின், தானமாய்க் கொட்டுச் சுரமண்டலம் ஒன்று செய்து முடிக்கத் தன்னால் ஆகும் எனும் நினைவு அவன் நெஞ்சிற் குடியேறி, நினைத்தபடி செய்ய நிர்ணயித்தான். நிர்ணயித்துத் தானும் தகப்பனுமாக அவ்வேலையைத் தொடங்கினார்கள். தக்கவேளையில் அவர்களுக்குச் சாதகமே இல்லை - செய்தது ஒன்றும் வாய்க்கவில்லை - திரும்பத் திரும்பப் பல முறை செய்து எல்லாம் பழுதாய்ப்போயின. ஆனாலும் கைசலித்து விட்டுவிடாமல் மெய்வருந்தி உழைத்

து, அவ்வுழைப்பின் பலத்தால் கடைசியில் அவர்கள் கையிட்ட கருமம் கருதியவாறு சாய்ந்தது. அவர்கள் சமைத்த சுரமண்டலத்தில் தசசுரம் சந்தச் சிதைவின்றிப் பிறந்தன. அன்றை அயலில் உள்ளவர்கள் பெரும்பாலார் அந்தக் கருவியை அதிசயமென்று வியந்தார்கள். அன்றுதொட்டு, தேவாலயங்களில் பழைய சுரமண்டலங்களைத் திருத்துவிக்க விரும்பும் எவரும் ஜாக்ஸன் வாலிபனை வரவழைத்துத் திருத்துவிப்பார்கள். சில கருவிகளுக்கு அவன் நூதனமாய்க் கொட்டுகள் இணைக்கி நூதனநாதம் பிறக்கும்படிசெய்வான். இந்த வகையாய் அவனுக்கு அடிக்கடி இருந்த இருப்பில் வேலை படிந்தது. அவன் செய்த வேலை அத்தனையும் உடையவர்களுக்குத் திருப்தி உண்டாமாறு செய்து முடித்தான். அதன்பின், அவன் விரலால் மீட்டும் நான்கு தரிப்புச் சுரமண்டலம் ஒன்று நிர்மிக்கத் தொடங்கி ஒரு பழைய சுரமண்டலத்தின் சுர உறுப்புகளை அதற்குப் பொருந்த இணக்கினன். கருவி செய்து முடிந்தபின், பகற்காலத்தில் ஜீவனத்திற்காக மா அரைத்து விற்று, சாயரக்ஷை வீடு சேர்ந்து அந்தக் கீதக் கருவி வாசிக்கப் பயின்றான். அவன் கீதவித்தை கற்ற பாடபுஸ்தகம் "கால்காத் இயற்றிய மந்தரசுர இலக்கணவிளக்கம்." சிலவேளை பகற்காலத்தில் அவன் வண்டியில் மாமூட்டை ஏற்றிக் கழுதை கட்டிச் செலுத்திக்கொண்டு நாட்டகத்தில் திரிந்து விற்பதும் உண்டு. வேனிற்காலத்தில் அவனுக்கு வேலை வயல்வெளியில் கிழங்கு கிண்டுவது, புல் அறுத்து உலர்த்துவது, அறுப்பது. என்னென்ன வேலை செய்தாலும், சாயரக்ஷை வேலை ஒழிந்து வீட்டில் இருக்கும்பொழுது, ஒரு நாளாயினும் கீதாப்பியாசம் இல்லாதிருக்க அவன் மனம் தாளாது. அவன் மனதோலை அன்றன்று ஆற்றும் பரமௌஷதம் அதே. அப்பால் அவன் கீர்த்தனைகளை இயற்றி ஒரு கை பார்த்தான். அவன் இயற்றிய ஞானகீர்த்தனம் பன்னிரண்டு மா அரைத்துவிற்கும் ஒருவன் மகன் பதினறு பருவத்தில் இயற்றியவை

ளென்று யோர்க்கில் காலஞ்சென்ற மெஸ். காமிட்ஜ் துரைக்குக் காண்பிக்கப்பட்டன. அவர் அவைகளைப் பார்த்துச் சந்தோஷித்து வழுக்களைக் குறிப்பித்து, மெத்த நன்றாயிருக்கிறது வாலிபன் விட்டுவிடாமல் எழுதி எழுதிப் பழக வேண்டும் என்று சொல்லி அனுப்பினார்.

மாயூரம் கிராமத்தில் கீதவாத்தியக் கூட்டம் ஒன்று ஏற்பட, வாலிபனாகிய ஜாக்ஸனும் அதிற் சேர்ந்து நாட்சென்று அக்கூட்டத்திற்குத் தலைவனாக நியதிபெற்றான். அவன் முறைமுறையாகக் கீதக் கருவி அனைத்தையும் வாசித்து வாசித்துப் பயின்று சங்கீத வித்தியாசாதனையில் மிகவல்லவனானான். அவன் அக்கூட்டத்திற் பாடுவதற்கு அனேக இராகங்களும் நூதனமாய்த் தொடுத்தான். அந்தக் கோவிற்பற்று ஆலயத்திற்கு விரலால் மீட்டும் புதுச்சுரமண்டலம் ஒன்று எவரோ உபகரிக்க, அதை வாசித்துவரும் உத்தியோகம் அவனுக்குப் படிந்தது. படியவே, அவன் அங்கங்கே திரிந்து மா அரைத்துவிற்கும் வேலையைக் கைவிட்டு, மிருக நிணவர்த்தி செய்துவிற்க ஆரம்பித்தான். வேலை ஒழிந்த வேளையில் முன்போலவே சங்கீத வித்தையை அப்பியசித்துக்கொண்டுவந்தான். 1839-ம்-ஆண்டு அவன் "செழுமிய பள்ளத்தாக்குகள் ஆனந்தாவேசத்துடன் பாடக்கடவன" எனும் தொடக்கத்து ஞானகீர்த்தனையைப் பாடினான். அவன் முதலிற் பாடிய இவ்வகைக் கீர்த்தனை

இப்புஸ்தகம் பிழை திருத்தி இரண்டாம் முறை அச்சிட்டு வரும் காலத்தில் ஜாக்ஸன் ஐம்பது வயதில் இறந்துபோனதாகச் சமாசார பத்திரிகைகள் மூலமாய்ச் செய்தி பிறந்தது. இறக்கச் சிறிதுகால முந்தி அவன் இயற்றி முடித்த கிரந்தம் 'சங்கீத ஸ்துதி' என்பது. அவன் வாலிபத்தைப்பற்றி மேற்சொல்லிய வரலாறனைத்தும் மாயூரம் எனும் இடத்தில் மெழுகுவர்த்தி வேலைசெய்யும் காலத்தில் அவன் வாக்கு மூலமாகவே இந்த சரித்திரகர்த்தருக்குத் தெரிவிக்கப்பட்டன.

இதே. மறு ஆண்டு, அவன் இயற்றிய "பசும்புன்னிலத்தின் சகோதரிகள்" எனும் கீர்த்தனைக்கு ஹட்டர்ஸ் பீல்ட் க்லீ க்லப் சங்கத்தாரால் சிரேஷ்ட வெகுமதி கிடைத்தது. அவன் இயற்றிய மற்றக்கீர்த்தனை 'இறைவனே எமக்கு இரங்கும்' என்பது. இக்கீர்த்தனையும் 108-வது சங்கீதமும் தேவாத்திய சகிதம் மடக்கிசையாகப் பாட இயற்றப்பட்டன. இச்சிறு இசைநூல்கள் இயற்றிக்கொண்டிருக்கும்பொழுது, அவகாசம் கண்டு "இஸ்ரவேலர் பாபிலோன் சிறைமீட்சிப் படலத்தை" அவன் ஒரு திருவிலாசமாகப் பாடினான். நினைவில் வரும்பொருளை வரவரக் கடிதத்திற் குறித்துவைத்து, சாயரக்ஷை மெழுகுவர்த்திக் கடையில் வேலை ஒழிந்து வீடுசேர்ந்தபின் ஆதி அமர்ந்து பணிக்காய்த் தொடுத்து முடிப்பது அவன் சாதகம். அவ்விலாசம் 1844-5-ம் வருஷம் பாகம் பாகமாய்ப் பிரசுரம் செய்யப்பட்டது. கடைசியான கீர்த்தனை பிரசுரமானது அவனுடைய இருபத்தொன்பதாவது ஜன்மோற்சவ தினத்தில். அவ்விலாசம் மிகவும் உவந்து அங்கீகரிக்கப்பட்டது; வடநாட்டு நகரங்கள் கிராமங்களில் அடிக்கடி ஆடும் சமயந்தோறும் நன்றாய் வாய்த்தது. இருந்திருந்து ஜாக்ஸனுக்கு ப்ராத்போர்டில் இசைநூற் பண்டிதர் உத்தியோகம் படிந்தது. அந்நகரத்தார்க்கும் அயலூரார்க்கும் இராகப்பயிற்சியில் அங்கு அவன் முயற்சித்துணையால் விளைந்த பயன் அற்ப சொற்பமல்ல. அவ்வுத்தியோகத்தில் அமர்ந்து சில வருஷத்தின் பின் ஜாக்ஸன் ப்ராத்போர்டில் கானம் பயிற்றித் தெளிவித்த பாடகரோடு பக்கிங்ஹம் அரண்மனைக்குப் போய் மஹாராணியவர்களைத் தரிசிக்கும் பிரதிஷ்டை பெற்றான். அந்த நற்சமயத்தில் அரண்மனையிலும் பின்பு பளிங்குமாமண்டபத்திலும் அவன் இயற்றிய சில கீர்த்தனைகள் கேட்டவர்கள் செவிக்கு ஆனந்தமாயிருந்தன.

தானும் முயன்று உபாத்தியாயர் உதவியின்றிச் சங்கீத வித்தை கற்றுத் தெளிந்த ஜாக்ஸனுடைய சரித்திரத்தை

மேற்சொல்லியவாறு சுருக்கிச் சொன்னோம். தன் முயற்சிப்பலமும், மனோதிடம் சலிப்பற்று* உழைக்கும் உழைப்பு இவற்றின் வலியும் உள்ளவன் வாலிபத்தில் நேரிடும் இன்னல் இடைஞ்சலையும் அரிய பிரதிபந்தங்களையும் லக்ஷியமின்றி மேற்கொண்டு வெற்றி சிறந்து விளங்குவான் என்பதற்கு ஜாக்ஸனுடைய சரித்திரமும் ஒரு திர்ஷ்டாந்தமாம்.

௭௰. அதிகாரம்.

கைத்தொழில் முயற்சித் துணையால் பிரபுப்பட்டம் பெற்றவர்கள்.

"வெல்லினும் தோற்பினும் தன் விதிப்பலத்தை ஒரு கை சோதித்துப் பார்க்கத் துணிவில்லாதவன் ஒன்று அறக் கோழை, அல்லது அற்ப சாமர்த்தியன்"— மந்திரோஸ் மார்க்விஸ் (Marquis of Montrose.)

"வலியாரைத் தாழ்த்தி எளியாரை உயர்த்தினார்." ஸேண்ட் லூக்கா (St. Luke.)

எளியோர் சிலர் கருத்து கைத்தொழில் முயற்சி இவ்விரண்டின் வலிமையால் உயர் பதவி பெற்றுப் பிரபலரான வரலாறுகளை எடுத்துக் காட்டினோம்; அவர்களைப் போலக் குலமக்களுள்ளும் கைத்தொழில் முயற்சித்* துணையால் விசேஷ பிரபலராகி உலகத்திற்கு அறிவு புகட்டும் மணித்தரமானவர்கள் சிலர் உண்டு. இங்கிலாந்திற்கு ஈரற்குலையும் இதய கமலமும் மூளையுமானவர்கள் அங்குள்ள ஜன சாமானியரில் விசேஷ கைத்தொழில் முயற்சியுள்ளவர்களே. காலத்திற்குக் காலம் அவர்கள் தரம் உயர்ந்து பிரபுக்கள் வகுப்பிற் சேர்ந்தார்கள். அங்கிலேய பிரபுக்களும் இதர தேச பிரபுக்களைப்போல மெலிந்து சிதைவு

றுமல் வரவரப் பலத்து நிலைத்திருக்கும் முகாந்தரம் ஒன்று
இதுதான். கட்டுக்கதையில் வருகிற அந்நியனைப்போல,
நூமாதெனும் மாதாவைத் தொட்டு, அதி பூர்வகாலந்தொ
டங்கியுள்ள குலமக்களுடன் கைப்பாடுபட்டுழைத்த சாமா
னியரைக் கலந்ததனால் அங்கிலேய பிரபுகுலத்திற்கு வலி
மை ஏறி இளமை பெயர்ந்தது.

சமஸ்த மனுஷருக்கும் உதிரம் சமதூரம் தொலையினி
ன்று சுரந்து பெருகிவரும்; தங்கள் பூர்வபரம்பரை சில
ருக்குப் பாட்டன் காலத்திற்கு அப்பால் வரிசைக் கிரமம்
தவறுமல் தெரியாது. தெரியாதிருப்பினும், எல்லாரும்
மனுக்குலத்தின் ஆதி பிதா மாதாவைத் தங்கள் தங்கள்
கோத்திரத்தின் அடியாக வைத்துக்கொள்வது தர்மமே.
இதே பிரகாரம் செஸ்தர்பீல்ட் பிரபு தமது கோத்திரத்
தின் ஆதி தாய்தந்தையரைக் கோத்திரப் பெயருடன்
ஆதாம் ஏவாள் எனச் சேர்த்துக் குறிப்பித்து எழுதினர்.
எந்த நிலையும் சதமல்ல. மேலோர் தாழ்வதும் கீழோர்
உயர்வதும் இயற்கை. பூர்வ குடும்பங்கள் வரவர இளை
த்துச் சிறுமைப்பட்டுக் குறியழிந்து சாமானியர் வகுப்பில்
மறைந்துபோக, நூதன குடும்பங்கள் தழைத்து ஓங்கி மேம்
பாடடையும். பர்க் இயற்றிய 'குடும்ப பரிவிர்த்தி' எனும்
கிரந்தம் மேற் சொல்லியவாறு குலம் உயர்வது தாழ்
வதைப் புத்தியிற் படத் தகும் வகையிற் காட்டுகின்றது.
அன்றியும், கோடி சீமான்களுக்கும் குலம் உயர்ந்தோர்
க்கும் உண்டாம் ஆபத்து ஏழைகளைத் தலை நிமிர ஒட்
டாமல் அழுத்தி வருத்தும் ஆபத்து இன்னல் இடைஞ்ச
லைக்காட்டிலும் பெரிதென்று வெளியிடுகின்றது. ஆதியில்
மாக்ன கார்ட்ட (Magna Charta) எனும் மஹா சுதந்தர
பத்திரத்து நிபந்தனைகளைத் தவறாது செலுத்தத் தெரிந்து
நியமிக்கப்பட்ட இருபத்தைந்து பரன் பிரபுக்கள் வம்சத்
தில் ஒரு புருஷ பிரஜையாவது தற்காலம் அங்கிலேய
பிரபுகள் சபையில் இல்லையென்று இவ்வாசிரியர் எடுத்

னுக் காட்டுகிறார். தேசத்தில் நடந்த சண்டைகளிலும்
நேர்ந்த கலகங்களிலும் பூர்வ குலமக்கள் வெகு பெயர் மா
ய்ந்துபோக, அவர்கள் குடும்பம் எல்லாம் சிதறுண்டு கெ
திகெட்டுப்போயின. ஆனாலும், பெரும்பாலும் அவர்கள்
சந்ததியார் நாளது வரையும் சாமானியராக இருக்கிறார்கள்.
புல்லர் இயற்றிய 'தக்கோர்' எனும் கிரந்தத்தில் "பொ
ஹன், மார்த்திமர், ப்லாந்தாஜெனத் எனும் குடும்பப்பெ
யர் நியாயமாய் வழங்கிவரும் சிலர் சாமானிய ஜனக்கும்
புத்திமிரத்தில் குலவரையறை தெரியாது மறைந்திருக்கி
றார்கள்" என்று எழுதினார். இவ்வாறே, பர்க்கும் க-வது
எட்வார்ட் அதிபதியின் ஆறாவது குமாரன் கெந்து எர்ல்
பிரபுவம்சத்தார் இருவர் முறையே ஆடுமாடு அடித்துவிற்
கும் தொழிலும் ஆயம் வாங்கும் தொழிலும் செய்து
பிழைப்பதாகவும், க்லாரென்ஸ் ட்யூக் பட்டவர்த்தனர்
புத்திரி ஆகிய மார்கெரெத் ப்லாந்தாஜெனத்தின் பிரபௌ
த்திரன் சிறுமைப்பட்டு ஷிராப்ஷீயர் நாட்டில் ந்யுபோ
ர்த் நகரத்தில் சக்கிலி வேலை செய்துவருவதாகவும், ஹன
ோவர் பிரிவில் ஸேண்ட் ஜார்ஜ் தேவாலய மசானச் சேவ
கன் ஒருவன் மூன்றாவது எட்வார்ட் அரசன் மைந்தனா
கிய க்லாஸ்தர் ட்யூக் பட்டவர்த்தனருடைய சந்ததியான்
என்பதாகவும் வெளிப்பட்டதென்று காட்டுகிறார். அங்கி
லேய பரன் பிரபு வகுப்பிற் பிரதமராகிய ஸைமன் டி மந்து
போர்த்தின் வமிச பரம்பரையில் வந்த ஒருவன் தூலிவீதியில்
குதிரைக் கல்லணைக் கடை வைத்துப் பிழைப்பதாகத் தெரி
கின்றது. பெருமித வாழ்வு வாழ்ந்த பெர்ஸலி சந்ததியிற்
பிறந்து நார்தம்பர்லண்ட் ட்யூக்பட்டத்திற்குப் பாத்தியஸ்
தனாயிருந்த ஒருவன் டப்ளின் நகரில் பெட்டி செய்து விற்
றுப் பிழைத்தவன். நார்தம்பர்லண்ட் நிலக்கரிக்கனியில்
கஷ்டப்பட்டு வேலைசெய்த சாமானியன் ஒருவன் பெர்த்
எர்ல் பட்டத்திற்குப் பாத்தியஸ்தனென்று வழக்காடி இன்
னும் வெகு வருஷம் செல்லவில்லை. ஹியூ மில்லர் எடின்

து மரணத்திற்குத் தப்புவித்துப் பின்பு நெகோட் சென்று அந்தக் கன்னியை மணம்புரிந்தவன். பின்னும் வியாபாரத்தால் வியாபகராகிப் பிரபுப்பட்டம் பெற்றவர்கள் பிதஸ் உவில்யம், லீ, பீற்றர், கௌபர், டார்ன்லி, ஹில், கரிங்தன். போலி, நார்மன்பி எனும் இரு குடும்பங்களும் ஆதியிற் பிரபலமானது பல விஷயங்களிற் சிறந்த வியாபகரால். ஊக்கத்தால் விளையும் பயன் அவர்கள் சரித்திரத்தில் மயக்கமறத் தோன்றுவதனால் அச் சரித்திரத்தை எழுதி வைத்துக்கொள்ளத் தகும்.

போலி குடும்பத்திற்கு ஆதியிற் பிரக்கியாதி உண்டானது ரிச்சார்ட் போலி (**Richard Foley**) யால். இவன் பிதா முதலாவது சார்ல்ஸ் மன்னன் காலத்தில் ஸ்தோர்ப்ரிட்ஜ் எனும் இடத்திற்கு அயலில் சிறுக விவசாயத்தொழில் செய்தவன். அக்காலத்தில் மத்திய மாகாணங்களில் வழங்கிய இருப்பாயுதங்கள் கருவிகள் அனைத்தும் அவ்விடத்திலேயே செய்யப்பட்டன. ரிச்சார்ட் போலி சிறு பருவத்தில் இருப்பாணி செய்யப் பயின்றான். அக்காலத்தில் ஆணி செய்வது பிராணசங்கடம். இருப்புச் சலாகையைப் பழுக்கக் காய்ச்சிச் சம்மடியால் அடித்துப் பல பிளவுகளாகப் பிளந்து குறுகத் தறித்து அதன்மேல் ஆணி செய்வார்கள். இவ்வேலையிற் பட்ட பாடும் மிகுதி, சென்ற காலமும் அதிகம். இதை அநுதினமும் போலி கண்டறிந்திருந்தான். ஸ்வேதென் தேசத்திலின்று ஆணி திரள் திரளாக இறக்குமதியாகி இங்கிலாந்தில் விலைப்பட்டது. ஆகவே, ஸ்டோர்ப்ரிட்ஜில் செய்த ஆணி வரவர விற்பனை ஆகாதே வியாபாரம் இளைத்தது. ஸ்வேதென் தேசத்தில் யந்திரப் பிரயோகத்தால் சுளுவிற் சலாகை பிளந்து ஆணி செய்கிறார்களென்று செய்தி பிறந்தது. அந்த வகை அறிந்தால், இங்கிலாந்தில் அப்பொழுது ஆணி செய்தற்குப் பட்ட சிரமமும் சென்ற காலமும் மிஞ்சமே.

ரீச்சார்ட் போலி தீர்க்க விசாரணைசெய்து ஸ்வேதெனில் யந்திரத்தால் ஆணி செய்வது நிசமென்று அறிந்து அந்த ஜாதன் முறையை எவ்விதத்திலும் தேறத்தெளியப் பயிலும் படி தீர்மானித்தான். ஸ்டோர்ப்ரிட்ஜின் அயலில் அவனை இருந்தாற்போலே காணவில்லை. நாலைந்து வருஷகாலம் அவன் இருக்கும் இடம் எவ்விடமென்று எவரும் சொல்வார் இல்லை. அவன் போனது எவ்விடமென்று அறிந்தவர் இல்லை. அவன் வீட்டார்க்கும் அது தெரியாது. போகும்பொழுது, தன் அபிப்பிராயத்தை அவன் அவர்களுக்கு வெளியிடவில்லை. போன கருமம் முடிக்காது திரும்பிவரச் சம்பவித்தால், தன்னை எல்லாரும் கேலிபண்ணுவாரென்று அவன் இப்படி மௌனமாய் வெளிப்பட்டான். வழிச் செலவிற்கு அவன் கையில் ஒரு காசும் இல்லை. எப்படியோ ஹல் துறையிற் போய்ச் சேர்ந்து ஸ்வேதென் துறைக்குச் சரக்கேற்றி நின்ற கப்பல் ஒன்றில் சேவம் படிந்து ஏறி ஸ்வே தென்கரை சேர்ந்தான். அவன் கையில் ஒரு வீணை தவிர வேறு சொத்து ஒன்றும் இல்லை.. கரை ஏறியபின் அவன் வீட்டுக்கு வீடு வீணை வாசித்துத்திரிந்து இரந்து உண்டு அப்ஸலாவிற்குக் கிட்டிய டன்னிமோரா கனிக்குப் போனான். அவன் சங்கீத சாதனையில் தெளிந்த நிபுணன், இனியகுணவான். ஆனதனால், கனியில் இரும்புவேலை செய்தவர்கள் எல்லாரும் விரைவில் அவனுக்கு இஷ்டர் ஆனார்கள் தொழிற்சாலையில் எங்கும் தடையறப் போகவர அவன் இடம்பெற்றான். இந்தப் பிரகாரம் கிட்டிய நற்சமயத்தை அவன் வியர்த்தமாய்ப் போக்கிவிடாமல் இரும்பு பிளக்கும் வகையைக் கண்டு கண்டு அவதானித்தான். இவ்வேலை செய்யும் திறம் முதிர்ந்து இரும்புவது அவன் தாற்பரியம். இதன் பொருட்டு அவன் அங்கே நாட்படத் தங்கி எல்லாம் அறிந்தபின், தாது அகழும் உள்ளன்புள்ள தன் இஷ்டர் எவர்க்கும் சொல்லாமல் சடிதியில் விலகினான்.—அவன் போன இடம் ஒருவர்க்கும் தெரியாது.

ரிச்சார்ட் போலி மீளவும் இங்கிலாந்திற் போய்ச் சேர்ந்து ஸ்தோர்ப்ரிட்ஜில் நைத் எனும் துரைமகன் ஒருவருக்கும் மற்றொருவருக்கும் தான் யாத்திரைபோய் அறிந்து வந்த தொழில் வரலாறெல்லாம் சொன்னான். அவன் சொல்லைப் பூர்த்தியாய் நம்பி, அதன முறைப்படி இரும்பு பிளக்கத் தொழிற்சாலை கட்டவும் யந்திரம் உண்டாக்கவும் வேண்டும் நிதியைக் கணக்கிட்டு அவர்கள் அவனுக்குக் கொடுத்துதவினார்கள். கட்டடம் முடிந்து வேலை தொடங்கிய பொழுது, யந்திரம் இயல்வில்லை - என்னதான் செய்து பார்த்தும் அது இருப்புச் சலாகையைப் பிளக்கவேயில்லை" எண்ணிய எண்ணம் சிதறியதுபற்றி எல்லார் மனமும் சலித்தது, முக்கியமாய் ரிச்சார்ட் போலியுடைய மனதிற்கு இது தாங்கரிய இண்டாட்டமாய் முடிந்தது. மறுபடியும் போலி பரதேசியாய்ப் போய்விட்டான். கருமச் சிதைவை நினைந்து நினைந்து வெட்கப்பட்டு மனமடிவுற்று இனி எப்பொழுதும் திரும்புவதில்லையென்று அவன் பரதேசம் போய்விட்டதாக எல்லாரும் எண்ணமிட்டனர். அவர்கள் எண்ணியது தப்பு. இரும்பு பிளக்கும் மர்மத்தைத் திரத்தெளிய அறிந்துகொள்வது போலி கடைப்பிடி,—ஒருமுறை தவறியதுபற்றி அவன் மனம் இளைக்கவில்லை. எவ்விதமும் அறிந்தன்றி விடேனென்று அவன் சங்கற்பித்திருந்தான். அவன் மீண்டும் வீணைகொண்டு ஸ்வேதெனுக்குப் போய் இரும்புவேலை நடந்தேறும் கனியிற் சேர்ந்தான். அங்குள்ள கனி அகழ்வோர் அவனைக் கண்டு களிகூர்ந்து ஏற்றுக்கொண்டார்கள். இனி அந்த யாழ்வல்லோனை விலகவிடலாகாதென்று அவர்கள் இம்முறை இரும்பு பிளக்கும் யந்திரத்திற்றானே இருத்திக்கொண்டார்கள். ஆகவே அவர்கள் அனுகூலத்தால் அவன் தன் பிழைப்பிற்கு இலக்காகக் குறித்த துறை கைகூடியது. வீணை வாசிக்கும் திறம் ஒன்றொழிய மற்றெந்தத் துறையிலும் அவன் விவேகியெனச் சற்றாவது தோன்றவில்லை. அதுபற்றி, அந்த யாழ்

ட்யாடி யாதாயினும் ஒரு முகாந்தரத்தைப்பற்றி வேஷதாரி
யாக வந்திருப்பானென்று அவர்கள் ஐயுற நிமித்தம் இல்
லையே. போலி இம்முறை வேலை நடக்கேறும் முறையை வெ
கு சிந்தனையாகக் கவனித்து, தன் கருமம் சித்திய காரணம்
ஏதென்று திட்டமாய்க் கண்டறிந்தான். அவன் சித்திரம்
எழுதும் துறை சிறிதும் பயின்றவன் அல்ல. அல்லாதிருந்
தும், ஆமனவிற்கு யந்திர படத்தைக் குறித்துவைத்திருந்
தான். நாட்பட அங்கிருந்து, யந்திர உறுப்பமைதியைத்
தன் கருத்தில் மயக்கமற விளங்கப் பதித்து, கண்ணுற்
கண்டவைகளைக் கையாற் செய்யத்தக்க திறமை உண்டான
பின்பு கனியில் வேலைசெய்வோர் கூட்டத்தினின்று மீள
வும் விலகி ஸ்வே தென்துறை சேர்ந்து இங்கிலாந்தி
ருக் கப்பல் ஏறிப் போனான். இவ்வகை ஓர்ப்புள்ள ஒரு
வன் எடுத்த கருமம் ஒருபொழுதும் கைடந்தேறுமற் போ
காது. மீண்டும் அவன் தன் இடத்திற் போய்ச் சேர்ந்தது
சுற்ற மித்திரர் எல்லோர்க்கும் ஆச்சரியமாயிருந்தது. சே
ர்ந்த நாள் முதல் யந்திரத்தில் உள்ள குற்றம் குறைகளைக்
களைந்து எத்தனம் அனைத்தும் செய்து முடித்தான். நினை
ந்த கருமம் பூர்த்தியாய் வாய்த்தது. கைச் சமர்த்தாலும்
தொழில் முயற்சியாலும் அவன் பெருகத் திரவியசம்பாத்
தியம் செய்வதற்கு விரைவில் அடிகோலினான். கோலவே
அவ் விஸ்தாரமான நாட்டகத்தில் தடுமாறி இளைத்திருந்த
தொழில் அவன் மூலமாய் மீளவும் தலைப்பட்டது. ஜீவனு
உள்ளளவும் அவனும் முன் செய்த இத்தொழிலையே செய்
துகொண்டுவந்தான். அன்றியும், தன் அயலில் லோகோப
காரமான கிரியை அனைத்திற்கும் துணைநின்று தூண்டு
கோலாயிருந்தான். ஸ்தோர்ப்ரிட்ஜில் பாடசாலை ஒன்று
ஸ்தாபித்து அதன் செலவிற்கு மூலதனம் வைத்தான். கிட்
டர்மின்ஸ்தருக்கு விசேஷ உபகாரியாகி, கழிகடையெ
னப் பொருள் தரும் வசைப்பெயர் வழங்கிய பார்லிமெந்
தின் காலத்தில் ஷர்ஸ்தர்ஷீயரில் பிரதம தர்மாதிகாரியா

யிருந்த அவன் மகன் தோமாஸ் ஸ்வின்போர்த் எனும் பூ வ கிராமத்தில் ஏழைச் சிறுவருக்குக் கல்வி கற்பிக்கத் தர்மப்பள்ளி ஒன்று ஸ்தாபித்து அதற்கு மூலதனம் வைத்தான். போலி குடும்பத்தில் முன்னோர் எல்லோரும் ப்யூரித்தன் வர்ணத்தார். ரிச்சார்ட் பாகஸ்தர் போதகர் அக்குடும்பத்தார் பலருடன் நட்புப்பொருந்தி அளவளாவியிருந்ததாகத் தோன்றுகிறது. அவர் இயற்றிய 'தற்சரித்திரமுங் கால விளக்கமும்' எனும் புஸ்தகத்தில் அவர்கள் பெயரை அடிக்கடி சொல்லுகிறார். தோமாஸ் போலி மாகாணத்தின் பிரதம தர்மாதிகாரியாக நியதிபெற்றபொழுது முறைப்படி தமக்குப் பிரசங்கம் செய்ய பாக்ஸ்தர் போதகரைக் கேட்டுக்கொண்டார். பாக்ஸ்தர் எழுதிய தற் சரித்திர புஸ்தகத்தில் தோமாஸ்போலியை எந்தக் காரியத்திலும் நடுவுநிலை தவறுதவனொன்றும் குற்றம் குறையில்லாதவனொன்றும் அவர் சங்காத்தமுள்ளோர் எல்லாரும் அவர் மனநிறையையும் நேர்மையையும் பாராட்டியதொழிய, ஒருவரும் குறைசொன்னதில்லையென்றும் சொல்லுகிறார். இரண்டாவது சார்ல்ஸ் ராச்சியபாரம் தாங்கிய காலத்தில் இந்தக் குடும்பத்திற் பிரபுப்பட்டம் அமைந்தது.

மல்க்ரேவ் குடும்பம் என்றும் நார்மன்பி குடும்பம் என்றும் பெயர் வழங்கும் குடும்பத்திற்குப் பிரதிஷ்டை உண்டானது உவில்யம் பிப்ஸ் (Wiliam Phipps) என்பவனாலேயே. அவனும் தன்துறையில் ரிச்சார்ட் போலியைப் போலக் குறிக்கொள்ளப்பட்டவனே. அவன் தகப்பன் மேன்நாட்டில் ஊலிச் கிராமத்தில் குடியேறிய திடகாத்திரமுள்ள அங்கிலேயன், தொழிலில் துப்பாக்கிக் கொல்லன்; அக்காலத்தில் மேன்நாடு அமெரிக்காவில் ஏற்பட்ட அங்கிலேய புதுக்குடிநாடுகளில் ஒன்று. உவில்யம் பிப்ஸ் பிறந்தது 1651-ம் ஆண்டு. அவன் தாய்தந்தையருக்குப் பிள்ளைகள் அவனுடன் இருபத்தாறு பெயர். அவர்களில் ஆண்பிள்ளைகள் இருபத்தொரு பெயர். மனவலிமையும் புயவலிமையுந்தான் அவர்கள் சொ

த்து, மற்றொன்றும் இல்லை. உலிஸ்யம் சிறுபருவத்தில் ஆடு மேய்த்துக்கொண்டிருந்தான். தானியரைப்போலக் கடலோடுவது அவனுக்கு ஜன்மப்பிரகிர்தியெனத் தோன்றுகிறது. கலக்கமற்று அடங்கியிருந்து ஆடு மேய்ப்பது அவன் மனதிற்குப் பிடிக்கவில்லை. அவன் தைரியசாலி, அச்சமற்றுப் பராக்கிரம முயற்சி செய்யும் பிரகிர்தியுள்ளவன். ஆனதுபற்றி, கடலோடும் சேவகத்திற் சேர்ந்து உலகமெங்கும் யாத்திரைபோய்த் திரியும் ஆவல் அவனுக்கு மெத்தவும் உண்டு. எதாயினும் ஒரு கப்பலில் சேவகத்தில் அமர அவன் சமயம் பார்த்திருந்தான். கப்பல் ஒன்றும் அவன் கண்ணுக்கு எதிர்ப்படவில்லை. ஆகவே, மரக்கல ஓட்டாவி ஒருவனிடத்தில் அமர்ந்து மரக்கலம் செய்யும்தொழிலைச் சோர்வறப் பயின்றான். வேலை ஒழிந்திருக்கும்பொழுது எழுத வாசிக்கப் பழகிவந்தான். மரக்கல வேலை பழகக் குறித்த காலம் கூடி அவன் பாஸ்தன் நகரத்திற்குப் போனான். அங்கிருக்கையில் சிறிது பொருளுடையவளான விதவை ஒருத்தியை நட்பாடி மணம் புரிந்தான். அதன்பின் சொந்தத்தில் சிறுமரக்கலத் தச்சவாடி ஒன்று வைத்து ஒரு மரக்கலம் உண்டாக்கி கடல் ஓடத்தொடங்கி மர வியாபாரம் செய்துகொண்டுவந்தான். கிட்டத்தட்டப் பத்து வருஷகாலம் அவன் இம்முயற்சியிற் கஷ்டம் பாராட்டாமற் பாடுபட்டு உழைத்தான்.

ஒரு நாள் பழைய பாஸ்தன்நகரத்தில் நேர்மையின்றி நெளிவாயிருந்த வீதிகள் மார்க்கம் போம்பொழுது, ஸ்பானிய கப்பல் ஒன்று பஹமாஸ் கடலில் சேதப்பட்டதென்றும், அதில் ரொக்கம் அதிகம் உண்டென உத்தேசிக்கிறார்களென்றும் கடலோடிகள் சிலர் பேசிக்கொள்வது அவன் செவியில் விழுந்தது. அத்தக்ஷணமே, திரைகடல் ஓடும் ஆசை எனும் நெருப்பு நெஞ்சில் மூள, அவன் வேலைக்கு ஆவாரகளெனத் தன் எண்ணத்திற் பட்ட சிலரைக் காலதாமதமின்றிக் கடலோடிகளாய்ச் சேர்த்துக்கொண்டு, பஹமாஸுக்குப் பாய் எடுத்தோடினன். மரக்கலம் கடற்சேதப்பட்டது கரைக்

குக்கிட்டத்தான். அவன் அதை எளிதிற் கண்டு, அதில் ஏறிய சரக்கில் மூக்காலே மூன்று வீசம் அவனுக்கு அகப்பட்டது. ரொக்கம் கிட்டவில்லை. சென்ற செலவிற்கும் அகப்பட்ட பொருளுக்கும் சரி - மிச்சம் இல்லை. இல்லாதிருந்தும், நினைந்தபடி சாதித்துக் கைகண்டதனால், இந்தத் துறையில் இறங்கும் ஊக்கம் பின்னும் அதிகமாய்ப் பிறந்தது. ஐம்பது அறுபது வருஷத்திற்குமுன் போர்ட் டீ லா ப்லாத்தா துறைக்குக் கிட்ட மிகு திரளாய்ச் சரக்கேற்றிய மற்றொரு கப்பல் சேதப்பட்ட சங்கதி கேட்டபொழுது, முழுகிய அம்மரக்கலத்தைக் கிளப்ப வகை கண்டாற் கிளப்ப, அல்லது என்ன உபாயம் செய்தாயினும் ரொக்கத்தைக் குளித்து எடுத்துக் கொள்ள அவன் அத்தக்ஷணமே சங்கற்பம் செய்தான்.

ஆனாலும் திரவியபலமுள்ளவர்களால் உதவி பெற்றாலன்றி இம்முயற்சியைத் தன் தலைப்பாடாகத் தொடங்க அவன் கைப்பலம் போதாது. அவன் ஒரு ஏழை. திரவிய சகாயம் பெறலாமென்று இங்கிலாந்திற்கு யாத்திரை போனான். பஹமாஸ் கடலில் முழுகிய கப்பலைக் கிளப்பிச் சரக்கு எடுத்த சத்தம் அவன் போய்ச் சேருமுன்னமே இங்கிலாந்தில் எட்டியது. போய்ச் சேர்ந்தவுடன் நேரே சர்க்காருக்கு விண்ணப்பம் செய்தான். சர்க்கார் அதிகாரிகள் மனம் எளிதில் வணங்கி வழிக்கு வராது; அவனோ நினைந்த கருமத்தில் மிகவும் பக்தி சிரத்தையாயிருந்து வருந்தி வணங்கிக் கேட்டுச் சர்க்காரை உடன்படுத்தினான். இரண்டாவது சார்ல்ஸ் அரசன் கடைசியில் "ரோஸ் அல்ஜியர்" எனும் பதினெட்டுப் பீரங்கிக்கப்பல் ஒன்றும் கடலோடிகள் தொண்ணூற்றைந்து பெயரும் அவன் வசம் கொடுத்து அவனையே பிரதமமாலுமி ஆக்கினான்.

பின்பு பிப்ஸ் ஸ்பானிய கப்பலைக் கண்டுபிடித்து ரொக்கம் குளித்து எடுக்கப் பிரயாணப்பட்டான். அவன் ஹிஸ்பானியோலா கரையிற் சித்தயாத்திரையாகப் போய்ச் சேர்ந்

தான்; சேர்ந்தும் கப்பல் மூழ்கியிருக்கும் இடத்தைக் கண்டறிவது கஷ்டசாத்தியமாயிருந்தது. அது மூழ்கியது அப்பொழுதல்ல, ஐம்பது அறுபது வருஷத்திற்கு முன்னே மூழ்கியதென்று பரம்பரையாகப் பிறந்த சத்தம் ஒன்றொழிய அவன் முயற்சிக்கு இலக்கு மற்றொன்றும் இல்லை. அந்தக் கரையோ வெகு விசாலம்; கடற்பரப்போ விஸ்தாரம். அதில் இவ்விடத்தில் எங்கேயோ கடலடித்தரையில் அந்த வியாபாரக் கப்பல் மூழ்கிப் போயிருந்தது. அது எவ்விடமென்று நிதானிக்க அறிகுறி ஒன்றும் இல்லை. இம்முயற்சி தொடங்கிய மனுஷன் இந்தச் சங்கடத்தை எண்ணிப் பின்னிடையச் சபலசித்தனல்ல, வெகுதீரமும் கிளர்ந்த பொருள் ஈட்டுமெனும் நிறை மனவுறுதியுமுள்ளவன். அவன் கடலோடிகளைக் கொண்டு கரை நெடுகப் பாதாளக்கரண்டி விட்டு இழுப்பித்துச் சோதனைபார்த்தான். எத்தனையோ வாரம் அவர்கள் இவ்வகையில் வாரிவாரி வெளிப்படுத்தியவைகள் கடற்பூண்டும் வண்டற்பொடியும் பாறைப்பொடியுமே. கடலோடிகளுக்கு இதைக்காட்டிலும் அலுப்பு மற்றொன்று இல்லை. அவர்கள் ஒருவர்க்கொருவர் முறுமுறுக்கவும், எவனோ மடையன் சொன்ன சொல்லை நம்பி மாலுமி தம்மை இங்கே கொண்டுவந்தானென்று காதோதவும் ஆரம்பித்தார்கள்.

முறுமுறுத்தவர்கள் காயாத் தலைப்பட்டு எல்லாரும் வெளிவெளியாய்க் கலகம் செய்ய ஆரம்பித்தார்கள். ஒருநாள் சிலர் பத்துக்கட்டாய்த் திரண்டு கப்பலின் மேற்தட்டில் ஆக்கிரகத்துடன் போய் யாத்திரையை அம்மட்டில் நிறுத்திவிட வேண்டுமென்று கேட்டார்கள். ஆனாலும் பிப்ஸ் அவர்கள் வெருட்டலுக்கு அஞ்சி அதிர்கிறவன் அல்லவே. அவர்களைத் தலைவனாக் கைதுசெய்து மற்றவர்களைத் திரும்பிப் போய் வேலையைப் பாருங்களென்று அனுப்பிவிட்டான். மருதயார்க்க வேண்டியிருந்ததனால், கப்பலை ஒருசிறு தீவுக்கரைக்குக் கிட்டச் செலுத்திக் கொண்டுபோய் கரைய

போட்டு நிறுத்தினார்கள். பாரத்தைக் குறைக்கும்படி சாமக்கிரி முதலியவைகள் பாதிக்கு அதிகம் கரையில் இறக்கப்பட்டன. கடலோட்டிகளுக்கு மனக்குறை பின்னும் அதிகரித்தது. ஆகவே, கரையேறிய கடலோடிகள் கப்பலைக் கைவசப்படுத்தி பிய்ஸைத் தூக்கிக் கடலிற் போட்டுவிட்டு, தென் சமுத்திரத்தில் எதிர்ப்படும் ஸ்பானியர் சொத்தைக் கடற்கொள்ளையாடப் புறப்படும்படி அதுணமாகச் சர்ப்பனை சூழ்ந்தார்கள். இதற்குத் தச்சுமேஸ்திரி உதவி இல்லாமல் தீராது. ஆனதுபற்றி, அந்தச் சர்ப்பனை உபாயத்தை அவனுக்குச் சொல்லிவைத்தார்கள். அவர்களைப்போல் அவன் சாமித்துரோகி அல்ல, தாமசமின்றி மாஹுயிக்கு விளையும் விக்கினத்தை விவரமாய் வெளியிட்டான். அது கேட்டு மாஹுயி பிப்ஸ் துரோகிகளல்லவென்று அறிந்தவர்களைத் தன் கிட்ட வரவழைத்து வைத்துக்கொண்டு, கப்பலில் கரைமுகமாய் வைத்திருந்த பீரங்கிகளைத் தாணிப்பித்து, கரையேறும்படி கப்பலினின்று போடுவித்த தொங்கு பாலத்தைத் தூக்கிபோடக் கட்டளையிட்டான். இறக்கிய சாமான எல்லாம் கரையில் வைத்தபடி இருந்தன. கலகபக்ஷத்தார் வெளிப்படவும், மாஹுயி அவர்களைக் கூப்பிட்டு, சாமானுக்குக் கிட்டப் போனால் உங்களைச் சுட்டுக்கொல்வேன் என்றான், — இவ்வாக்குப் பிறக்க, அவர்கள் பின்னிட்டார்கள்; பீரங்கித்துணையைச் சார்ந்து மாஹுயி இறக்கிய சாமான்களை மீளவும் ஏற்றுவித்தான். அந்தப் பாழ்த்தீவில் தம்மை அகதிகளாக விட்டுப் போய்விடுவாரென்று அஞ்சி அதிர்ந்து ஆயுதங்களைக் கைவிட்டு, திரும்பி வந்து கப்பலில் வேலைசெய்ய இடம் தரவேண்டுமென்று வருந்திப் பிரார்த்தித்தார்கள். பிரார்த்தனைப்படி இடம் கிடைத்தது. பின்னும் அவர்கள் ஆரம்பாட்டம் ஆடாவண்ணம் முன்னாடியே எற்கும் உபாயம் எல்லாம் செய்யப்பட்டன. செய்தும், கலகம் செய்தவர்களை பிப்ஸ் நாட்பட வைத்திருக்கவில்லை. சமயம் பார்த்துக்கொண்டிருந்து அவர்களைக் கரையில் இறக்கிவிட்டுப் பிற

ளை அவர்களிடத்திற்கு வைத்துக்கொண்டான். ஆனால், மீளவும் கடலை விரைந்து சோதித்துப் பார்க்கத் தொடங்குமுன் கலத்தைப் பழுது பார்க்கும்படி இங்கிலாந்திற்குப் போகாமல் தீராதென்று கண்டான். ஸ்பானிய ரொக்கக்கப்பல் முழுகியது கடலில் இன்ன இடத்திலென்று அவன் அப்பொழுது முன்னிலும் அதிக திட்டமாய் அறிந்திருந்தான். அந்நாள்வரையிற் கருமம் சிதறியும், தொடங்கின பெரு முயற்சி எந்நாட் சென்றும் கடைத்தேறுமென்று அப்பொழுது அவன் அதிக உறுதியாய் நம்பியிருந்தான்.

லந்தனுக்குத் திரும்பிப்போய் பிப்ஸ் யாத்திரைசெய்து கண்ட சித்தியை மரக்கல விசாரணைச்சபைக்கு அறிக்கை செய்தான். அவன் முயற்சிவரலாறுகளைக் கேட்டுச் சந்துஷ்டியானோமென்று சொல்லியும், போன கருமம் முடித்து வாராததனால், அவனை நம்பி மற்றொரு ராஜ கலம் கொடுப்பதில்லையென்று அவர்கள் மறுத்தார்கள். அப்பொழுது சிங்காதனாதிபதி இரண்டாவது ஜேம்ஸ். அரைத்தனத்தார்க்குச் செலவிற்கு ரொக்கம் இன்றி மிகு முட்டு உண்டாயிருந்தது. ஆனதுபற்றி, பிப்ஸ் கைக்கொண்ட நற்கருமத்திற்கு உதவும்படி வருந்திக் கேட்டும், பயனில்லாதே போயிற்று. அப்பால், வேண்டும் ரொக்கம் குடிகளிடத்தில் சம்பாதிக்கும்படி பார்த்தான். ஆரம்பத்தில் அவனைக் கேலிபண்ணினார்கள்; கேலிபண்ணினார்களென்று அவன் கொண்டது கைவிடவில்லை. ஓயாமல் வருந்திப் பரிந்து கேட்கக்கேட்க, அவர்கள் மனம் உடன்பட்டது. நாலு வருஷ காலம் தரித்திரதசையில் நாள் கழித்து, பெரியோர் - செல்வாக்குடையோர் செவிக்குக் கேட்டுக்கேட்டு அலுப்பு உண்டாகுந்தனையும் அவன் எடுத்த கருமத்தை ஓதி ஓதிக் கடைசியில் ஒருபடி அவர்களை வசப்படுத்தினான். இருபது பங்கு வைத்து நிதி சேர்க்கும்படி ஒரு சங்கம் ஏற்பட்டது. இதில் முக்கியமாய் மனம் களித்து இவ்வருமுயற்சியை முடிக்கச் செல்லும் சொ

க்கத்தில் அதிகம் கொடுத்தவர் மாங்கு தளபதி புத்திராகிய அல்பிமார்ல் ட்யூக் பட்டவர்த்தனர்.

போலியைப்போல பிப்ஸுக்கும் நினைந்த கருமம் சிதறாமற் சித்தித்தது இரண்டாவது பயணத்தில். கப்பல் ஆபத்து விபத்தின்றி லாபிலாத்தா துறையிற் போய்ச் சேர்ந்தது. அதன் அயலிடத்திலேயே முன் கப்பல் சேதப்பட்ட பார்த்தொடர் இருக்கிறதென்று உத்தேசிக்கப்பட்டது. பிப்ஸ் முதலில் தன் கையால் வாய்ச்சி எடுத்து வேலை செய்துமுடித்தது எட்டு பத்து தண்டு வலிக்கும் பரிமாணமுள்ள பலமான ஓடம் ஒன்று. அன்றியும், கடலடித்தரையைச் சோதிக்கும்படி குளிமணி என்பதைப்போலும் யந்திரமும் ஒன்று செய்தானும். அவ்வகை யந்திரம் முற்காலத்தில் உண்டெனப் புஸ்தகங்களிற் குறித்திருக்கின்றது. புஸ்தகங்களில உள்ளது பிப்ஸுக்கு எப்படித் தெரியும் – அவன் புஸ்தகங்களைக் கண்டறிந்தவன் அல்லவே. முன் ஒருவர் செய்ததுபோல, அவனும் அதைத் தன் கருமத்திற்கு உதவும்படி யூகித்து உண்டாக்கினானென்று சொல்லலாம். அமெரிக்க இந்தியரில் சமுத்திரத்தில் முக்குளித்து முத்துச் சிப்பி முதலிய விலைபொருள் எடுத்து வரும் திறத்தில் சிறந்தவர்கள் உண்டு. ஆனதுபற்றி, அந்தக் குளிகாரர் சிலரை அவன் சேவகத்தில் அமைத்து வைத்துக்கொண்டான். ஓடத்தையும் கைப்பரிசையும் பார்த்தொடர் அண்டை கொண்டுபோய் நிறுத்தி, கடலோடிகளை வேலை தொடங்க ஏவினான். குளிமணி இறக்கப்பட்டது. கடலடியில் அடைக்கலங்களை வாரி இழுத்து வெளியிடும் நாலுவகைக் கருவிகளும் பல வாரமளவும் கை ஓயாமற் பிரயோகிக்கப்பட்டன. பிரயோகித்தும், சித்தி உண்டாமென எவ்விதத்திலும் தோன்றவில்லை. ஆனாலும், பிப்ஸ் கருமத்தைக் கைசோரவிடாது திரமாய்ச் செய்துகொண்டுவந்தான்; காரியசித்தி உண்டாமென்று எண்ண இடம் இல்லாதிருந்தும் அவன் மனம் எண்ணித் துணிந்தது. எத்தனையோ நாள் சென்றபின் ஒரு நாள் கடலோடி ஒருவன்

ஓடத்தின் ஒரு பக்கத்தில் நிர்மலமாயிருந்த நீரினூடே கடலடித்தரையை உற்றுப்பார்த்துக்கொண்டிருக்கையில் ஏதோ விநோதமான கடற்பூண்டு ஒன்று பாறையின் ஒரு சந்தில் முளைத்து வளர்ந்திருப்பதுபோல் அவன் கண்ணுக்குத் தட்டியது. இந்திய குளிகாரன் ஒருவனை அழைத்து அதைக் காட்டிக் குளித்து எடுத்துக் கொண்டுவந்து தரச் சொன்னான். மேனி சிவந்த அந்தக் குளிகாரன் இறங்கிக் கடற்பூண்டைப் பறித்துக் கொண்டுவந்து, அவ்விடத்தில் கப்பற் பீரங்கி அனேகம் இருக்கிறதென்று சொன்னான். ஆரம்பத்தில் அவன் சொல்லை எவரும் நம்பவில்லை. மேற்சோதனைபார்த்த அளவில் அது மெய்ப்பட்டது. குளிகாரர் குளித்துச் சோதித்து, ஒருவன் அடிக்குள்ளே கனத்த வெள்ளிச் சலாகை ஒன்று கொடுங்கையிற் கொண்டுவந்தான். பிப்ஸுக்கு அதைக் காட்டினார்கள். கண்டவுடன், அவன் "நாம் எல்லாரும் மனுஷராய் விட்டோம் - இது தெய்வம் செய்த உபகாரம்!" என ஆனந்தாவேசத்துடன் சொன்னான். குளிமணி இறங்கிக் குளிகாரர் இறங்கி மனம் பொருந்தி உழைக்க ஆரம்பித்தார்கள். சில தினத்திற்குள் மூன்று லக்ஷம் பௌண்ட் வரையும் திரவியம் அகப்பட்டது. பிப்ஸ் அதைக்கொண்டு இங்கிலாந்திற்குத் திரும்பினான். திரும்பிப்போய்ச் சேர்ந்ததன்மேல், முன்பு பிப்ஸ் இம்முயற்சிக்குத் துணை நிற்கும்படி அரசனைப் பிரார்த்தித்தபொழுது காரியத்தின் மர்மத்தை உள்ளபடி சொல்லாததனால், கப்பலையும் சரக்கையும் பறிமுதல் செய்யும்படி மந்திரிகள் பிரதானிகள் அரசனைத் தூண்டினார்கள். அதற்கு அதிபதி, பிப்ஸ் சத்தியவந்தன் - இது நமக்குத் தெரியும் - திரவியம் இம்மாத்திரம் அல்ல, இதின் இரட்டி கொண்டுவந்தாலும் அது முழுமையும் அவனும் கூட்டாளிகளும் விபாகித்து எடுத்துக்கொள்ளவேண்டும் என மறுமொழி சொன்னார். பிப்ஸுக்கு வந்த பங்கு ஏறக்குறைய 20,000 - பௌண்ட். இந்தப் பெருமுயற்சியை அவன் மிகு ஊக்கத்துடன் உண்மையாகச் சாதித்ததுபற்றித் தமக்கு உண்டான சந்

துஷ்டியை வெளியிடுமாறு அதிபதி நைட் பட்டம் சூட்டி அவனைக் கௌரவப்படுத்தினார். அன்றியும் அவனுக்கு நியூ இங்கிலாந்தின் சிரேஷ்ட தர்மாதிகாரி உத்தியோகமும் படிந்தது. அவன் அவ்வுத்தியோகம் நிர்வகித்துவரும் காலத்தில் தன் பூர்வ தேசத்திற்கும் அங்கே குடியேறினவர்களுக்கும் சத்துருவாகிய பிரான்சியர்மேல் போர்ட் ராயல் - க்விபெக் எனும் இடங்களுக்குப் படையேறிப் பிரபல சேவகம் செய்தான். மேலும் அவன் மாஸெசூஸெத்ஸ் கவர்னர் உத்தியோகமும் நிர்வகித்தான். பின்பு அங்கிருந்து இங்கிலாந்திற்குத் திரும்பிப்போய் 1695-ம் வருஷம் லந்தன் நகரத்தில் காலஞ்சென்றான்.

பிற்காலத்தில் பெரும்பாலும் பிப்ஸ் தன் பூர்வ இழிவை வெட்கித்து மறைக்காமல் வெளிவெளியாய்ச் சொல்வான். ஆதியில் சாமானிய மரக்கல ஓடாவியாயிருந்து வரவர உயர்ந்து நைத் பட்டம் பெற்றதையும் ஒரு பிரதேசத்திற்கு அதிபதியானதையும் பிப்ஸ் மிக்க பெருமையென்று உள்ளூற நினைந்து கொண்டாடினான். ராஜகாரிய நிர்வாகத்தில் ஏதும் தடுமாற்றம் உண்டாம்பொழுது அவன் வாய் அகன்ற கோடரிவேலைக்கு மீளவும் போய்விடுவது இதை விடச் சுலுவாயிருக்குமேயென்று சொல்வான். அவன் நேர்மையும் நிஷ்கபடமும் தேசாபிமானமும் நிரமுமுள்ளவனென்று பின்னோர் குறிக்கொள்ளும்படி இருந்து இறந்தான். இது அவன் வமிசத்திற்கெல்லாம் பரம்பரையாயுள்ள மேலான சொத்தென்பது வாஸ்தவம்.

லான்ஸ்டௌன் குடும்பம் உற்பத்தியானது உவில்யம் பெற்றி (William Petty) என்பவனாலே. அவனும் தன் காலிய் பிப்ஸைப்போல மனவலியுடையோனும் உலகத்திற்கு உபகாரியுமாயிருந்தவனே. அவன் ஹம்ஷயர் மாகாணத்து ராம்ஸி நகரில் ஈனதசையில் இருந்த நெய்வான் ஒருவனுடைய மகன். ஜன்மகாலம் 1623 - இளமையில் அவ்வூர் இலக்கண பாடசாலையில் அவன் ஒருவாறு கற்று விற்பத்தி

படைத்தான். அதன்பின் ஜர்மன்டியில் உள்ள கேயென் சர்வகலாசாலையில் சேர்ந்து தெளிவுபெற நிர்ணயித்துக் கல்வி பயின்றான். பயின்றுவரும்பொழுது ஜீவனத்திற்குத் தகப்பனார் கையைப் பாராமல் சிறுகச் சரக்கு வாங்கித் தெருவிற்குத் தெரு கொண்டு திரிந்து விற்றுப் பிழைத்தான். இங்கிலாந்திற்குத் திரும்பியபின், கப்பல் மாலுமி ஒருவனிடத்தில் தொழில் பயில ஏற்பட்டான். அம்மாலுமி கண்கூர்மை இல்லையென்று ஒரு நாள் அவனை வடத்தின் முடிச்சால் அடித்தான். பின்பு கப்பற் சேவகத்தை வெறுத்துவிட்டு அவன் வைத்தியம் கற்க ஆரம்பித்தான். பரீஸ் நகரில் இருக்கும்பொழுது அவன் பிரேத சேதனம் செய்துவருவான். அப்போது திருஷ்டி வித்தியாகிரந்தம் எழுதிக்கொண்டுவந்த ஹாப்ஸ் என்பவருக்கு அதில் அச்சிடுவதற்கு அவன் க்ஷேத்திரங்களும் சித்திரித்துக் கொடுத்தான். வரவரத் தரித்திரதசையில் அவனுக்கு வெகு வருத்தம் உண்டாயிற்று. இரண்டு மூன்று வாரம் உண்டி * பீலுக்காய் தவிர மற்றொன்றும் அகப்படவில்லை. திரும்பவும் சிறுக வியாபாரம் செய்யத் தொடங்கிப் பொய் களவின்றித் தேடும் அற்ப லாபத்தைக் கொண்டு காலம் கழித்தான். அடுத்துச் சிறிது காலத்திற்குள் கையில் மடியில் சிறிது ரொக்கத்துடன் இங்கிலாந்திற்குத் திரும்பிப்போய்ச் சேர்ந்தான். புத்தி யந்திர நுட்பங்களிலும் பிரவர்த்தித்ததனால் அவன் எழுத்துப் பார்த்தெழுதும் யந்திரம் ஒன்று உண்டாக்கி அதிகார பத்திரம் பெற்றுக்கொண்டதாகத் தெரியவருகிறது. அவன் விக்கியானத்துறையிலும் சாஸ்திரத்துறையிலும் கிரந்தம் எழுத ஆரம்பித்தான். ரசாயன வித்தையும் வைத்தியமும் செய்து அபூர்வ சித்தி அடைந்து விரைவில் மிக்க பிரக்கியாதி பெற்றான். அவன் சாஸ்திர பண்டிதர்களுடன் கூடிச் சாஸ்திர அபிவிர்த்திக்குரிய சங்கம் ஒன்று ஸ்தாபிக்கும் உபாயத்தைப்பற்றிப் பேசிட்டுவந்

---

* பீலு—Walnut.

தான். அவ்விளஞ் சங்கத்தார் ஆரம்பத்தில் கூட்டம் கூடியது அவன் இறங்கியிருந்த விடுதியில். அவன் அக்ஸ்போர்டில் சிறிது காலம் அங்காதிபாத வித்தியாபண்டிதர் சகாயனாக ஏற்பட்டான். அங்கசேதனம் செய்வது அவன் மனதிற்கு மிகவும் வெறுப்பாயிருந்தது. 1652-ம் வருஷம் அவன் அயர்லாந்தின் ராணுவவகுப்பில் வைத்தியனாக நியதி பெற்று அங்குப் போனான். அவ்வுத்தியோகம் அவன் முயற்சியின் பயனாக அமைந்தது. அங்கிருக்கையில், முதலில் லாம்பர்ட், அப்புறம் ப்லீட்வுட், அதன்மேல் ஹென்றி க்ராம்வெல் இம் மூவரும் லார்ட் லெவ்தினெந்து அதிகாரம் நிர்வகித்துவரும் நாளில் அவன், அவர்களுக்கு வைத்தியனாக ஏற்பட்டான். குடிகளின் கைகடந்துபோன பூஸ்திதி விஸ்தாரமாக ப்யூரிட்டன் வர்ணத்து ராணுவ வீரருக்குக் கொடுக்கப்பட்டது. அந்நிலத்தை அளந்தவர்கள் சரியாய் அளந்து கணக்கு வைக்கவில்லை. அதைப் பார்த்திருந்த பெற்றி பல வேலையோடு வேலையாக நிலம் அளக்கும் வேலையையும் தானே செய்யத் தலைப்பட்டான். வரவர அவனுக்கு உத்தியோகங்கள் பெருகி வருமானம் அதிகரித்தது. பரிதானம் வாங்கினானென்று மாத்சரியத்தால் சிலர் அவன் பேரிற் குறை கூறி உத்தியோகத்தினின்று விலக்குவித்தார்கள். ஆனால், மீளவும் ஏகாதிபத்தியம் நிலைப்பட்ட பொழுது அவனுக்கு ராஜதயை கிடைத்தது.

பெற்றி அனுப்பற்று உபாயம் சூழ்வதிலும், யந்திரம் நிர்மாணிப்பதிலும், கைத்தொழில் முயற்சி ஏற்படுத்துவதிலும் மிஞ்சினவன். அவன் யூகித்தியற்றியவைகளில் ஒன்று காற்றுக்கும் அலைக்கும் எதிரேறிச் செல்லும் இரட்டை அடிமரக்கலம். சாயம் தீரும் வித்தை - மானுஷிசாஸ்திரம் - ஆட்டுரோமச் சவளிநெசவு - ராஜநீதி கணிதம் எனும் துறைகளிலும் மற்றனேகம் துறைகளிலும் அவன் புஸ்தகம் எழுதிப் பிரசுரம் செய்தான். இரும்புத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தினான், ஈயக் கனிகளைக் கண்டு அகழ்வித்தான்,

ஒரு வகை மச்சம் பிடிப்பிக்கத் தொடங்கினான், தறிமர
வியாபாரம் ஆரம்பித்தான். இவ் வேலைகளோடு வேலையாக
ராஜசங்கத்தில் சாஸ்திரவிஷயம் பேசித் தெளியவும் அவ
காசம் கண்டு பெரும்பாலும் பிரபந்தம் எழுதி அனுப்பிக்
கொண்டுவந்தான். அவன் மக்களுக்குத் தேடிவைத்த
திரவியம் அதிகம். அவனுடைய ஜேஷ்ட புத்திரனுக்கு
ஷெல்பார்ன் பரன் பிரபு எனப் பட்டப்பெயர் அமைந்தது.
அவன் எழுதிய மரணசாதனம் அதிசயமானது. அதில்
அவன் ஜன்மப் பிரகிர்தி விசித்திரமாய் விளங்கியது;
அவன் காலத்தில் நடந்த முக்கிய சங்கதிகளும் வரவர
அவனுக்கு யோகதசை உண்டாய் விர்த்தியான வரலாறுக
ளும் அமைந்திருக்கின்றன. தரித்திர தசையைப்பற்றி
அவன் வெளியிட்ட அபிப்பிராயம் நாலு பெயர் அபிப்பிரா
யத்திற்கும் வேறுபாடாயிருந்தது. அவன் மொழிந்த இர
ண்டொரு வாக்கியங்கள் இவை:— “தரித்திரருக்கு ரொக்
கம் வைப்பதைத்தொட்டு என் மனம் சலிப்புற ஒரு நிலை
யாய் நிற்கின்றது. குலவிர்த்தியாகவும் எளிதிற் பிழைக்
கும் வழியென நினைந்தும் யாசிப்பவர்களுக்கு நான் ஒன்
றும் கொடுக்கிறதில்லை; தெய்வ அமைப்பால் கூன் குருடு
சப்பாணிகளாக உடம்பெடுத்தவர்களை ஆதரித்து வரு
வது ஊரார் பாரம்; பொருள் இல்லாதவர்களாய்ப் பிற
ந்து பிழைப்பிற்கு உதவும் தொழில் ஒன்றும் பயிலாதிரு
ப்பவர்களை அவர்கள் இனத்தார் ஜனத்தார் தலைச்சுமை
யாக விட்டுவிடவேண்டும். வறிஞராகிய என் இனத்தார்
யாவருக்கும் உதவி புரிந்தேன். வெகு பெயருக்குப் பிழை
க்க வழி காட்டிவிட்டேன்; ஊருக்கு உதவும் கட்டட முய
ற்சியில் உழைத்தேன்; யூகித்து இயற்றிய யந்திரம் முதலிய
வைகளால் தர்மத்திற்கு இலக்காயுள்ளவர்கள் இன்னொ
ன்று தேடிப் பிடித்தேன். ஆனதுபற்றி என் மனம் ரமி
த்திருக்கின்றது. என் சொத்து அனுபவிக்கும் யாவரும்
அப்போதைக்கப்போது, தமக்கு என்ன விக்கினம் வரினும்

அதைப் பாராட்டாமல், நான் செய்தபடி செய்யக் கற்பிக்கிறேன். ஆனாலும், தேசாசாரத்திற்கு ஒப்ப நால்வருக்கும் இணங்க நடக்கும்படி, என் ஊரில் ஒன்றுக்கும் வழி இல்லாத ஏழைகளுக்கு இருபது பௌண்ட் கொடுக்கிறேன்"—அவன் பிரேதம் ராம்ஸி நகரத்தில் உள்ள சிங்காரமான பூர்வாலயத்தில் அடக்கஞ்செய்யப்பட்டது. அவன் ஏழைக்குடும்பத்திற் பிறந்தது அந்நகரத்திலேதான். அவ்வாலயத்தில் பாடகர் ஸ்தானத்திற்குத் தென்பாரிசத்தில் இந்நாள்வரையும் இருக்கின்ற சிங்கார அலங்காரம் ஏதும் இல்லாத சிலையில் கல்லாத சிற்பி ஒருவன் வெட்டிய "இங்கிருப்பவர் ஸ்ரீ உவில்யம் பெற்றி" எனும் வாக்கியத்தைக் காணலாம்.

யுக்தியாக நூதன உபாயம் சூழ்ந்து வாணிகம் செய்து நமது காலத்திற் பிரபுப்பட்டம் பெற்ற மற்றொரு குடும்பம் பெல்பர் ஊரைச் சேர்ந்த ஸ்திரத் குடும்பம். அந்தக் குடும்பத்திற்குப் பிரபுப்பட்ட முத்திரை அமைந்தது 1758-ம் வருஷம், ஜெடிடையா ஸ்திரத் என்பவனால், விலாவுள்ள பாதகோசம் செய்யும் யந்திரம் யூகித்து உண்டாக்கித் திரவிய வருவழிக்கு அடிகோலியபொழுது. அவன் பின்னோர் அவ்வருவழியால் திரவியத்தை வரவரப் பெருக்கி நல்ல துறையில் உபயோகப்படுத்தினார்கள். அந்த ஜெடிடையாவுடைய தகப்பனுக்குப் பிழைப்பு விவசாயமும் சாராயம் வடித்து விற்றலும். அவன் பிள்ளைகளுக்கு வித்தை கற்பிக்கும் முயற்சி செய்யவில்லை; செய்யாதிருந்தும், அவர்கள் எல்லாரும் சீருக்கு வந்தார்கள். அவர்களில் ஜெடிடையா இரண்டாவது புத்திரன். சிறு பருவத்தில் அவன் பயிர்வேலையில் தகப்பனுக்குக் கையாளாக இருந்தான். இளைஞனாயிருக்கும்பொழுதே அவன் விவேகம் யந்திரம் - தொழிற்கருவி முதலியவைகளிற் பிரவர்த்தித்ததெனத் தோன்றியது. அக்காலத்தில் கிருஷிகர் வழங்கிய தொழிற்கருவிகள் மட்டித்தரமானவைகள். அவன் சில கருவிகளைத் திருத்தி நயமாக்கினான். நார்மாக்

தனுக்குக் கிட்ட பலாக்வால் எனும் ஊரில் கழனி சிறிது வெகு காலம் அந்தக் குடும்பத்தார் கைப்பற்றியிருந்தது. சிற்றப்பன் இறந்துபோக, அக் கழனி ஜெடிடையாவின் கைவசப்பட்டது. அடுத்துச் சிறிது காலத்திற்குள் அவன் ஒரு பெண்ணை மணம் புரிந்தான். அந்தப் பெண் டெர்பியில் பாதகோசம் பின்னி விற்றுப் பிழைக்கும் உலாலத் என்றொருவன் மகள். அவள் சகோதரன் விலாப்பொருத்து வகுத்துப் பாதகோசம் பின்ன ஏதேதோ எத்தனங்கள் செய்தும் ஒன்றும் வாய்க்கவில்லையென்று அவனுக்குச் சொன்னான். மற்றவர்களால் சாதிக்க முடியாதுபோனதைத் தான் சாதிக்கும் அபிப்பிராயத்துடன் அத்தொழில் செய்யும் வகையை அவன் நுழைந்தறிய ஆரம்பித்தான். பாதகோசத்தறி யொன்று சம்பாதித்துப் பார்வையிட்டு அதன் உரு அமைதியையும் அது இயலும் வகையையும் தீரத்தெளிய அறிந்துகொண்டபின், அவன் அதற்கு நூதன உறுப்புகள் சேர்த்துச்சேர்த்துச் சோதனைசெய்து, தறியின் மட்டித்தரமான வேலைப்பாட்டை விலக்கிச் சில நுணுக்கமான விகார உறுப்புகளைச் சேர்த்து விலாப்பொருத்துள்ள பாதகோசம் செய்யும் வகையைக் கண்டறிந்தான். அறிந்து, பிழையறத் திருத்திய புது யந்திரத்திற்கு அதிகாரபத்திரம் பெற்றுக்கொண்டு, குடி எழுந்துபோய் டெர்பியில் வாசஞ்செய்து விலாப்பொருத்துப் பாதகோசம் விஸ்தாரம் செய்து விற்று விசேஷ திரவியம் சம்பாதித்தான். பின்பு ஆர்க்ரைட் இயற்றிப் பிரயோகித்து வந்த நெசவு யந்திரத்தின் காரியத்தை மெச்சி அவனுடன் பங்கு கூடி, உபாயமாய் அவனுடைய அதிகாரபத்திரத்தைக் கைவசப்படுத்தி, டர்பிஷியர் மாகாணத்தில் க்ராம்போர்ட் நகரத்தில் இடம் கொண்ட நெசவு யந்திரசாலை யொன்று ஸ்தாபித்தான். பங்குத்தொழில் செய்ய உடன்பட்ட காலம் கழிந்தபின், அவன் பெல்பருக்குக் கிட்ட மில்போர்டில் விஸ்தாரமான நெசவு யந்திரசாலைகளை ஏற்படுத்தினான். அந்தப் பிரதிஷ்டையைப்பற்றியே இப்பொழுது அக்குடும்பத்திற்கு

அவலூர்ட்டெயர் அடையாக வழங்குகின்றது. ஜெடிடையா ஸ்திரத்தைப்போல் அவன் பிள்ளைகளும் யந்திர விவேக சாமர்த்தியத்தாற் சிறந்தவர்கள். மூத்த மகன் உவில்யம் ஸ்திரத் நூல் நூற்கும்படி தற்பிரயோக யந்திரம் ஒன்று யூகித்து நிர்மாணித்தானும். அது சித்தியாகாமற்போனது அவன் குறையல்ல, காலக்குறை. அக்காலத்தில் அந்த யந்திரம் செய்யத் தக்க புத்தி எவர்க்கும் இல்லை. உவில்யம் ஸ்திரத் உடைய குமாரன் எட்வார்ட் யந்திரம் அமைப்பதில் சிறந்த யூகி. சிறு பருவத்திலேயே வண்டிகளுக்கு உதவும் தொங்கு சக்கர விதியை அவன் விவேகத்தாற் கண்டறிந்தான். அவ்விதியை அனுசரித்து ஒற்றைச் சக்கரவண்டி ஒன்றும் இரண்டு சக்கரவண்டி இரண்டும் அவன் செய்வித்து பெல்பருக்குக் கிட்டத் தன் வயலில் வைத்து வழங்கினான். ஸ்திரத் குடும்பத்தார் தலைமுறைதோறும் கைத்தொழில் முயற்சியாலும் சாமர்த்தியத்தாலும் சம்பாதித்த திரவியத்தைத் தேசத்திற்கு அநுகூலமாய் மேலான துறைகளில் உபயோகப்படுத்தினார்கள்; தங்கள் வேலைகாரர் வரவர நாகரிகத்தில் திருந்தி நல் வழிப்படத்தக்க நானா வழி வகையும் நாடிச் செய்தார்கள்; நற்கருமம் அனைத்திற்கும் தாராளமாய்த் தனம் கொடுத்துதவினார்கள். இதற்குப் பல திர்ஷ்டாந்தங்கள் உண்டு. அவற்றில் ஒன்று டெர்பி நகரத்தில் உள்ள சிங்காரவனம் ஒன்றை ஜோஸெப் ஸ்திரத் அந்நகரக் குடிகளுக்கு சர்வ கால சுதந்தரமாக எழுதிக் கொடுத்தது. விலையேறப் பெற்ற இப்பூதானம் செய்த சமயத்தில் அந்த ஸ்திரத் சுருக்கச் செய்த பிரசங்கத்தின் முடிவுரையை யாவரும் நினைத்துக்கொள்ளத் தகுமென்று இங்கெடுத்துக் காட்டுகிறோம்:—"உள்ள நாள் எல்லாம் தன லக்ஷ்மி என் பெயரில் திர்ஷ்டி வைத்திருப்பதனால், திரவியம் சம்பாதிக்கத் தேக சிரமப்பட்டு எனக்கு உதவிய என் ஊராருக்கு மேலு மேலும் க்ஷேமம் உண்டாம்படி அந்தத் திரவியத்திற் சிறி

து செல்விடாதிருப்பேனானால் நன்றிகெட்ட பாவி ஆயப்போவேனே.”

தற்காலத்திலும் முற்காலத்திலும் தரையிலும் கடலிலும் பராக்கிரமம் செய்து பிரபுப்பட்டம் சம்பாதித்த தைரிய புருஷர் வெகு பெயர் கைத்தொழில் முயற்சியிலும் மனோற்சாகத்திலும் மேற்சொல்லிய ஸ்திரத் முதலியவர்களுக்கு இளைத்தவர்களல்ல. பூர்வ காலத்தில் ராணுவ சேவகம் செய்துவர உடன்பட்டு உம்பிளிக்கைக் கிராமங்கள் சம்பாதித்த பிரபுகள் அங்கிலேயருக்கும் மறு தேசத்தாருக்கும் மூண்ட பெருஞ்சண்டைகளிற் பெரும்பாலும் படைமுகத்தில் தளபதிகளாகி நின்று நிர்வகித்தார்கள். அவர்களை எடுத்துச்சொல்ல நிமித்தம் இல்லை. இராணுவ சேவகம் அவர்களுக்குக் குலவிர்த்தியாயிருந்தது. பிற்காலத்திலும் பிரபல சேவகம் செய்து உயர்பதம் பெற்றவர்கள் நெல்ஸன் (Nelson), ஸேந்து வின்ஸெந்து (St. Vincent), லையன்ஸ் (Lyons), உவெலிங்தன் (Wellington), ஹில் (Hill), ஹார்டிஞ்ஜ் (Hardinge), க்ளைட் (Clyde), இவர்களன்றிப் பின்னும் அனேகர் உண்டு. ஆனாலும் இதர துறைகளைக்காட்டிலும் கௌரவமான நியாயவாதம் செய்யும் துறையிற் சிரமப்பட்டு ஓயாமல் உழைத்தவர்களையே அவ்வுழைப்புப் பெரும்பாலும் குலமக்கள் பதவியிற் கொண்டுபோய்ச் சேர்த்தது. பிரபுப்பட்டம் பெற்ற பிரித்தானியரில் குறையாமல் எழுபது பெயர் நியாயவாதம் செய்து சித்தி பெற்ற தர்மவித்தியா நிபுணர்—அவர்களில் இருவர் ட்யூக் பட்ட வர்த்தனர். மான்ஸ்பீல்டும் (Mansfield) எர்ஸ்கைனும் (Erskine) குலத்திற் பிறந்தவர்கள் என்பது மெய்யே; ஆனாலும், தமது குடும்பத்தில் ஒருவராவது பிரபுப்பட்டத்திற்கு வந்தது தமக்குத் தெரியாதென்று எர்ஸ்கைன் இந்த நன்றிக்காக ஈஸ்பரனைத் துதித்துவருவார். * இவ்விருவரன்றி,

---

*மான்ஸ்பீல்டு பெற்ற பிரதிஷ்டை இன்றும் குலமக்களாகிய பந்துக்களால் அவர்க்கு அமைந்ததல்ல. அவர்கள் வறிஞர்,

மற்றவர்களிற் பெரும்பாலார் சிலர் நியாயவாதிகள் புத்திரர், சிலர் பலசரக்குக்கடைக்காரர் குமாரர், சிலர் குருமைந்தர், சிலர் வியாபாரிகள் புதல்வர், சிலர் பாடுபட்டுப் பிழைக்கும் மத்தியம தரத்தோர் மக்கள். ஆதியில் நியாயவாதிகளாயிருந்து பிரபுப்பட்டம் பெற்றவர்கள் ஹௌஅர்ட் (Howard), காவெண்டிஷ் (Cavendish), ஏல்ஸ்போர்த் (Aylesford), எல்லென்பரோ (Ellenborough), கில்ட்போர்ட் (Guildford), ஷேப்ஸ்பரி (Shafesbury), ஹார்ட்விக் (Hardwicke), கார்டிகன் (Cardigan), க்லாரொண்டன் (Clarendon), காம்டென் (Camden), எல்லெஸ்மீயர் (Ellesmere), ராஸ்லின் (Rosslyn). இப்பொழுது கொஞ்சக் காலத்திற்குமுன் பிரபுப்பட்டம் பெற்ற நியாயவாதிகள் தெந்தர்டென் (Tenterden), எல்டன் (Eldon), ப்ரௌஹம் (Brougham), டென்மன் (Denman), த்ரூரோ (Truro), லிண்ட்ஹர்ஸ்த் (Lyndhurst), ஸேந்து லெனார்ட்ஸ் (Leonards), க்ரான்வொர்த் (Cranworth), காம்பெல் (Campbell), செல்ம்ஸ்போர்ட் (Chelmsford).

லிண்ட்ஹர்ஸ்த் பிரபுவின் பிதா ஓவியம் எழுதி விற்றுப் பிழைத்தவர்; ஸேந்து லெனார்ட்ஸின் தகப்பன் வாசனைத் திரவியங்கள் விற்றும் மயிர் கத்தரித்தும் பிழைத்தவர். பரி

செல்வாக்கு இல்லாதவர்கள். அவர்பெற்ற சித்தி இடையறாமற் பிரயோகித்துவந்த சாதனங்களால் விளைந்த முறைமையான பயன். சிறு பருவத்தில் அவர் ஸ்கொத்லாந்திலிருந்து லண்டனுக்கு மட்டக்குதிரை ஏறிப்போய்ச் சேர இரண்டு மாசஞ் சென்றது. முதலில் கிராமப் பாடசாலையிலும் அப்பால் உயர்ந்த வித்தியாசாலையிலும் கற்றுத் தெளிந்தபின் நியாயவாதத் தொழிலிற் பிரவேசித்தார். அதில் மனப்பனத்தைப்பற்று ஓயாமல் உழைத்து வரவர உயர்பதவிகள் பெற்று ஒருங்கடைசியில் இங்கிலாந்தில் சிரேஷ்ட நியாயாதிபரானார்— இப்பதவிக்குரிய கர்மங்களை அவரினும் மிக்க திறமை பூண்டு நடுநிலை தவறாமல் அபிமானத்துடன் சாதித்தவர் இல்லை.

கைகொடுத்து யோக்கியதாபத்திரம் பெற்றுச் சொத்து விக்கிரயசாசனம் எழுதும் உத்தியோகம் நிர்வகித்த மெலஸ்க்ரும் துரையிடத்தில் இளம்பருவத்தில் ஏவின ஏவல் கேட்டுத் திரிந்த எட்வார்ட் ஸக்டெனுக்கு (Edward Sugden) முதல் முதல் தர்மசாஸ்திரத்தைப் பற்றி ஏதும் தெரிய வந்தது அந்தச் சேவகத்தில் இருக்கும்பொழுதே: பின்னாளில் அவர் அயர்லாந்தின் அரசாட்சி வகுப்பிற் பிரதம பதவி பெற்றார். காலஞ்சென்ற தெந்தர்டென் பிரபு (Lord Tenterden), பூர்வம் எவரினும் ஈனஸ்திதியில் இருந்தவர் போலும். அவர் அந்த ஸ்திதியை நினைந்து நாணினவரல்ல; இடைவிடாது முயன்று கல்வி கற்றுச் சலிப்பற உழைத்ததனாலேயே தமக்கு மேலான பதவி அமைந்ததென்று அவர் நெஞ்சு அறியுமே. ஒரு சமயத்தில் அவர் தமது மகன் சார்ல்ஸை ஒரு குடிசைக்கு அழைத்துக்கொண்டுபோய், கந்தர்புரித் தேவாலயத்தின் மேற்கு வாசலுக்கு எதிர்முகமாய் நின்று, மகனுக்கு அந்தக் குடிசையைக் காட்டி, "சார்ல்ஸ், இச்சிறு குடிசையை உனக்குக் காண்பிக்கத்தான் உன்னை இங்கு அழைத்துவந்தேன். இது உன் பாட்டனார் தலைக்கு நாலு துட்டு கூலி வாங்கிச் சவரம் செய்து பிழைத்த குடிசை. எனக்கு இதனிலும் மிக்க பெருமை வேறில்லையென்று எப்பொழுதும் நினைந்துவருகிறேன்" என மொழிந்தாரென்று அவரைக்குறித்து ஒரு கதை சொல்லியிருக்கின்றது. சிறு பருவத்தில் தெந்தர்டென் பிரபு தேவாலயத்தில் ஞானகீர்த்தனை பாடப் பயின்றுவந்தார். பயின்றுவரும்பொழுது ஒன்றை நினைந்து ஏமாறியதுபற்றியே அவர் அந்தத் தொழிலைக் கைவிட்டு வேறு தொழிலில் பிரவேசிக்க நேர்ந்தது. பிற்காலத்தில் அவரும் ரிச்சார்ட்ஸ் நியாயதிபரும் அங்கங்கே கூடிப்போய் வியாச்சிய விசாரணை செய்துவரும்பொழுது ஒரு சமயத்தில் அந்தத் தேவாலயத்தில் ஆராதனைக்குப் போயிருந்தார்கள். இருக்கையில் ஞானகீர்த்தனை பாடப்பட்டது. பாடகர் தலைவன் குரலை ரிச்சார்ட்ஸ் நியாயதிபர் வியந்துபேசினார். அது

கேட்டு, தென்தர்டென்பிரபு "ஆ! இவன் ஒருவனைத் தவிர எனக்கு மற்றெவரிடத்திலும் பொறாமை உண்டானதில்லை! இந்நகரப் பள்ளியில் இருக்கும்பொழுது, தேவாலய பாடகன் ஒருவன் இடம் காலியாயிற்று. நானும் இந்தப் பாடகனும் அவ்வேலை கேட்டோம். அது இவனுக்குப் படிந்தது" என்றார்.

குறும்புத்தன்மையுள்ள கென்யனும் பிண்டனுமிருந்த எல்லென்பரோவும் மேற்குறித்த சிரேஷ்ட நீதிபதிப் பதவி பெற்ற அதிசயம் முன் சொல்லியதைக் காட்டிலும் குறைந்ததல்ல. கொஞ்சக் காலத்திற்குமுன் இங்கிலாந்தின் சிரேஷ்ட நீதிபதியாகிப் புத்திக்கூர்மை உள்ளவரென்று குறிக்கொள்ளப்பட்ட கம்பெல் பிரபு மேற் சொல்லியவர்களுக்குக் குறைந்தவரல்ல. அவர் பீப்ஷியர் மாகாணத்தில் ஒரு கோவிற்பற்றுக் குருவின் புத்திரர். அவர் நியாயவாதி ஆகும்படி முயன்று தர்ம சாஸ்திரம் கற்றுவருகையில், சமாசார பத்திரிகைகளுக்குச் சங்கதி எழுதி அனுப்பிக்கொண்டுவந்தார். வெகு வருஷகாலம் அதுவே அவர் பிழைப்பு. நியாயவாதம் செய்யத் தொடங்கியபொழுது சிறிது காலம் தபால்வண்டி வைத்துப் போக நிர்வாகமின்றி, கோர்ட்டு கூடிய நகரங்கள்தோறும் கால்நடையே போய்த் திரிந்தார். ஆனாலும், எந்தெந்தத் துறைகளையும் போலத் தர்ம சாஸ்திரத்திலும் மன்வலி குன்றாமல் வியக்கத் தகுமாறு முயற்சி செய்துகொண்டுவருவோர் அடையும் மேன்மையும் கனமும் படிப்படியாகத் தாம் உயர உயர அவருக்கு அமைந்தன.

மேற்சொல்லியவர்களைப்போல் அத்தனை மனவலியோடு உழைத்து கனத்துடன் கீர்த்தி எனும் மலை ஏறிச் சாதித்த லார்ட் சான்ஸெலர் எனும் தரத்து நீதிபதிகள் பின்னும் சிலரைத் திருஷ்டாந்தமாய் எடுத்துக் காட்டலாம். காலஞ்சென்ற எல்டன் பிரபுவின் (Lord Eldon) சரித்திரம் விசேஷமாய் வியக்கத் தகுமவைகளில் ஒன்று. அவர் நியு

சாலிஸில் நிலக்கரி வியாபாரி ஒருவனுடைய மகன். சிறு பருவத்தில் அவருக்குக் குறும்புத்தனம் மிகுதி. பாடத்தில் சிந்தனை இல்லை; பள்ளிக்கூடத்தில் அவர் சோம்பரிற் பெருஞ்சோம்பன். தோட்டங்களில் நுழைந்து கனிவகை திருடுவது அவருக்கு மிகவும் கொண்டாட்டம். இவ்வதிக்கிரமத்திற்காக அவர் உடம்பில் உறைக்க வெகு அடி பட்டவர். தகப்பன் முதலில் அவரைப் பலசரக்குக் கடைக்கு அனுப்பி வாணிகம் பயிற்றுவிக்க நினைத்தான். பின்பு, தன் சொந்தத் தொழிலில் வழக்கப்படுத்த முக்காலே மூன்று வீசம் தீர்மானித்தான். இப்படி இருக்கும் சமயத்தில், அக்ஸ்போர்டில் வித்தியா வெகுமதிச் சம்பளம் பெற்றுக்கொண்டுவந்த மூத்த மகன் உவில்யம் (இம்மகனுக்குத் தான் பின்னாளில் ஸ்தோனல் பிரபு எனப் பெயர் வழங்கியது) தகப்பனுக்குக் கடிதம் போக்கி, "ஜாக்கை என்னிடத்திற்கு அனுப்பவும், நான் அவனைச் சீருக்குக் கொண்டுவர மாட்டுவேன்" எனக் கேட்டான். அந்தப்படி தகப்பன் ஜெட இளைஞரை அக்ஸ்போர்ட்டுக்கு அனுப்ப, இளைஞர் தமயனுடைய செல்வாக்கினாலும் தமது பிரயாசையாலும் வித்தியாசம்பந்தாக இடம் பெற்றார். ஆனால் விடுமுறைக் காலத்தில் வீட்டில் இருக்கும்பொழுது, அதிர்ஷ்டவசம் தப்பி அவர் பெண்மையலில் விழுந்தார். அது அறுதியில் அவருக்கு அதிர்ஷ்டமாகவே முடிந்தது. நெறி நீங்கித் தம்முடன் ஓடிப்போன பெண்ணை ஊர் எல்லை தாண்டிக் கொண்டுபோய் அவர் மணம் புரிந்தார். அம்மணம் அவருக்கு உள்ள நான் எல்லாம் நாசமாக முடிந்ததென்று அவர் சுற்றமித்திரர்கள் எண்ணிவிட்டார்கள். விவாகம் முடிந்தபொழுது அவருக்குக் குடியிருக்க வீடுவாசல் இல்லை. நாலு துட்டாவது வருமானம் இல்லை. வித்தியா சம்பந்தமும் போக்கடிக்கப்பட்டது. அவரைக் குருத்தொழிலுக்கு யோக்கியராக்கும்படி அவர் பிதா குறித்திருந்தாரோ - அதற்கும் அபாத்திரரென்று அநேகர் சொல்லத் தம்மைத் தாமே கெடுத்துக்கொண்டார்.

ஆனதுபற்றி, அவர் சிந்தை தர்மவித்தையில் திரும்பியது. "சிந்தனையின்றி மணம் புரிந்தேன்; எனக்கு அன்பான மனைவியை அன்ன வஸ்திராதிகள் கொடுத்து ஆதரித்தற்கு வருந்தி உழைக்க நிர்ணயித்திருக்கிறேன்" என்று தம் இஷ்டர் ஒருவருக்கு அவர் கடிதம் எழுதினார்.

ஜான் ஸ்காட் லந்தனுக்குப் போய் ஒரு சந்தில் சிறு வீடு பிடித்து தர்மநூல் பயில அதில் வசித்தார். அவர் மிகவும் சுறுசுறுப்பாக நிர்ணயத்தோடு கற்றுக்கொண்டுவந்தார். பிரதிதினமும் அதிகாலையில் நாலு மணிக்கு எழுந்திருந்து இராத்திரி நாழிகை எழுந்தனையும் அவர் நூல் வாசித்த வண்ணமாயிருப்பார். தூக்கம் வராதபடி ஈரத்துவாலையைத் தலையிற் சுற்றிக்கொள்வது அவர் வழக்கம். சம்பளம் கொடுத்து நியாயவாதியிடத்தில் கற்க நிர்வாகம் இல்லாததனால், தீர்ந்த விவகாரக் குறிப்புக் கையெழுத்துப் பெரும் புஸ்தகம் மூன்றை அவர் பார்த்து எழுதினார். பின்பு வெகு காலம் சென்று லார்ட் சான்ஸெலர் பதவி பெற்றதன்மேல் ஒரு நாள் அவ்வீதி வழி போம்பொழுது, அவர் "நான் முதலில் இறங்கியது இந்த வீதியிலேதான். இராத்திரிக்குச் சமையலுக்குச் சிறு மீன் வாங்கக் கால் ரூபாய் கொண்டு இவ் வீதிமார்க்கம் எத்தனையோ நாள் சந்தைக்குப் போனது எனக்கு ஞாபகமாயிருக்கிறது" என விசிதருக்குச் சொன்னார். கற்றுத் தெளிந்து நியாயவாதிகள் வகுப்பிற் சேர்ந்தபின்னும் அவருக்கு வேலை அகப்பட நாட் சென்றது. முதல் வருஷம் அவர் சம்பாத்தியம் ஆக நாலரை ரூபாய். நாலு வருஷகாலம் ஒரு நாளும் தவறாமல் லந்தன் தர்மசபைகளுக்கும் வடக்கு வட்டாரத் தர்மசபைகளுக்கும் போய்வந்தார். அப்படி உழைத்தும் வருமானம் ஏறவில்லை. அவர் பிறந்த ஊரிலும் வழினர் வழக்கன்றி வேறு வழக்கு அவருக்கு அகப்படவில்லை. இதை நினைந்து மனமடிவுற்று லந்தனில் பிழைப்பு அகப்படுவது கஷ்டமென்று அங்கிருந்து விலகவும், விலகி நாட்டுப்புற

த்திற்குப் போய் ஒரு ஊரில் இறங்கி நியாயவாதம் செய்துவரவும் நிர்ணயித்தார். "ஜாக்கை நினைக்கப் பரிதாபமாயிருக்கிறது, அவனுக்கு வேலை மந்தகதியாய் அகப்படுகின்றது, மந்தகதியாயென்று வற்புறுத்திச் சொல்லலாம்" என அவர் சகோதரர் வீட்டாருக்குக் கடிதம் எழுதிவிட்டார், ஆனாலும், பலசரக்கு விற்க வந்தபொழுது அதையும், நிலக்கரித் தொழில் செய்வதையும், நாட்டுப்பக்கத்தில் குருத்தொழில் செய்வதையும் அவர் கடத்திவிட்டபடி, குட்பக்காட்டு நியாயவாதி ஆவதையும் விலக்கிவிட்டார்.

இருந்திருந்து கடைசியில் அந்த ஜான் ஸ்காட் கஷ்டப்பட்டு விஸ்தாரம் கற்றறிந்த தர்மவித்தியா சாதுரியத்தைக் காட்டச் சமயம் வாய்த்தது. ஒரு வழக்கில் அவர் நியாயவாதியாக ஏற்பட்டு, அவரை வைத்துக்கொண்ட கட்சிக்காரனுக்கும் அட்டர்ணிக்கும் பிரியம் இல்லாதிருக்கக்கொள்ளத் தர்ம நுட்பம் ஒன்றைத் தாண்டிவிட்டார். நீதிபதி வழக்கை அவருக்குப் பிரதிகூலமாகத் தீர்த்தார். அந்தத் தீர்ப்பின் பெயரில் அவர் பிரபுகள் சபையில் அப்பீல் வியாச்சியம் தொடர, தர்லோ பிரபு அசல் வழக்கில் ஸ்காட் தாண்டின தர்ம நுட்பத்தைச் சார்ந்தே அசல் தீர்ப்பை மாற்றினார். இந்தத் தீர்ப்புப் பிறந்து அன்று பிரபுகள் சபையினின்று ஸ்காட் வெளியே போம்பொழுது, ஸொலிஸிற்றர் நியாயவாதி ஒருவர் அவர் தோளில் தட்டி "தம்பீ, இருக்குமளவும் உனக்குப் பாலுக்கும் சோற்றுக்கும் இனி ஒரு நாளும் குறை இல்லை." என்று பாராட்டினார். அவர் தூரதிர்ஷ்டியாகக் கண்டு மொழிந்த அந்தச் சொல் தவறாமற் பலித்தது. வேலை அகப்படாதிருந்ததுமில்லை, வருஷ வருமானம் 30,000 ரூபாய்க்குக் குறைந்ததுமில்லை என மான்ஸ்பீல்ட் பிரபு தம்மைக் குறித்துச் சொன்னபடி, ஸ்காட்டும் சொல்ல நினைத்தால் சொல்ல மாட்டுவார். அவர் விரைவில் விர்த்தியடைந்தார். 1783-ம் வருஷம் அவருக்குப் பருவம் ஆக முப்பத்திரண்டு. அந்தப்

பருவத்தில் அவர் ராஜ நியாயதுரந்தரரானார்; வடக்கு வட்டகை நியாயவர்த்திகள் வகுப்பில் தலைவரானார்; ரீப்பிலி நகரத்தின் ஜனப்பிரதிநிதி ஆகிப் பார்லிமெந்து சபையிற் சேர்ந்தார். பாலிய காலத்தில் அலுப்புற்று இளைக்காமல் வருந்தி உழைத்த உழைப்பே பின்னிட்டு விளைந்த அதிசய சித்திக்கு அஸ்திவாரமாயிருந்தது. விடா முயற்சி செய்து, வித்[illegible]ற்றுச் சாதுரிய சாமர்த்தியங்களை வெகு ஜாக்கிரதையாய்ப் பண்படுத்திவந்ததனாலேயே அவருக்கு விசேஷ ஜயம் உண்டாயிற்று. அவர் அடுத்தடுத்து ஸொலிஸிற்றர் ஜெனரல், அற்றர்ணி ஜெனரல் எனும் உத்தியோகங்களில் அமர்ந்து வரவர உயர்ந்து கடைசியில் இங்கிலாந்தின் லார்ட் சான்செலர் எனும் பிரதம நீதியதிபர் பதவி பெற்று அதை இருபத்தைந்து வருஷகாலம் நிர்வகித்துக்கொண்டு வந்தார். கிரீடாதிபதியால் பிரஜைகளுக்கு அமையத் தக்க பதவிகளில் இதனினும் உயர் பதவி வேறு இல்லை.

ஹென்ரி பிக்கர்ஸ்டெத் (Henry Bickersteth) உவெஸ்த்மோர்லாந்து எனும் மாகாணத்தைச் சேர்ந்த கிர்பி லான்ஸ்டேல் நகரத்தில் ஒரு ரணவைத்தியர் குமாரர். அவரும் வைத்தியம் செய்து பிழைக்க வித்தை கற்றவர்தாம். எடின்பர்க்கில் வித்தியார்த்தியாக இருக்கையில் இடைவிடாது உழைத்ததனாலும், வைத்தியசாஸ்திர நுட்பங்களைச் சிரத்தையாய்ச் சிந்தை கூர்ந்து பயின்றதனாலும் அவர் யாவராலும் பெருஞ்சீட்டுப் பெற்றார். கற்றுத் தேறி கிர்பி லான்ஸ்டேலுக்குத் திரும்பிப் பிதாவுடன்கூட முயற்சியாய் வைத்தியம் செய்துகொண்டுவந்தார். ஆனால் வைத்தியம் அவர் மனதிற்கு உவக்கவில்லை. நாட்டகத்தில் வைத்தியருடைய அருமை பெருமையை அறிந்து மதிப்பவர் இல்லையே. இதை நினைந்து அவர் மனக்குறை அடைந்தும், சலித்துப் பின்னிடாமல் முயன்று தேறி, உடற்கூற்றின் உயர்ந்த துறைகளில் விஷயவிசாரணை செய்துகொண்டுவந்தார். அவர் விருப்பத்திற்கு இணங்க, பிதா அவனைக் கேம்பிரிட்ஜ் சர்வகலா

சபைக்கு அனுப்பச் சம்மதித்தார். லந்தன் ராஜதானியில் வைத்தியம் செய்யும்பொருட்டு ஷை சர்வகலாசபையில் வைத்தியபட்டம் பெற்றுக்கொள்வது அவர் தாற்பரியம். ஆனால் இதற்கு ஒரு தடை நேரிட்டது. விஷயம் அழுந்த மனம் குவிந்து வித்தை பயின்றதனால் அவர் தேகத்திற்கு அசௌக்கியம் உண்டாயிற்று. மெலிந்த உடலை மீளவும் பலப்படுத்தும்பொருட்டு, அவர் ஆக்ஸ்போர்ட் பிரபுவிற்கு நடைவைத்தியர் ஆகும் உத்தியோகத்தில் அமர உடன்பட்டார். அந்தப் பிரபுவுடன் தேசாந்தரம் போயிருக்கும் காலத்தில், அவர் இத்தாலிய பாஷையில் வல்லவரானார். இத்தாலிய இலக்கண இலக்கியங்களில் அவருக்கு வரவர விசேஷ பிரீதி உண்டாயிற்று. ஆனால் வைத்திய வித்தையில் விசேஷ வாஞ்சை இல்லை. அந்தத் தொழிலைக் கைவிடத் தீர்மானித்தார். ஆனாலும், கேம்பிரிட்ஜுக்குத் திரும்பியபின் பரீக்ஷைகொடுத்துப் பட்டம் பெற்றார். அவர் அவ்வருஷம் பரீக்ஷைகொடுத்துத் தெளிந்தவர்கள் வகுப்பில் முதல் மாணாக்கர். இவ்வரிய பரீக்ஷாபலம் அவர் வருந்தி உழைத்த உழைப்பிற்குத் திருஷ்டாந்தமென்று அனுமிதி செய்யலாம். அவர் ஆசைப்படி அவருக்கு இராணுவ வகுப்பில் உத்தியோகம் படியவில்லை. இப்படி ஏமாறியதனால், நியாயவாதி ஆக நினைந்து, தர்மமடத்தில் கல்வி கற்கப் புகுந்தார். வைத்திய நூலைப் போலத் தர்ம சாஸ்திரத்தையும் அவர் வருந்திக் கற்றார். அவர் தகப்பனாருக்கு எழுதிய கடிதத்தில், "அறுதியில் உனக்குச் சித்தி உண்டாவது நிசம், தொடங்கின முயற்சியை மாத்திரம் நிறுத்திவிடாமற் செய்துகொண்டுவா, என்று எல்லாரும் சொல்லுகிறார்கள். எப்படிக் கடைத்தேறுவேனோ எனக்குத் தெரியவில்லை அவர்கள் சொற்படி கருமம் சித்திக்குமென்று ஆமளவிற்கு நம்ப என் மனம் துணிகின்றது. என்னால் இயன்ற எத்தனம் ஒன்றும் செய்யாது விடேன்" எனும் வாக்கியங்களைக் காணலாம். அவர் கற்றுத் தெளிந்து நியாயவாதியானது இரு

பத்தெட்டுவயதில். அவருக்கு அப்பொழுது வீடுவாசல் ஆஸ்திபாஸ்தி ஒன்றும் இல்லை. அதன்மேல் அவர் சம்பாதித்தால் உண்டே தவிர மற்றப்படி அல்ல. ஜீவனத்திற்கு அவர் மிகவும் முட்டுப்பட்டார். சுற்றமித்திரர்கள் அவரை ஆதரித்துக்கொண்டுவந்தார்கள். அனேக வருஷகாலம் அவர் நூல்களை வாசித்து வாசித்துத் தமக்கு அதிர்ஷ்டம் பிறக்குமென்று பதைப்பற்றுப் பொறுத்திருந்தார். ஆனாலும் வேலை அமையவில்லை. காலக்ஷேபங்களிலும் அன்னவஸ்திராதிகளிலும் அவர் செலவை நெருக்கி வெகு அவஸ்தைப்பட்டார். ஆனாலும் மனம் சலிக்கவில்லை. வீட்டுக்கு எழுதி அனுப்பிய கடிதத்தில் "நான் நிலை கோலுவதற்கு எனக்கு யோகதசை திரும்பிச் சமயம் கிட்டுகிறவரையில் எப்படி உழைத்து உழலுவேனோ அறியேன்" என்று அறிக்கை செய்தார். அலுவல் அமையுமென்று அவர் மனம் பொறுத்து மூன்று வருஷம் காத்திருந்தும் அமையாததனால், தம்மை ஆதரிக்கும் பந்துகளுக்குக் கடிதம் எழுதி, இனி நான் உங்களுக்குப் பாரமாயிருப்பதிலும், நியாயவாதம் செய்யும் அபிப்பிராயத்தை விட்டுக் கேம்பிரிட்ஜுக்குப் போக விரும்புகிறேன். அங்கு எனக்கு ஜீவனாதாரமும் சிறிது லாபமும் அகப்படுவது நிசம் எனத் தெரிவித்தார். வீட்டார் அதற்குச் சம்மதிக்கவில்லை. பதைக்காதிருக்கச் சொல்லிப் பின்னும் சிறிது பணம் அனுப்பினார்கள். ஆனதுபற்றி அவர் கருமத்திற் கண்ணாயிருந்தார். வரவர, வியாச்சியங்கள் அகப்பட்டன. சில சிறு விவகாரங்களில் நியாயவாதியாக ஏற்பட்டுக் கெலித்ததனால் கட்சிக்காரருக்கு அவர் பெயரில் மதிப்பு உண்டாகி, அவர்கள் அவரை நம்பிப் பெரு வியாச்சியங்களில் வைத்துக்கொண்டார்கள். அவர் கிட்டிய சமயத்தைக் கைசோர விட்டதுமில்லை, முறைமைப்படி விர்த்தி உண்டாக்கும் ஏதுக்களை நழுவ விட்டதுமில்லை. அவருக்குத் தளரா முயற்சி இருந்ததனால், அதன் பயனாக விரைவில் அதிர்ஷ்டம் பிறக்கது. பின்னும் சில வருஷம் சென்றதன்மேல், வீட்டார்

உதவியின்றி, அவர் வருமானம் செலவிற்கும் கண்டு, வாங்கின கடனை வட்டியோடு கொடுத்துத் தீர்க்கவும் மிஞ்சியது. முன் பிழைக்க வகை தெரியாமல் அவனைச் சுற்றிக் கொண்டிருந்து மயங்குவித்த மேகபடலம் கலைந்து மயக்கம் தெளிந்தது. பிற்பாடு அந்த ஹென்ரி பிக்கர்ஸ்டெத்துக்குக் கனமும் தனமும் பெரும் புகழும் உண்டாயின. அவர் மாஸ்டர் அவ் தி ரோல்ஸ் எனும் உத்தியோகம் செய்து, பாரன் லாங்டேல் எனும் பட்டப்பெயர் சூடிப் பிரபுகள் சபையின் ஓர் அவயவம் ஆகிக் காலம் கடந்துபோனார். ஒருவன் பொறுத்துச் சலிப்பற முயன்று நெஞ்சறியத் தவறாது உழைப்பானானால் இச்சாதனை அவனை வரவர உயர்த்தி அவன் பட்ட சிரமத்திற்கு அணியாகப் பூரணசித்தி உண்டாக்கத் தக்க பலமுள்ளதாகும் என்பதற்கு பிக்கர்ஸ்டெத் உடைய சரித்திரமும் பல திருஷ்டாந்தங்களில் ஒன்றாம்.

பல விஷயங்களில் சாமானிய தரமாயிருந்தும், பிரவர்த்தி முயற்சி என்பவைகளின் வலிமையால் பராக்கிரமமுள்ளவைகளான குணங்களைச் சோர்பற அப்பியசித்து மானமாய் நாள் கழித்து வரவரத் தரம் உயர்ந்து அவரவர் துறையிற் பெரும்பயன் பெற்ற பிரபலரில் மேற்சொல்லியவர்கள் சிலரே.

அ-ட். அதிகாரம்.

ஊக்கமும் காரியமும்.

"அவர் செய்யத் தொடங்கிய எந்தக் கருமத்தையும் முழு மனதோடு செய்து விருத்தியடைந்தார்." 2. நாளாகமம் 31 - 21.

"நான் விக்கிரகங்களை நம்பவுமில்லை, பிசாசுகளை நம்பவுமில்லை. என் சொந்தத் தேகபலம் மனோபலம் இவ்விரண்டி

லுமே முழு நம்பிக்கை வைத்திருக்கிறேன்" என விருத்தராகிய உத்தரதேசவாசர் ஒருவர் வாக்கினின்று பிறந்ததாகச் சொல்லியிருக்கின்ற பெயர்பெற்ற வாக்கியம் அவர் ஜாதிப் பண்பை உள்ளபடி விளக்குகின்றது. பூர்வகாலத்தில் உத்தரதேசத்தார் வைத்து வழங்கிய குந்தாலி முடியில் "வழி இருந்தால் கண்டு பிடிப்பேன், இல்லாவிடில், புது வழி உண்டாக்குவேன்" என்று ஒரு நீதிவாக்கியம் எழுதியிருக்கும். இது இந்நாள்வரையில் அவர்கள் சந்ததியாரைக் குறிக்கொள்விக்கும் திண்மையான ஸ்வாதீனத்தை வெளியிடுகின்றது. ஸ்காந்தினேவியர் தெய்வம் அவர்கள் சம்மட்டியே. அவர்கள் புராணத்தின் தன்மையை இவ்வாக்கியத்திலும் அதிக வரையறையாய் வெளியிடுவது மற்றொன்று இராது. ஒருவன் குணம் குறிகளை அற்பகாரியங்களிற் காணலாம். சம்மட்டி அடிப்பவன் அதைக் கைவழங்கும் விதத்தைக் கண்டால் அவன் மனவலி இவ்வளவென்று ஒருவாறு அனுமிதி செய்யலாம். உத்தமராகிய பிரான்சிய துரைமகன் ஒருவர் தம் இஷ்டர் ஒருவரோடு வார்த்தையாடும் சமயத்தில், அவ்விஷ்டர் இன்ன ஊரிற் போய்ச் சஞ்சரித்துப் பூஸ்திதி சம்பாதிக்க நினைந்திருக்கிறேனென்று சொல்ல, அது கேட்டு, அவ்வுத்தமர் அவ்வூர் மனுஷருடைய குணம் குறிகளைப் பின் வருமாறு ஒரே ஒரு வாக்கியத்தில் அமைத்துக் காட்டினார்,—"அவ்வூரிற் கிரயத்திற்கு நிலம் வாங்குவதைப்பற்றி எச்சரிக்கையாயிரும். அங்குள்ளவர்களை அறிவேன். பரீஸ் நகரத்திற் குதிரை வைத்தியம் கற்க அங்கிருந்து வரும் வித்தியார்த்திகள் பட்டடையில் அழுந்தச் சம்மட்டியை நன்றாய் ஓங்கி அடிக்கிறதில்லை, அவர்கள் மனவலியற்றவர்கள். நீர் அந்நாட்டில் எவ்வளவு முதல் இடினும் அதற்குத் தக்க பயன் அடையப்போகிறதில்லை." எதையும் கருத்தாய்க் கவனிப்பவர்களுக்கு அடையாளம் குணம் குறிகளை நுணுக்கமாய் வழுவற மதிப்பிடுவது. ஒரு தேசத்திற் சிலருக்கு உள்ள மனவலி அத்தே

சத்திற்கெல்லாம் பலம் உண்டாக்கும்; அன்றியும் அவர்கள் பயிரிடும் நிலத்திற்கும் கிரயம் ஏறும். இதற்குத் திருஷ்டாந்தமாக, "பூமி திருத்தும் மனுஷர் பாட்டுக்குத் தக்க பயன் அதனால் விளையும்" எனப் பொருள்ள பாஷையில் ஓர் மூதுரை வழங்கும்.

மனவலியைப் பண்படுத்துவது மகோத்தமம்; ஏனெனில், தகுதியான கருமங்களைச் செய்து முடிப்பதின் திறம்பா மனவுறுதி அல்லது ஓர்ப்பு மெய்ம்மையான பெருந்தகைமை அனைத்திற்கும் அடிப் பீடமாயிருக்கின்றது. அலுப்பான பாடு பறப்பையும் மனதிற்கு இதமல்லாத அல்லல் அலைச்சலையும் வேகமாய் ஊடறுத்துச் செல்லும்படி, மனவலி என்பது எவனையும் வல்லவனாக்கி எத்தொழிலிலும் முந்தச் செலுத்தி உயர்பதம் அடைவிக்கும். விவேகத்திலும் மனவலி அதிகம் சாதிக்கும். விவேகிக்கு உண்டாம் பங்கம், கண்டம் இவைகளிற் யாதியும் மனவலியோனுக்கு இல்லை. செய்யும் கருமம் எதையும் சிதறாது சித்திக்கும்படி செய்வது அத்தனையும் சித்தமே தவிர உன்னத விவேகமல்ல, அருந்தொழில் முடிக்கத் தக்க பராக்கிரமம் மாத்திரமல்ல, ஊக்கத்துடன் தொடர்ச்சியாய் உழைக்கத் தக்க மனமுமே. ஆகவே, எவனெவனுடைய பெருந்தகைமைக்கும் மனவலியே பிரதான பலம் எனச் சொல்லலாம். பின்னும் சுருக்கிச் சொல்லில் மனவலி என்பது மனுஷனே. அது அவன் செய்யும் செயல் அனைத்திற்கும் உற்சாகமும், எத்தனிக்கும் எத்தனம் அனைத்திற்கும் ஜீவனும் கொடுக்கும். மெய்யான ஆசைக்கு அடிப்பரம் அது. இவ்வுலகில் உள்ளளவும் எவனுக்கும் பரிமளம் உண்டாக்குவது ஆசை. குடும்ப சின்னங்கள் சேர்த்து வைத்திருக்கும் ஓர் ஆச்சிரமத்தில் ஒடிந்த * சிரஸ்திராணம் ஒன்றில் "ஆசை எனது அரசு" எனும் மூதுரை வரைந்திருக்கின்றது. இதைப் பிரதி மனுஷனும் தனக்கு சிறுமொழியாக அனுசரித்துக்கொள்ளினும் கொள்

* சிரஸ்திராணம்—Helmet.

ளலாம். "நெஞ்சு இளைத்தவன் கெட்டான்" என்பது வைராக் மைந்தன் வாய்மொழி. மனவலியுடைமைக்குச் சமானமாகிய வரப்பிரசாதம் இல்லையே. மனவலியுடையோன் செய்யும் எத்தனம் வாய்க்காது போயினும், தன்னால் ஆமளவிற்கு நெஞ்சறிய முயன்றதை நினைந்து அவன் மனம் ஆறும். தாழ்ந்த ஸ்திதியில் இருக்கும் ஒருவன் பொறுமையைப் படைக்கலமாய்க் கொண்டு துன்பத்துடன் பொருது, மனநிறைவைப்பற்றி எக்களித்து, உதிரம் பெருகிக் கால் இரண்டும் துவள, மனோதிடத்தை இரு பாதமாய்க்கொண்டு நடப்பதைக் காண்பதினும் கண்ணுக்குச் சிறந்து மனதை மகிழ்விக்கும் காட்சி மற்றொன்றும் இல்லை.

இளைஞர் விரும்புவதை விரும்பியபடி தடையறச் செய்யாது விடுவார்களானால், அவ்வெறு விருப்பமும் வெற்றுரையும் அவர்கள் மனதிற்கு ஒரு வகைச் சோர்பு உண்டாக்கும். அனேகர் செய்யும் வண்ணம் "தனபதி வருமளவும்" சும்மா காத்திருப்பது உதவாது. ஆனால், அதன் இடையில், உவெலிங்தன் செய்ததுபோல் சிறிதும் விட்டுவிடாமல் சண்டை செய்துகொண்டுவரவேண்டும். நினைத்த நற்கருமத்தை நின்ற நிலையிற் பிரியாமல் உற்சாகத்துடன் செய்து முடிக்கவேண்டும். உலகத்தில் அனேக துறைகளில் பாடுபறட்டையும் தேகசிரமத்தையும் சுயக்ஷேமத்திற்கு உதவும் உத்தம நிலையென்று உல்லாசமாய் உத்தரிக்க வேண்டும். "இம்மையில் மனமும் மெய்யும் வருந்தி உழைக்கும் உழைப்பாலன்றிப் பயன்தரும் விர்த்தி ஒன்றும் இல்லை. விட்டுவிடாமல் மேலுமேலும் வருந்தி முயல்வதுதான் இவ்வுலக வாழ்வு. இவ்விஷயத்தில் என் கருமம் கூடி வந்திட்டது; ஆனால் என் தைரியம் ஒன்றுக்கும் அசையவில்லையென்று முறைமையான அபிமானத்துடன் சொல்லத் துணிகிறேன். உர நெஞ்சம் உன்னத அபிப்பிராயமுமுள்ளவன், யுத்தி அனுபவங்களைச் சார்ந்து சொல்லில், நினைத்த எதையும் முடிப்பான்" இது எரி ஷெப்பர் மொழிந்த வாக்கியம்.

ஹியு மில்லர் தாம் முறைமையாய்க் கல்வி கற்ற வித்தியாசாலை ஒரே ஒரு வித்தியாசாலையென்றும், அது "உடைப்புபாடு எனும் உத்தம பண்டிதர் கண்டிப்பாய்க் கல்வி கற்பிக்கும் உலகம் எங்கும் விசாலித்திருக்கின்ற வித்தியாசாலை" என்றும் சொன்னார். மனதின் முயற்சியைத் தள்ளாடித் தளர விடுவோன், அலைந்து அப்ப சாக்குச் சொல்லி வேலையைக் கடத்துவோன் அறுதியில் தவறு மற்ற கருமம் சிதறும் துறையில் இறங்கியிருக்கிறான். எவ்வகை வேலையையும் செய்யாமல் தீராதென்று எண்ணிச் செய்யத் தொடங்கினால் அது விரைவில் மனம் மகிழ்ந்து உல்லாசத்துடன் செய்து முடியும். ஸ்வேதன் தேசத்து 9-வது சார்ல்ஸ் மனுஷருக்குச் சிறு பருவத்திலும் சித்தசக்தி உண்டென்று உறுதியாய் நம்பினான். அவன் தன் கனிஷ்டபுத்திரன் கஷ்டமான பாடம் ஒன்று படித்துவரும்பொழுது அவனுடைய தலையைத் தொட்டு, "இவன் இதைப் பாடம் பண்ணவேண்டும்! இவன் இதைப் பாடம் பண்ணவேண்டும்!" என்று சொன்னான். மனக்கருத்துச் செலுத்தும் சாதனை மற்றுள்ள சர்வ சாதனைகளையும்போல வரவர எளிதாகும். இதற்கு ஒரு திருஷ்டாந்தம்,—மிக புத்தியுள்ளவர்களும் ஒரு காரியத்தைச் செய்யும்பொழுது வேறு நினைவின்றி அதிலே மனம் அழுந்தப் பிரவர்த்தித்து இடைப்படாது செய்துவருவார்களானால், எத்தனை எத்தனையோ காரியங்களைச் சாதிக்கமாட்டுவார்கள். சாமானிய சாதனங்களையும் அபூர்வ மனக்கருத்தையும் கொண்டு எத்தக் கருமமும் எளிதிற் சாதிக்கலாகுமென்று பௌவல் பக்ஸ்டன் (Powell Buxton) உள்ளுற நம்பினார். "உன் கைக்கு இடப்படுவது எது, அதை உன் முழுப் பலத்தோடும் செய்" என்ற கிறிஸ்து வேதத்தில் விதித்திருக்கின்ற கற்பனைக்கு அவர் கோட்பாடு திருஷ்டாந்தம் ஆயிற்று. "எந்தக் காரியத்தையும் செய்யும்பொழுது வேறு நினைவின்றி அவ்வொன்றிலேயே சிந்தை குவிந்து செய்ததனால்

தாம் செய்த கருமம் அனைத்தும் வாய்த்தனவென்று அவர் மொழிந்தார்.

செய்யத் தக்க அருந்தொழில் ஒன்றையும் நிரந்தரமு உழைக்காமற் செய்து முடிக்கக் கூடாது. மனுஷருக்கு விர்த்தி உண்டாவது முக்கியமாய் மனப்போராட்டத்தால். செய்யும் தொழிலில் பிரதிபந்தம் உண்டாம்பொழுது மனதிற்கும் அதற்கும் சண்டை நடக்கின்றது. அம்மனப் போராட்டம் உற்சாகம் எனப்படும். அசாத்தியமெனத் தோன்றும் காரியங்கள் உற்சாகத்தாற் பெரும்பாலும் சாதிக்கப்படுவதைக் காணும்பொழுது ஆச்சரியம் உண்டாகின்றது. சாத்தியமான ஒன்றை மனம் அழுத்தமாய் உற்று நினைத்தாலும் அந்தச் சாத்தியம் சத்தியமாய்விடும்; மின்-மழைக்கு முற்குறி ஆதல்போல, பெரும்பாலும் நமது விருப்பம் நாம் சாதிக்கக் கூடிய கருமங்களுக்கு முற்குறி ஆம். ஆனால், பயங்காளிகளுக்கும் இருமனமுடையவர்களுக்கும் எந்தக் காரியமும் அசாத்தியமாகத் தோன்றுவதனால் அவர்களாற் சாதிக்கக் கூடாதே போகின்றது. பிரான்சு தேசத்தில் வாலிப ராணுவ உத்தியோகஸ்தர் ஒருவர் "நான் பிரான்சிய ராணுவபதியும் பெருந்தகைமையுள்ள தளபதியும் ஆகாது விடேன்" எனச் சொல்லிக்கொண்டு தம் அறையில் உலாவி வருவாராம். அவருக்கு உண்டான இவ்வாசைப் பெருக்கம் பின்னாளிற் பெற்ற பிரபல கீர்த்தியை உணர்த்தும் முற்குறியாயிருந்தது; அவ்வாலிப உத்தியோகஸ்தர் குறிக்கொள்ளத்தக்க தளபதி ஆகி, பின்னிட்டுப் பிரான்சிய ராணுவபதியும் ஆகியே இறந்தார்.

'ஆதி' எனும் இரக்கம் இயற்றிய மெஸ். உவாக்கர் (Mr. Walker) தீர்மானபலத்தின்கண் மிகவும் அதிக நம்பிக்கை வைத்திருந்தார். நான் க்ஷேமமாயிருக்க தீர்மானித்தேன் - தீர்மானித்தபடி எனக்கு க்ஷேமம் உண்டாயிற்று என்று அவர் ஒரு சமயத்தில் சொன்னார். இந்த விதி ஒரு முறை வாய்த்தால் வாய்க்கும். பல விதிகளிலும் இதைத் தெரிவின்றி அனை

ரிக்கலாகுமாயினும் இது எப்பொழுதும் பலிக்காது. மனமா
னது தேகத்தின்மீது செலுத்தும் அதிகாரம் மிகுதியே—இத
ற்கு ஐயம் இல்லை. ஆனால், அதை மிதமிஞ்சி நெருக்கிப் பிர
யோகித்தால், அதற்கு ஆதாரமான தேகபலம் குன்றி நாச
மாய்ப்போம். ஓர் தளபதி ஆகிய மக்ஸி மொலக் என்பவன்
ஒரு அசாத்தியரோகத்தால் தேகபலம் நசுக்கிப் பாயும்
நோயுமாய்ப் படுத்திருக்கையில் அவன் சைன்யத்திற்கும் போர்
த்துகேயருக்கும் சண்டை நடந்தது. சண்டை வரவர நெரு
க்கிச் சண்டப்பிரசண்டமாய் நடக்கிற சமயத்தில் அந்
தத் தளபதி படுக்கையினின்று எழுந்து சேனாவீரரை ஒருங்
கு திரட்டிக் கொண்டுபோய்ப் பொருது ஜயம் பெற்றுத்
திரும்பியவுடன் களைத்து விழுந்து இறந்துபோனானாம்.

ஒருவன் எப்பெயர்ப்பட்டவன் ஆக, அல்லது என்ன செய
யச் சிந்தை வைக்கிறானோ அவனே அப்பெயர்ப்பட்டவனாக
அல்லது அன்னது செய்ய வல்லவனாக்குவது நிர்ணயம்,—
மனவலி. "நீ எப்படி ஆக விரும்புகிறாயோ அப்படி ஆவாய்;
ஏனெனில், நமது நிர்ணயமும் மிகுதி, அதனுடன் தேவநிர்
ணயமும் சேர்ந்தால், நாம் வேண்டும் நினைந்து பக்தி பூர்வ
மாய் என்ன பதவி பெற விரும்புகிறோமோ அன்ன பதவி பெ
றுவோம். இம்மைப் பொருந்த நடக்க, அடக்கமுடையோ
னாக, அல்லது யோகி ஆக விரும்பும் ஒருவன் அப்படி ஆகா
திருப்பதேன் — ஏனெனில், வேண்ட வேண்டுமென விரும்பாதது
னாலேதான். மாஜிஸ்டிரேட் அதிகாரி ஒருவருக்கு ஆசன
பீடம் பழுது பார்க்க அமர்த்தப்பட்ட ஒருவன் ஒரு நாள்
வெகு சிந்தனையாய் அதை வேலைசெய்யக் கண்டவர் எவரோ
இதற்கு ஏன் இத்தனை அக்கறை எனக் கேட்க, அத்தச்சன்
"நான் இவ்வாசனத்தில் உட்காரும் காலம் வரும்பொழுது
சொகுசாய் உட்காரும்படி இத்தனை கருத்துடன் பார்த்துச்செய்
கிறேன்" என்று உத்தரம் சொன்னதாகவும், அவன் சொற்
படி, இறக்குமுன், ஆச்சரியமான விதமாய் அவ்வாசனத்தி

லேயே வீற்றிருந்து மாஜிஸ்ட்ரேட் உத்தியோகம் நிர்வகித்த தாகவும் ஒரு கதை சொல்வார்கள்.

சித்தஸ்வாதீனத்தைப் பற்றித் தார்க்கிகர் கற்பித்திருக்கும் சித்தாந்தங்கள் எப்படி இருப்பினும் இருக்கட்டும். எவனும் தன் சித்தத்தின்படி நன்மை செய்தாலும் செய்வான்–தீமை செய்தாலும் செய்வான். இதற்குத் தடை இல்லை. அவனவன் தன்னை கர்மமென்னும் பெருங் கடலிற் போடும் அற்ப துரும்பென்றாவது, சித்திரமெழுதுங் காகித அல்லது ஒதுக்கி நிற்கும் இக்கில் ஆமளவிற்கு மிகு வல்ல பல தேகியென்று எண்ணுவான். இதற்கு அவரவர் மனம் சாக்ஷி. நமது சித்தத்திற்கு ஒருவிதமான தடை ஒன்றும் இல்லை. எதையும் செய்யும்படி நம்மை யந்திரபலத்தால் கட்டியிருக்கவில்லை. இது நமக்கு நன்றாகத் தெரியும்–இது நாம் அறிவோம். இப்படி அல்லவென்று நாம் எண்ணச் சம்மதித்தால், மேம்பாடு அடையும் விருப்பு எல்லாம் இழந்துபோம். சிக்ஷைகள், தேசாசாரக் கிரமம், சாதாரண ஏற்பாடுகள் இவைகளோடு கூடிய உலக வியாபாரம் எல்லாம் அவனவனுக்குச் சித்தஸ்வாதீனம் உண்டென மனம் தேறும் நம்பிக்கையின் பெயரில் நடந்துவருகின்றன. இது இல்லாவிடில், பாவம் பழிக்கு ஆளாகும் இயற்கை எங்கே? கல்வி கற்பித்தல், புத்தி புகட்டல், பிராயச்சித்தம், பிழை பொறுத்தல், தொழிலின் சிட்சித்தல் இவைகளால் பயன் என்ன? தேச சட்டங்களை மனுஷர் அவரவர் சித்த நிர்ணயப்படி கைக்கொண்டாலும் கைக்கொள்வார்கள், மீறினாலும் மீறுவார்கள். இந்த இயற்கை எத்தேசத்திலும் உண்டு—இதை எல்லோரும் ஒப்புவார். இப்படி இல்லாவிடில், தேச சட்டத்தினால் பயன் என்ன? நமது சித்தத்திற்கு ஸ்வாதீனம் உண்டென்று நமக்கு மனச்சாட்சி நிரூபித்துத் தோற்றும் கூறுகின்றது. சிரியாக நமக்குள்ள சொந்த சித்த ஸ்வாதீனம் ஒன்றே. அதை நல் வழியிற் செலுத்துவதும் தீ வழியிற் செலுத்துவதும் அவரவர்பாடே தவிர மற்றப்படி

யல்ல. நமது வாதனைகள், சோதனைகள் நமக்கு அல்ல, நாம் அவைகளுக்கு யஜமானர்கள். சோதனைக்கு இடங்கொடுக்கும் பொழுதும், இடங்கொடாமல் நிற்பினும் நிற்கமாட்டோமென்று ஜீவசாட்சி நமக்குச் சொல்லுகின்றது. அவைகளை மேற்கொள்ள நிர்ணயித்திருப்போமாகில், அதற்கு நமக்கு உண்டென நாம் அறியும் அளவிற்கு மிகுதியான நிர்ணயபலம் வேண்டுவதில்லை.

"நீ இப்பொழுது தீர்மானம் செய்ய வேண்டிய பருவம் அடைந்திருக்கிறாய். இன்னம் சிறிது காலம் போனால், நீயே வெட்டின பிரேதக்குழிக்குள் அகப்பட்டு அதை மூடிய கல்லைப் பெயர்க்க வலிமையின்றிப் புலம்ப நேரிடும். எதனினும் எளிதில் நமக்குச் சாதகமாவது நிர்ணயமே ஆதலால் பலமுறைத் தீர்ப்பாக நிர்ணயிக்கப் பழகு. பழுதை நீர்மேல் புணை போல மிதக்கும் உன்னை இனி அடிக்கிற காற்றுக்கெல்லாம் உலர்ந்த சருகென அங்கிங்கு எறியப்பட்டுப் போக விடாமல் ஓரிடத்தில் நிறுத்திக்கொள்" என்பதாக லாமென்னேஸ் என்பவர் ஒரு சமயத்தில் உல்லாசத்துணையுள்ள வாலிபன் ஒருவனுக்குச் சொன்னார்.

வாலிபன் திட நிர்ணயம் செய்து கைக்கொள்வானானால் விரும்பும் எதையும் சாதிப்பானென்று பக்ஸ்டன் மனம் தேற எண்ணியிருக்கிறார். அவர் தம் புதல்வன் ஒருவனுக்குக் கடிதம் எழுதி, "நீ வலமானாலும் இடமானாலும் ஒரு பக்கத்தில் இனித் திரும்பவேண்டும். இப்பொழுது உனக்கு அந்தப் பருவம் வந்துவிட்டது. நெறி அறியும் நிர்ணயமும் மனவலியும் உனக்கு உண்டென்பதற்கு இப்பொழுது உன்னிடத்தில் சாட்சி காணவேண்டும். அல்லாவிடில், நீ சோம்பலில் வீழ்ந்து மூழ்கி நிலை குலைந்து அலைந்து திறமையற்ற வாலிபனுக்கு உரிய பழக்கங்களையும், குணம் குறிகளையும் வருத்திக்கொள்வாய். அத்தனை இழிவில் வீழ்ந்தபின் எழுந்து சீர்ப்படுவது மெத்தவும் கஷ்டமென்று காண்பாய். வாலிபன் எவனும் தான் விரும்பிய பதவி அடையமாட்டான்,

இது நிசம். எனக்கு இப்படி வாய்த்தது. உன் பருவத்தில் என் நிலை மாறி உயர்ந்ததுபோதான் என் சுகத்தின் முன்னை லே மூன்று வீசமும் செல்வமுழுதும் உண்டாயின. மனைவியுடையோனும் முயற்சி செய்யப் பயபக்தியாய் நிர்ணயிப்பாயானால், இவ்வாறு நிர்ணயித்து நடந்தது புத்தியென்று உள்ள நாள் எல்லாம் கண்டுபிடித்து சுகபோகிக்க உனக்கு ஏது உண்டாம். இது நிலையென்று எண்ணிக்கொள்” என்பு புத்தி புகட்டினார். நிர்ணயத்தில் ஒரு துறை ஏற்பட்டு விட்டால் அது உறுதி - ஸ்திரம் - களியா முயற்சியே தவிர மற்றபடி அல்ல. ஆகவே, எக்காரிய முயற்சிக்கும் நேர்மையான துறையும் தாற்பரியமுமே முக்கியமென வெளிப்படையாகத் தோன்றும், விஷயபோகம் எனும் மார்க்கத்தில் சென்றால், பலத்த நிர்ணயம் பிசாசும், புத்தி சீர் கெட்டு அதைச் சேவிக்கும் தொழும்பனுமாம்; ஆனால், செம்மார்க்கத்தில் செலுத்தினால், பலமான நிர்ணயம் வேந்தனும், புத்தி மனுஷனுக்கு உன்னத சுகவாழ்வைப் பெருக்கும் தொண்டனுமாம்.

“மனம் உண்டானால் மார்க்கம் உண்டு” இது பூர்வ சத்திய வாக்கு. ஒன்றைச் செய்ய நிர்ணயிப்பவன் அந்த நிர்ணய சகாயத்தால் எதிரிடும் தடைகளைத் தாண்டி அதைத் தவறாமற் செய்து முடிப்பான், நாம் ஒன்றைச் செய்ய வல்லவர்களென்று எண்ணுவது முக்காலே மூன்று வீசம் வல்லவர்களாவதே - எதாயினும் ஒரு திறமை அடைய நிர்ணயிப்பது பெரும்பாலும் அது அடைந்ததுபோலாம். ஆகவே, மனம் கூர்ந்து செய்யும் சங்கற்பத்திற்கும் பெரும்பாலும் சர்வசக்தி இயற்கை உண்டெனத் தோன்றும். எவரோ என்பவனுடைய சக்திக்கு அவ்விவரம் அவனுடைய நிர்ணய பலமே. நிர்ணயவாதிகளின் பெரும்பாலனைப்போல் அவனும் அதை ஒரு வித்தையாகக் கொண்டாடிப் பிரவசனித்தான். செய்யத் தொடங்கின கருமத்தில் சித்தி பெறாதவர்களைக் கண்டால், அவன் “பாதிக்கு அதிக நிர்ணயம்

செய்ய உங்களால் ஆகாது" என்று சொல்வான். ரிச்லு, நப்போலியன் என்பவர்களைப்போல், அவன் "அசாத்தியம்" எனும் மொழியை அகராதியினின்று தள்ளிவிடுவது நலம் என்பான். "எனக்குத் தெரியாது," "என்னால் ஆகாது," "அசாத்தியம்" எனும் சொற்றொடர்களைச் சொற்களைப்போல அவனுக்கு வெறுப்பானவை மற்றொன்றும் இல்லை. "கற்றுக்கொள்! செய்! செய்துபார்!" என்று அவன் பரிவு கூர்ந்து சொல்வான். யாவர் மனதிலும் வித்துக்குள் மூளைபோல் மறைந்திருக்கும் அந்தக்கரணங்களை மனவலியோடு வெளிவருத்தி அப்பியசித்துவருவதனால் விளையும் பயனுக்கு அன்னைத்தக்க பூர்த்தியான திருஷ்டாந்தம் அவனேயென்று அவன் சரித்திரம் எழுதின ஆசிரியர் சொல்லுகிறார்.

"மெய்ஞ்ஞானம் என்பது நடத்தைக்குதவக் கூடிய ஞானமே." என்பது நப்போலியன் மனதிற்கு இதமான நீதி வாக்கியங்களில் ஒன்று. உரம் குன்றாத் திடநிர்ணயம் என்னென்ன அதிசயம் செய்யும் என்பதை முக்கியமாய் அவன் சரித்திரத்தில் மயக்கமறக் காணலாம். அவன் தேகபலம் மனோபலம் முழுவதையும் செய்யும் தொழிலில் அழுத்தும்படி பொறுப்பித்தவன். பராக்கிரமம் குன்றிய அரசரும் அவர்கள் ஆண்ட குடிகளும் அவனை ஒருவர் ஒருவராய்ப் பணிந்தார்கள். தளம் செல்லும் வழியில் ஆல்ப்ஸ் மலை தடையாக நேர்ந்ததென்று சொல்லக் கேட்டு, அவன் "ஆல்ப்ஸ் மலை ஒழிந்துபோகக்கடவது" என மொழிந்து, முன் போக வரக் கூடாதிருந்த காட்டுவழியிடையில் பாதை வெட்டுவித்துச் சாலையொன்று அநுதினமாக இயற்றினான். "அசாத்தியம் எனும் மொழியைப் பேதைகள் இயற்றிய அகராதிகளில் மாத்திரம் காணலாம்" என்று அவன் சொல்வான். அவன் மெய்வருத்தம் பாராமல் மிக வருந்தி உழைத்தவன். சில சமயங்களில் ஏககாலத்தில் நாலு லிகிதருக்கு வேலை கொடுத்து அவ [illegible]

டவில்லை, தானும் வினை ஒழிந்திருக்கவில்லை. அவன் உழைப்பைக் காணப் பிறருக்கு உற்சாகம் பிறந்தது. அவர்கள் கூட்டில் இருந்த பழைய உயிர் போய்ப் புது உயிர் புகுந்தது. "மண்ணுயிருந்தவர்களை அவ்வியற்கை மாறி என் தளபதிகள் ஆம்படி செய்தேன்" என்று அவன் மொழிந்தான். ஆனால் என்னென்ன செய்தும் ஒன்றும் பயன்படவில்லை. ஏனெனில், நப்போலியன் தன் சுயத்தை மிதமிஞ்சிக் கர்வித்துத் தானும் மிக்க பிரான்ஸ தேசத்தையும் அநேக ஸ்திதிக்குப் பங்கமாக விட்டு நலிவித்தான். அதிகாரம் மிகு மனவலியோடு நிர்வகித்தாலும் சுகிர்தம் இல்லாவிடில், அதிகாரிக்கும் அதிகாரத்தின் கீழ்ப்பட்டவர்களுக்கும் நாசகரமாமென்றும், அறிவு சற்குணம் இல்லாவிடில் தீமைக்கு வித்தாவதன்றி மற்றப்படி அல்லவென்றும் அவன் சரித்திரத்தால் அறியலாம்.

அங்கிலேய தளபதி ஆகிய உவெலிங்தனே நப்போலியனினும் வெகு தூரம் பெரிய மனுஷன். நிர்ணயத்திலும் உறுதியிலும் கைக்கொண்ட கருமத்தை விடாமற் சாதிப்பதிலும் உவெலிங்தன் நப்போலியனுக்கு இளைத்தவரல்ல; தம்மைத் தாம் வெறுப்பதிலும், மனச்சாக்ஷிக்கு இணங்க நடப்பதிலும் கபடமற்ற தேசாபிமானத்திலும் அவர் மிஞ்சினவர். நப்போலியனுக்கு இலக்கு "மகிமை", சொல்லைப்போல் உவெலிங்தனுக்குக் குறிப்புச்சொல் "செய்கடன்", மகிமை எனும் பதம் உவெலிங்தன் எழுதிய பத்திரங்களில் ஓரிடத்திலும் வரக் காணோம்; செய்கடன் எனும் மொழி பெரும்பாலும் வருகின்றது; ஆனால் தன்மேம்பாடு உரைக்கும் மொழிகளுடன் ஒருபொழுதும் சேர்ந்து வரவில்லை. தாக்கரிய பெரும் இடர் தடை முதலியவைகளைக் கண்டு உவெலிங்தன் மனம் கலங்கவுமில்லை, அஞ்சவுமில்லை. அப்போதைப்போது சேர்ந்த தடைகளை இடர்களை மேற்கொள்ளத்தக்கதாக அவர் மனவலி அதிகரித்தது. பாசறையிருந்து நீட யுத்தம் செய்த காலத்தில் சேர்ந்த இண்டாட்டங்களும் மிகு

போல வந்த வினைகளும் சாமானியமா-அவை எவ்வகை அருந்திறமுடையோரையும் புத்தி கலங்கிப் பித்தங் கொண்டவர்கள்போல் ஆக்கிவிடும். உவெலிங்தன் பதறுமற் பொறுத்த உறுதியும் சித்தநிர்ணயமுமுடையவராகி அவைகளை உத்தரித்தது சரித்திரத்தில் விளங்கும் விசேஷ அதிசயங்களில் ஒன்று. ஸ்பானியாவில் தளபதிக்குரிய சாமர்த்திய மாத்திரமல்ல மந்திரிக்குரிய தந்திரம் அனைத்தும் உவெலிங்தனிடத்தில் விளங்கின. அவர் முற்கோபியாயினும், செய்கடனைச் சிரமேற்கொண்டு பாராட்டியதனால், கோபத்தை எளிதில் அடக்கவல்லவர் ஆனார். அவருடன் நெருங்கிப் பயின்றவர்களுக்கு அவர் குன்றாத பொறையுள்ளவரெனத் தோன்றியது. ஆசைப்பெருக்கம், பணப்பித்து முதலிய இழிகுணம் எதுவும் பெருந்தகைமையுள்ள அவர் பெயருக்கு வசையாய் ஏற்படவில்லை. அவர் ஒரு துறையிலேயே முக்கியமாய்ச் சிறந்த பிரபலரானுலும், அவரிடம் பற்பல வரங்கள் விளங்கின. அவர் தளபதித் திறமையில் நப்போலியனுக்குச் சமானர்; சலியாது தவறுமற் செய்கடன் முடிப்பதிலும் விக்கிரமத்திலும் துணிவிலும் க்லைவை ஒத்தவர்; அறிவு முதிர்ந்த அமைச்சுத் திறத்தில் க்ராம்வெலுக்கு நிகரானவர்; இயக்கத்திலும் பெருமித நிலையிலும் உவாஷிங்டனைப்போன்றவர். மகாபிரபலராகிய உவெலிங்தன் இறந்தும் அவர் புகழ் அழியாது நீடித்து நிற்கின்றது. அப்புகழுக்கு அஸ்திவாரம் மெய்வருந்திச் சிரமம் பாராமற் பல கடமைகள் செய்து, அவை வருக்கும் சாமர்த்தியத்தாலும், எதற்கும் இளைக்காத மனவலியாலும், மெய்யான துணிவாலும், ஒருபோதும் அசையாத மெய்ப்பாசுள்ள பொறையினாலும் வென்ற வெற்றியே.

சாதாரணமாய் மனவலி தோன்றுவது சலியாது தவறு திருப்பதிலும் நிர்ணயத்திலுமே. ஆப்பிரிக்க சங்கத்தார் லெட்யார்ட் பிரயாணிகளை ஆப்பிரிக்காவிற்குப் புறப்பட எப்பொழுது ஆயத்தமாயிருப்பீர் என்று கேட்க, அவர் "நாளைக்காலமே" என்று அந்தக்ஷணமே தடையற உத்தரம்சொ

னார். ப்ளூச்சர் தளபதிக்கு ப்ருஷ்ய ராணுவவீரர் எல்லோரும் சூட்டிய பெயர் "முந்து தளபதி" என்பது. பின்னிட்டு ளார்ட் ஸேண்ட் வின்ஸெந்து எனப் பெயர் வழங்கிய ஜான்ஜெர்விஸை நீர் எப்பொழுது கப்பல் ஏற எத்தனமாயிருப்பீரென்று கேட்க, அவர் "இந்நொடியே" என மறுமொழி பகர்ந்தார். இந்திய சேனாபதியாக நியமனம் பெற்ற ஸ்ரீ கலின் கம்ப்பெலைப் பார்த்து நீர் எப்பொழுது புறப்பட மாட்டீர் என்று கேட்டதற்கு அவர் "நாளைக்கு" என மொழிந்த உத்தரம் அவர் நாளைப் பெற இருந்த ஜயத்திற்கு முற்குறியாக முடிந்தது. ஏனெனில் பெரும்பாலும் சண்டைகளில் ஜயம் பெறுவது செய்வது இன்னதென்று விரைவில் நிர்மாணித்துத் தாமசமின்றிச் சத்துருவின் பிழையைக் கண்டு அதற்கு இணங்க வகை அறிந்து சண்டை யிடுவதனாலேயே. "ஆர்க்கொலாவில் இருபத்தைந்து குதிரைவீரர் துணையால் போர் வென்றேன். ஆயாசம் மேலிட்டிருந்த சமயத்தைப் பிடித்து, சேவகருக்குத் தலைக்கொரு எக்காளம் கொடுத்து, இவ்வொரு சேரங்கைச் சேவகரால் அன்று ஜயம் பெற்றேன். இரு சேனைகள் என்றால் எதிரிட்டு, ஒன்றையொன்று பயப்படுத்தப் பார்க்கும் இரு கூட்டங்கள். இதில் பிறக்கும் சமயம் வரும்: அச்சமயத்தைப் பார்த்திருந்து பதறாமல் அந்த நிமிஷமே நற்சமயமென்று எவ்விதமும் வெல்ல வகை பார்க்கவேண்டும்" என நெப்போலியன் சொன்னான். பின்னொரு முறை அவன் "போர்க் கடித்த பிரதி நிமிஷமும் அபகதி நேரிடுதற்குரிய சமயம் ஆகும்" என மொழிந்து, ஒஸ்திரியருக்குக் காலத்தின் அருமை ஒருபொழுதும் தெரியாததனால் தான் அவர்களைக் கெலித்ததாகவும், வீண்பொழுது போக்கும் சமயம் பார்த்து முறியடித்ததாகவும் வெளியிட்டான்.

சென்ற சதாப்தத்தில் பிரித்தானியருடைய மனையில் விளங்கிய பெருஞ்சமர்க்களம் இந்தியா. க்ளைவ் காலமுதல் ஹவலாக், க்ளைட் என்பவர்கள் காலம் அறுதியாக இந்திய சட்டங்களைசபையிலும் சண்டைமைதானத்திலும் கைக்கொண்டு

தக்கவர்களாயிருந்த உவெல்ஸ்லி, மெத்காப், ஹனத்ராம், எட்வார்ட்ஸ், லாரென்ஸ் முதலிய பிரபலர் வெகு வெகு பெயர். பெயர் மறுப்பட்டிருந்த மற்றொரு பிரபலர் உவாரென் ஹேஸ்டிங்ஸ் (Warren Hastings). அவர் நெஞ்சுத்திரம் குன்றாத நிர்ணயமும் இளைக்காத முயற்சியுமுள்ளவர். அவர் பூர்வ காலம் தொட்டுப் பிரதபித்திருந்த குடும்பத்திற் பிறந்தவர். ஆனால் அவர்கள் செல்வஸ்திதி சகடக்கால்போல நிலையற்றுச் சுழன்று, ஸ்த்யுஅர்ட்ஸ் ராஜகுடும்ப விவகாரத்தில் அவர்கள் ராஜபக்திக்கு ஈடாக இடர் நேரிட்டதனால் தரித்திரர் ஆனார்கள். பல நூறு வருஷகாலம் அவர்கள் ஸ்வாதீனத்தில் இருந்த டேயில்ஸ்போர்ட்டில் உள்ள குடும்பச்சொத்தாகிய பூஸ்திதி பின்னாளில் அவர்கள் கைகடந்து போய்விட்டது; ஆனால், டேயில்ஸ்போர்ட் ஹேஸ்டிங்ஸ் எனக் கடைசியில் பட்டப்பெயர் வழங்கிய பிரபு அங்குள்ள வே.கா விற்பய்றைத் தமது கனிஷ்ட புத்திரர்க்குக் கொடுத்தார். அப்பால் வெகு வருஷம் சென்று அவர் பெயரன் உவாரென் ஹேஸ்டிங்ஸ் பிறந்தது அவர் இரகத்திலேதான். அந்த உவாரென் ஹேஸ்டிங்ஸ் இளமையில் கிராமப் பாடசாலையில் பயிர்க்குடிகள் பிள்ளைகளுடன் தாரதம்மியமின்றிக் கலந்து கல்வி கற்றார். தம்முன்னோர் சொத்தாயிருந்த நிலத்தில் விளையாடினார். ராஜபக்தியுள்ள தைரிய புருஷராகிய டேயில்ஸ்போர்ட் ஹேஸ்டிங்ஸ் பிரபுவின் பெருந்தகைமையைப் பற்றிய நினைவு அவ்விளைஞர் உள்ளத்தில் எப்பொழுதும் குடிகொண்டிருந்தது. அவர் இளமனதில் பிரதாப அபேக்ஷை எனும் தீ மூண்டது. அவர் வேனிற்காலத்தில் ஒரு நாள் அந்தப் பாளயப்பட்டிற் செல்லும் ஆற்றங்கரையிற் படுத்திருக்கையில் தம் குடும்பச் சொத்தாகிய அந்தப் பூஸ்திதியை மீளவும் ஸ்வாதீனமாக்கிக்கொள்வேன் என்று தம்மனதில் சங்கற்பித்தாராம். அப்பொழுது அவருக்கு வயசு அதிகமல்ல, ஆக ஏழு. அந்தச் சங்கற்பம் சிறுவராய் இருக்கும்பொழுது அவர் நினைவில் விபரீதமாகத்

தோன்றிய சொப்பனமே தவிர மற்றப்படி அல்லவே. அல்லாதிருந்தும், அவர் இறக்குமுன் நினைந்தபடி சாதித்தார். கனாக் கண்டதுபோல் மனதில் எழுந்த நினைவு அவர் பிராணனை ஒட்டிவேர் ஓடிய பேராசை ஆயிற்று. அவர் வாலிப காலம் தொடங்கி ஆடவராகிறவரையில் அந்தத் தீர்மானத்தை எதற்கும் இளைக்காத சித்த பலத்துடன் பதைப்பற்று அடங்கியிருந்து இடையறாது சாதித்துக்கொண்டு வந்தார். எதற்கும் மடங்காத சித்தபலம் அவருக்கு உள்ள குணங்களில் மிகவும் கவனிக்கத் தக்க சிறந்த குணம். அந்தத் தாய்தந்தையர் இல்லாத அநாத சிறுவர் அவர் காலத்தில் உள்ள விசேஷ வல்லவர்களில் ஒருவரானார்; கை கடந்துபோன தம்முன்னோர் சொத்தெல்லாவற்றையும் திருப்பிக்கொண்டார்; பழைய பூஸ்திதியைக் கிரயத்திற்கு வாங்கித் தம் குலத்தை விளக்கிய மாளிகையை அழித்து நூதனமாகக் கட்டுவித்தார். உஷ்ணதேசத்தில் வாசம்செய்து ஐந்து கோடி பிரஜைகளை ஆண்டுவரும்பொழுது, நடந்த சண்டைகளைப்பற்றியும் அரசிறைச் செலவுவரவுக் கணக்கைப்பற்றியும், சட்டநிருபணத்தைப்பற்றியும் அவர் உள்ளத்தில் குடிகொண்ட விசாரம் மிகுதி. இத்தனை விசாரம் மேலிட்டிருந்தும், அவர் ஆசைக்கோ முன் உள்ளபடி டேல்ஸ்போர்டே பின்னும் இலக்காயிருந்தது. நாட்பட உத்தியோகபாரம் தாங்கிய காலம் எல்லாம் அவருக்கு நன்மையும் தீமையும், புகழும் இகழும் விபரீதமாய் நிறைந்துண்டாயின. அந்தக் காலம் அற்றறுதியாக முடிந்தபின் அவர் விசாரமற்று ஒதுங்கியிருந்து இறக்கும்படி போனது டேல்ஸ்போர்டுக்கே" என மெக்காலே சொல்லுகிறார்.

இந்தியாவில் அபூர்வ தீரமும் நிர்ணயமுமுள்ளவராயிருந்த மற்றொரு பிரபலர் ஸ்ரீ சார்ல்ஸ் நேப்பியர். அவர் ஒரு முறை படைக்குப் போய்ப் பாசறையிருக்கும்பொழுது, தம்மை நான்கு திக்கிலும் சுற்றிக்கொண்ட சங்கடங்களை

சுட்டி "அவை தரையில் எனது அடி பின்னும் அதிகம் இறங்க ஊன்றி நிற்கும்படி செய்கின்றன" என மொழிந்தார். அவர் செய்த மீனி யுத்தம் சரித்திரத்திற் குறித்திருக்கும் பராக்கிரம அதிசயங்களில் ஒன்று. அவர் சண்டைக்குக் கொண்டுபோன சேனுவீரர் 2000-பெயர்-அவர்களில் ஐரோப்பியர் ஆக 400-பெயர். அவரோடு எதிர்த்த சர்வாயுதபாணிகளாகிய மிண்டரோ 35,000 - பெலூச்சியர். இதைக் கேட்பவர்கள் இப்படி எண்ணமற்றுத் துணிந்து சண்டைசெய்யப் போவாரும் உண்டோ என நினைந்து பிரமையடைவார்கள். ஆனால், அந்தத் தளபதிக்குத் தமது திறமும் தமது சைனியத்தின் திறமும் நன்றாய்த் தெரிந்ததனால் அவர் ஒன்றுக்கும் அஞ்சவில்லை. பெலூச் பட்டாளத்தின் நடு அணி வீரர் ஓர் உயர்ந்த மேட்டில் நின்றார்கள். அம்மேடு அவர்களுக்கு எதிர்முகமாயுள்ள கொத்தளம்போல் இருந்தது. அவர் அந்த நடு அணி வீரருக்குக் குண்டுமாரி இறைத்தார். மூன்று மணிநேரம் யுத்தம் சண்டப்பிரசண்டமாய் நடந்து வெகு பெயர் மடிந்தனர். அவருடைய சிறிய தளத்தில் பிரதி சேவகனும் தளபதி வீராவேசம் புகட்ட, அந்தச் சமயத்திற்குப் பெயர்பெற்ற ரணசூரன் ஆனான். பெலூச்சியர் ஒன்றுக்கு இருபது பெயர் விகிதம் தொகை பெருகியிருந்தும் நிலை குலைந்துத் துரத்திவிடப்பட்டார்கள். ஆனால், சத்துருவிற்குப் புறங்காட்டாமல் முகம் பார்த்தபடி பின்னிடைந்தார்கள். இவ்வகைத் தீரமும் பிடித்த பிடியை நெகிழவிடாத உறுதியும் விடாமுயற்சியுமே சத்தவீரர் செய்யும் சண்டைகளிலும் மற்ற எவ்வகைச் சண்டைகளிலும் வெல்வனவாம். பந்தயச்சாலையில் ஒரு கழுத்திடை முந்தும் குதிரையே பந்தயம் கெலித்துத் தன் பிறப்பு ரோஷத்தைக் காட்டுவது; ஒரு மூச்சுப் பின்னும் அதிகம் மூந்திச் செல்லும் ராணுவசேவகருக்கே ஜயம்; பின்னும் ஐந்து நிமிஷம் கொண்டு கைவிடாத மனவுறுதியோடு கூடிய தீரமே சண்டையில் வெற்றிசிறப்பது. உன் பலம் எதிரி பலத்திற் குறைக்

இருந்தாலும் நீ உன் பலமுழுதும் கூட்டி அதிக நேரம் செலுத்துவாயானால் எதிரிக்கு இணையாகி அப்புறம் அவனினும் பலசாலி ஆவாய். ஸ்பார்ட்டா யுத்தவீரனாகிய வாலிபன் ஒருவன் தன் கத்தி நீளம் போதாதென்று பிதாவிற்கு முறையிட பிதா "அதற்கு ஒரு அடி எட்டி வை" என மொழிந்த மறுமொழி ஒவ்வொரு லௌகிக வியாபாரத்திற்கும் ஏற்கும்.

நேப்பியர் தமக்குள்ள வீரத்தைத் தமது தளத்திற்கும் தரும் வகை தெரிந்து புகட்டினார். பட்டாளத்தில் உள்ள சாமானியசேவகன் ஒருவன் ஒப்பந்தமாக அவர் பாடுபட்டு உழைத்தார். இராணுபதி உத்தியோகம் செய்யும் மஹா சூக்ஷமம் தளம் செய்யும் வேலையில் தளபதிதாமும் ஒரு பங்குசெய்வதே. தளம்செலுத்திப்போகும் அதிகாரி மனம் முழுதும் வேலையில் பிரவர்த்தியாயிருந்தாலன்றி அவன் காரியம் சாயாது. தொல்லை ஏராள உழைப்பும் ஏறவேண்டும்; ஆபத்து முதிரமுதிர, அது அறத் தொலையுந்தனையும் தெளர்ஷம் அதிகரிக்கவேண்டும். கச்சிமலைநாட்டுச்சண்டைக்கு அவர் படையெடுத்துப் போனபொழுது அவருடன் கூடச் சென்ற வாலிபராகிய உத்தியோகஸ்தர் ஒருவர் ஒரு சமயத்தில் அவனைச் சுட்டி "அந்த விருத்தர் இடைவிடாமல் குதிரை ஏறி அநுவலின்பெயரில் திரிவதைக் கண்டிருந்தும் இளம் பருவமும் தேகபலமுமுள்ள நான் செயலற்றுச் சோம்பியிருப்பது எப்படி? அவர் மாத்திரம் வாய் திறந்து ஒரு வார்த்தை சொல்வாரானால் குண்டு மருந்து கெட்டித்திருக்கும் பீரங்கி வாய்க்குள்ளும் அச்சமற்று நுழைவேன்" எனச் சொன்னார். இவ்வாறு அவ்வுத்தியோகஸ்தர் சொல்லியதை எவரோ நேப்பியருக்குத் திருப்பிச் சொல்ல, அவர் இது தாம் பட்ட பாட்டுக்கும் பெரும் பயனென்று மொழிந்தார். இந்தியாவில் செப்பிடுவித்தைக்காரன் ஒருவனுக்கும் அவருக்கும் நடந்த சம்பாஷணையைக்குறித்துச் சொல்லியிருக்கின்ற ஒரு கதையால் ஜன்ம இயற்கையாய் அவருக்கு

உள்ள தீர நெஞ்சமும், எவரும் வியக்கத் தக்க நிஷ்கபடமும் நேர்மையான ஒழுக்கமும் ஐயமற வெளிவருகின்றன. இந்தியாவில் சண்டைகள் ஒழிந்தபின் ஒரு சமயத்தில் பிரக்கியாதி பெற்ற செப்பிடுவித்தைக்காரன் ஒருவன் பாளயத்திற்குப் போய், நேப்பியர் தளபதி, அவர் குடும்பத்தார், பரிஜனர் முன்னிலையில் தான் கற்ற வித்தையைக் காட்டினான். அவன் செய்த வித்தைகளில் ஒன்று இங்கே சொல்வோம். தன் கூட்டாளியை உள்ளங்கையில் எலுமிச்சம் பழம் ஒன்று வைத்து நிற்கச் சொல்லி அவன் அதை ஒரு வீச்சில் இரு பாதியாக அறக் கத்தியை வீசி வெட்டினான். அது கண்டு, அந்த வித்தைக்காரனும் கூட்டாளியும் தமக்குள்ளே அந்தரங்கத்தில் ஏதோ தந்திரம் செய்தார்களென்று நேப்பியருக்குச் சந்தேகம் பிறந்தது. ஸ்காட் கவிஞரும் இவ்வகைச் சாதகம் ஒன்றைத் தாம் இயற்றிய "ஜாலப்பிரதிமை" எனும் அதிசயகதையிற் சொல்வது மெய்யே. ஆனாலும், அங்கையில் ஒருவன் வைத்திருக்கும் சிறிய எலுமிச்சம் பழத்தை எட்ட நின்று மற்றொருவன் கத்தி வீசி, ஒரு வீச்சில் கையிற் படாமல் இரு பாதியாக அறுப்பது அசாத்தியமென்று அவர் மனதிற் பட்டது. இவ்வழக்கைத் தீர்க்கும்படி, தளபதி தமது கையில் இந்தப் பரீக்ஷை செய்யவேண்டுமென்று, வலக்கரத்தை நீட்டிப் பிடித்தார். வித்தைக்காரன் அந்தக் கையைக் கருத்தாய்க் கூர்ந்து பார்த்து, உமது கையில் வித்தை செய்ய எனக்கு மனம் இல்லை என்றான். அது கேட்டு, தளபதி "உன் கள்ளத்தைக் கண்டுபிடிப்பேனென்று முந்தவே நினைந்தேன்" என்றார். அப்பொழுது வித்தைக்காரன் அவரைத் தடுத்து "சற்று நில்லும். உமது இடதுகையைக் காட்டும், பார்ப்போம்" எனக் கேட்கத் தளபதி காட்டினார். வித்தைக்காரன் அதைப் பார்த்து, "நீர் இடதுகையை அசையாமல் நீட்டிப் பிடித்துக்கொள்வீரானால் நான் அவ்வித்தை செய்வேன்" "ஆனால், இடதுகையிற் செய்கிறவித்தையை வலதுகையிற் செய்யக்கூடாததேன்" "ஏனெனில், வலது

உள்ளங்கை நடுவில் குழிந்திருக்கிறது. கத்தி வீசப் பெரு
விரல் அறுந்தாலும் அறுந்துபோம். இடது உள்ளங்கை
யோ நடு உயர்ந்திருக்கிறது. அதில் ஏந்திக்கிருக்கும் பழத்
தைக் கைக்குப் பழுதின்றி வெட்டுவது எளிது" என்று
உரைத்தான். அது கேட்டு நேப்பியர் திடுக்கிட்டுப்போனார்.
"எனக்குத் திகில் உண்டாயிற்று. இது வாளாண்மையிற்
கை தேர்ந்தவர்கள் செய்யும் அரிய வித்தையென்று கண்
டேன். எனது பரிஜனத்திற்கு எதிரில் நான் அவ்வித்தைக்
காரனைப் புழித்து, என் கையில் வைத்திருக்கும் பழத்தில்
உன் வித்தை செய் பார்க்கலாம் என்று முன் கேளாதிருப்பே
னானால், கண்டது போதுமென்று அம்மட்டில் நின்றுவிடு
வேன். இது மெய், ஆனால், அவன் சொற்படி, நான் இடது
கையை நீட்டி அசையாதபடி அதில் எலுமிச்சம்பழம் ஏந்தி
நின்றேன். வித்தைக்காரன் வளம் பார்த்து நின்று துரித
மாய் ஒரு வீச்சில் பழத்தை இருபாதியாய் அறுத்தான்.
வீசின கத்தியாய் என் கையை அடுத்துச் சென்றது நனைந்த
இழையை அதில் வைத்து இழுத்ததுபோல் இருந்தது. பீனி
யுத்தத்தில் எமது சிறந்த வீரர் தோற்கடித்த தைரியசாலிக
ளாகிய இந்திய வாளாளர் இவ்வகை அருந்திறமுடையவர்
களே" என்று அவர் மொழிந்தார்.

அங்கிலோ இந்திய அரசாட்சி சரித்திரத்தில் குறித்திருக்
கும் எந்தெந்தச் சங்கதியைக் காட்டிலும் பின்னிட்டு இந்
தியாவில் நடந்த பயங்கரமான கலகம் அங்கிலேயருக்கு
உரிய உறுதியான மனவலியையும் தங்கள் ஆண்மை சமய
த்திற்கு உதவும் எனும் தேற்றத்தையும் மயக்கமின்றி யாவ
ருக்கும் தோன்ற வெளிப்படுத்தியது. அங்கிலேய அதிகா
ரிகள் பெரும்பாலும் மதிகெட்டுப் பாரமான பிரமாதங்க
ளில் இறங்கினாலும் இறங்குவார்கள். அங்கிலேய பிரஜை
களோ பெரும்பாலு அந்தப் பிரமாதங்களினின்று நீங்கத்
தற்கு அரிய வீரத்தோடு விலசப் பெரும்பாலும் உபாயம்

சூழ்வார்கள். 1857-ம் ஆண்டு மேமீ இந்தியாவில் கலக இடிமுழக்கம் உண்டானபொழுது இங்கிருந்த பிரித்தானிய ராணுவசேவகர் தொகை மிகவும் குறைந்துபோயிருந்தது. அவர்கள் தேசத்தில் எங்கும் சிதறுண்டிருந்தார்கள். அனேகர் வெகு தூரம் தொலையில் உள்ள ராணுவஸ்தானங்களில் இருந்தனர். வங்காளப் பட்டாளத்தார் ஒருவர் பின் ஒருவராகத் தங்கள் அதிகாரிகள் சொல்லை மீறிக் கட்டுக்கு அடங்காமல் வெளிவந்து டில்லிக்கு வெகு விரைவாய்ப் போனார்கள். ஒன்றன்பின் ஒன்றாகப் பல மாகாணங்கள் கலகத்திலும் அதிக்கிரமத்திலும் மூழ்கிப்போயின. ஆபத்திற்கு உதவி புரியவேண்டும் எனும் ஓலம் கிழக்கு மேற்கு எங்குமிருந்து எழுந்தது. எங்கெங்கும் அங்கிலேயரைக் கலக பக்ஷத்தார் தப்பவிடாமல் வழி மறித்துச் சூழ்ந்து தடுத்துக்கொண்டார்கள். அவர்கள் எதிரிகளோடு எதிர்க்க வகையற்றிருந்தார்களெனத் தோன்றியது. அவர்கள் ஒட்டுப்பற்று அற அபஜயப்பட்டு இந்தியாவில் பிரித்தானியதுரைத்தனம் அடியோடே ஒழிவது திண்ணமெனத் தோன்றிற்று. ஆகவே, "இந்த அங்கிலேயர் தாம் அபஜயப்படும் காலம் ஒருபொழுதும் அறியார்" என அவர்களைச் சுட்டி முன் சொல்லிய இவ்வாக்கியம் கலகம் தொடங்கிய பொழுதும் சொல்லக் கூடியதாயிருந்தது. உலக இயற்கைப்படி பார்த்தால், அவர்கள் அத்தனை பெயரும் அப்பொழுதே இருந்த இடத்தில் தப்ப வகையின்றி நேர்ந்த கொடிய ஆபத்தில் மாய்ந்துபோயிருக்கவேண்டியது.

கலக பலாபலம் ஏதென்று திண்ணமாக ஒன்றும் தெரியாதிருக்கையில், சுதேச மன்னரில் ஒருவராகிய ஹொல்கார் தமது ஜோஷியரைக் குறிகேட்டார். அந்த ஜோஷியர் "ஐரோப்பியர் ஒருவன் தவிர மற்றெல்லோரும் சங்கரிக்கப்பட்டாலும், அவ்வொருவன் இங்கிருந்து சண்டைசெய்து மீளவும் தேசத்தைக் கட்டிக்கொள்வான்" எனக் குறி

சொன்னார். காடாந்தகாரம் எங்கும் மூடிய சமயத்திலும், லக்ஷ்மணபுரி முதலிய நாடு நகரங்களில் ஒரு கைக்குள் அடங்கத் தக்க சில பிரித்தானிய ரணவீரரையும் ஸிவில் உத்தியோகஸ்தரையும் ஸ்திரிகளையும் திரள் திரளான படைவீரர் ஆயுதபாணிகளாக அடர்ந்து சூழ்ந்தது கண்ட இடத்தும் அவர்கள் இனித் தமக்குத் தப்பிப்பிழைக்க வகை இல்லையென்று ஒரு வார்த்தை சொல்லவுமில்லை, மாற்றானுக்கு அடங்கி வசப்பட நினைக்கவுமில்லை. நாலு நாள் பத்து நாள் அல்ல, நாலைந்து மாசகாலம் தங்கள் ஜாதியாருக்குச் செய்தி எழுதி அறியும் வழி அடைபட்டிருந்தும், இந்தியாராச்சியம் தங்கள் வசத்தினின்று விலகியதோ, இன்னும் தங்கள் வசம் இருக்கின்றதோ என்று உறுதி அறியாதிருந்தும், தங்கள் தேசத்தார் தைரியசாலிகளென்றும் ராஜபக்தி சிரத்தையுள்ளவர்களென்றும் ஒருபொழுதும் அவர்கள் பூர்த்தியாக நம்பாதிருக்கவில்லை. ஆங்கிலேயர் சிலர் இந்தியாவில் பெயரப் பிரிய இடமின்றி அடைந்திருக்கும் செய்தி கேட்டுச் சீமையில் உள்ளவர்கள் சிந்தையற்று அவர்களை மாய்ந்துபோக விடார்களென்று அவர்கள் மனதிற்கு நன்றாய்த் தெரிந்தது. இடர் ஒழிந்து இறுதியில் ஜயம் உண்டாமென்று எண்ணியதொழிய, இந்தக் கலகம் தமக்கு விபரீதமாய் முடியுமென்று அவர்கள் சொப்பனத்திலும் எண்ணவில்லை; தமக்கு நேர்ந்த பிரதிகூலம் முற்ற முடியப் பிரதிகூலமாகவே இருக்குமானால், அவரவர் நின்ற நிலையில் விழுந்து செய்கருமம் முடிக்கும் தொழிலில் மாய்வது திண்ணமென்று அவர்கள் மனதில் உறுதி பிறந்திருந்தது. ஹவிலாக், இங்லிஸ், நீல், ஊத்ராம் என்பவர்களுடைய பெயரை இதை வாசிப்பவர்கள் ஞாபகத்தில் கூட்டவேண்டுமோ—அவர்கள் சுத்த வீரரென்று உடம்பெடுத்த புருஷர்—தனித்தனி அந்த காவலையும் பார்த்து, இவர் சுத்த வீரருக்கு உரிய இதயமும் தேவ தொண்டருக்குரிய பக்தியும் ரத்தசாக்ஷிக்கு உரிய குணமுமுள்ளவர்

என்று சொல்லலாம். அப்படிச் சொல்வது அபத்தமல்ல. "மனுக்குலத்திற்கு எல்லாம் அவர்களால் கௌரவம் உண்டாயிற்று" என மொங்கிலாம்பர்ட் அவர்களைச் சுட்டி மொழிந்தார். ஆனாலும் அந்தக் கோரயுத்தம் தொடங்கி முடிகிறவரையில், ஸ்திரிகள் ஸிவில் உத்தியோகஸ்தர் யுத்தவீரர் - தளபதி முதல் சாமானிய சேவகன் - கொம்பூதி வரையிலுள்ள நானாதரத்தோர், பேதமின்றி எத்திறத்தோரும் பெருந்தகையுள்ளோர் எனும்படி சாதித்தார்கள். அந்த ஆடவர் ஆய்ந்து பொறுக்கியெடுத்த ஆணித்தரமானவர்களல்ல: சீமையில் அநுதினமும் வீதிகளிலும், தொழிற்சாலைகளிலும், கழனியிலும், சத்திரமுதலிய கும்பு கூடும் இடங்களிலும் காணும் சாமானியர் வகுப்பினின்று வந்தவர்களே தவிர மற்றப்படி அல்ல - ஆனால், சடுதியில் அவகதி வந்தபொழுது, அவர்கள் அத்தனை பெயரிடத்திலும் சமயத்திற்கு ஏற்ற சாமர்த்திய வளமும் மனவலியும் விளங்கின. அத்தனை பெயரும் அத்தனை வீரர் ஆயினர். மொங்கிலெம்பர்ட் இதைச் சுட்டிச் சொல்லியது:—"அவர்களில் ஒருவனாவது பின்னிடவுமில்லை, கலங்கவுமில்லை — ராணுவவீரர் - ஸிவில் உத்தியோகஸ்தர், வாலிபர் - விருத்தர், தளபதிகள் - சேவகர் சமஸ்தரும் மாற்றானோடு எதிர்த்துச் சண்டைசெய்து, பதைப்பற்றுத் தளராத் தீரத்துடன் மாய்ந்தார்கள். இளமையிற் பயிலும் கல்வியின் அருமை பிரபலமாகத் துலங்குவது இதிலேதான். அந்தக் கல்வியறிவு பாலியந்தொட்டுப் புயவலியையும் சுதந்தரத்தையும் சாதிக்கவும், அளவளாவி, மாற்றானுக்கு இடங்கொடாதுநின்று ஒன்றுக்கும் அஞ்சாமல், ஒன்றைக் குறித்தும் பிரமையடையாமல் இம்மையில் உண்டாம் எவ்வகைக் கொடிய இடரினின்றும் தமது ஸ்வய முயற்சியால் தம்மைத் தாமே விலக்கிக் காக்கக்கொள்ளவும் அங்கிலேயரைத் தூண்டுகின்றது."

டில்லியைக் கைவசப்படுத்தியதும் இந்தியாவைக் கலக த்திக்கு இரையாகாமல் தப்புவித்ததும் ஸ்ரீ ஜான் லாரெ ன்ஸ் ஒருவருடைய சாமர்த்தியந்தான் என்று சொன்னவர் கள் உண்டு. வடமேற்கு மாகாணத்தில் லாரென்ஸ் என்ற பெயர் அற்புத பலமுள்ளதாயிருந்தது. செய்கடன் - சிரத் தை - தன்முயற்சி இவைகளைக்குறித்து அவருக்கு உள்ள மதிப்பு மிகவும் உயர்தரமாயிருந்தது. அவர் அதிகார வச ப்பட்ட பிரதி சேவகனும் அவர் மன இயற்கையைக் கண்டு தானும் அவ்வியற்கை பூண்டு நடந்தான். அவர் ஒருவர் குணம் குறிகளே ஒரு பட்டாளத்திற்குச் சரியென்று சொ ல்லியிருக்கிறது. அவர் சகோதரர் ஸ்ரீ ஹென்ரி லாரென் ஸைப் பற்றியும் இதே பிரகாரம் சொல்லலாம். டில்லி யைக் கைவசப்படுத்த விசேஷ பிரயத்தனம் செய்த பஞ் சாப் ராணுவத்தைச் சேர்த்து உருவாக்கினவர் அவர்தாம். அவ்விரு சகோதரரும் தம்மைச் சூழ்ந்தவர்கள் மனதில் குன்றாத அன்பும் தீரமும் புகட்டினார். சுத்த வீரருக்கு இன்றி அமையாத லக்ஷணங்களில் ஒன்று உள்ளக் கசிவு - இந்த லக்ஷணம் அவர்கள் இருவருக்கும் உண்டு. இருவ ரும் ஜனசமூகமத்தியில் வாசமாயிருந்து, தம்மைப் பார்த்து எல்லாரும் நல்வழியில் தவறாது நடக்கும்படி செய்தார் கள். "அவர்கள் தங்கள் அரிய குணாதிசயங்களை வாலிபர் மனதில் சித்திரித்துவைக்க, அவ்வாலியர் தாம் அங்கங்கே போய்க் கைக்கொண்ட அரசாட்சித்துறைகளை அந்தப் படத் தை மாதிரியாக வைத்துப் பார்த்து நிர்வகித்தார்கள். இது எல்லாவற்றுக்கும் மேல். அவர்கள் ஒரு மதத்தைச் சித்திரி த்து ஒரு பாடசாலையைத் தோற்றுவித்தார்கள். அவை இரண்டும் இன்று அழியாதிருக்கின்றன" எனக் கர்னல் எட் வார்ட்ஸ் சொல்லுகிறார். ஸ்ரீ ஜான் லாரென்ஸ் பக்கத்தில் இருந்த மன்கமரி, நிக்கல்ஸன், காட்றன், எட்வார்ட்ஸ் என்பவர்கள் அவரைப்போல்க் காலவரம்பு தவறாதவர் கள், நிர்ணயமும் பெருமனதும் உள்ளவர்கள். ஜான்

நிக்கல்ஸன் மனுஷரில் அதிக நாகரிகமும் ஆண்மையும் உதாரமனமுமுள்ளவர். சுதேசிகள் அவரை "இறையும் குறையாமல் குரு அவதார புருஷர்" என்று சொல்ல, டைௌஸிபிரபு அவரை "பலத்திற்குக் கோபுரம்" எனக் குறிப்பித்தார். அவர் செய்த எவ்வகைத் தொழிலையும் முழு வலியுடன் நெஞ்சாரச் செய்ததனால் அத்தொழில் அனைத்திலும் மகத்துவரானார். பக்கிரிகள் ஒரு பக்ஷத்தார் அம்மகானைக்குறித்து உண்டான அதிசயாவேசத்தின் வசப்பட்டு அந்த நிக்கில்ஸென்னை ஆராதிக்கவும் தலைப்பட்டார்கள். அது கண்டு அம்மதிகேட்டிற்காக அவர்களிற் சிலரை அவர் தண்டிப்பித்தார். தண்டிப்பித்தும், அவர்கள் விட்டுவிடாமல் அவருக்கு அர்ச்சனை செய்துகொண்டேவந்தார்கள். அவர் மனவலி குன்றாமல் கைக்கொண்ட கருமத்திற் கண்ணாயிருந்ததற்கு 55 - வது பட்டாளத்தில் கலகம் செய்த சிப்பாய்களை அவர் ஏறின குதிரையை விட்டு இறங்காமல் அடுத்து இருபது மணிநேரம் எழுபது மைலுக்கு அதிக தூரம் தொடர்ந்து போனதைத் திர்ஷ்டாந்தமாய் எடுத்துக்காட்டலாம். பகைவர் டில்லியில் கொடி ஏற்றியபொழுது, லாரென்ஸும் மன்கமரியும் பஞ்சாப் பிரஜைகள் தமக்குத் துணைநிற்பது நிசமென மனம் தேறி, அவர்கள் தம்மை வியந்து உறுதியாக நம்பும்படிசெய்து, தங்கள் மாகாணத்தைச் சிறிதும் கலகமின்றிக் காக்கும்படி தம்மால் ஆமளவிற்கு வருந்தி முயன்றார்கள்; அன்றியும், கைக்கு எட்டிய ஐரோப்பிய ஸைக்கிய ராணுவவீரர் அத்தனை பெயரையும் அந்நகரத்திற் சண்டைக்குத் தீவிரித்து அனுப்பினார்கள். ஸ்ரீ ஜான் சேனாதிபதிக்குக் கடிதம் போக்கி, "டில்லிக்கோட்டையை வளைந்து கலகவருப்பாரைத் தப்பவிடாது நெருக்கிக்கொண்டு நிற்கவேண்டும்" எனத் திட்டம் செய்தார். அப்பொழுது நிக்கல்ஸன் வசப்பட்ட தளம் இல்லாமல் எட்டி அடி வைத்து நெருக்கி நடந்து போனது. பிற்பாடு நிக்கல்ஸனை அடக்கம் செய்த இடத்

தில் நெஞ்சுகலங்கிப் புலம்பின பின்டூகிய லீக்கிய ரணவீரன் ஒருவன் "இவர் எறிய படைக்குதிரை தரை அதிர மிதிக்கும் சத்தம் வெகு மைல்தூரம் கேட்குமே" என்மொழிந்தான்.

டில்லி முற்றுகையும் சண்டையும் அந்த ராக்ஷச கலகத்தில் எல்லாம் நடந்த காரியங்களில் அதிக பிரபலமானவைகள். ஆனாலும் லக்ஷ்மணபுரி முற்றுகையில் வெற்றெலும்புக்கூடாக மெலிந்திருந்த 32-வது பிரித்தானிய பட்டாளத்தார் சுத்த வீரராகிய இங்லிஸ் தளபதியோடு யுத்த சன்னத்தரான பகைவர் இரண்டு லக்ஷம் பெயரை அச்சமற்று ஆறு மாசகாலம் எதிர்த்துநின்ற அதிசயமே யின்னும் ஒரு பங்கு அதிகமாய்க் கொண்டாடப்படும்போலும். டில்லியிலும் பிரித்தானிய ராணுவவீரர் காண்பவர்களுக்கு முற்றுகை செய்வார்போலத் தோன்றியும் வாஸ்தவமாய்ப் பகைவரால் முற்றுகை செய்யப்பட்டவர்களே. அவர்கள் ஆகக்கூடி ஒரு சேரங்கை ஜனம்தானே. ஐரோப்பியர் சுதேசர் இருதிறத்தார் தொகையும் 3,700-க்கு மிஞ்சாது. நாளுக்கு நாள் அவர்களைத் தாக்கிய கலக சைனியம் ஒருமுறை எண்ணிட்டு 75,000-பெயர். அத்தனை பெயரும் அங்கிலேய அதிகாரிகளால் சீமை ராணுவசிக்ஷை பயின்றவர்கள். செலவழித்துத் தீராத குண்டு மருந்து முதலிய யுத்த உபகரணங்கள் வைத்திருந்தவர்கள். மேற்குறித்த வீரசூரராகிய சிறு வகுப்பார் நகர் மதிற் புறத்தில் இவ்வுஷ்ண தேசத்தில் எறிக்கும் கடு வெயிலில் உட்கார்ந்து உலர்ந்தார்கள். இறப்பையும் தேக ஊறுபாட்டையும் சுரரோகத்தையும் கண்டும் அவர்கள் மனம் நினைந்த கருமத்தை விட்டு நீங்கவில்லை. திரளான பகைவர் அவர்களை முப்பது தரம் தாக்கினார்கள். முப்பது தரமும் அவர்கள் சத்துருவை அரணுக்குப் புறத்தில் துரத்திவிட்டார்கள். அவர்களில் வீரதீரம் மிஞ்சினோரில் ஒருவராகிய காப்டின் ஹாட்ஸன் "பூலோகத்தில் மற்றெந்தச் சாதியாரும் இச

னுக் கண்டம் தப்பிப்பிழைத்து மீந்திருக்கவுமாட்டார்கள் வெலிக்க முயன்றாலும் தோற்பைத் தவிர்க்கவுமாட்டார்கள் என அச்சமின்றிச் சொல்லுகிறேன்" என்றார். க்ஷணப் பொழுதாயினும் அந்த வீரர்கள் தம் கருமத்தில் கைசலித்து இளைக்கவில்லை; மிக்க பொறுமையோடு மேலுமேலும் முயன்றார்கள், சண்டையிட்டார்கள், ஒருபொழுதும் தளரவில்லை. கடைசியில் "படு தகர்வாய்த் தகர்ந்த" மதில் வெளி வழியாய் விரைந்து சென்று கோட்டையைக் கைவசப்படுத்தி, டில்லி மதிலில் மீளவும் பிரித்தானிய துவசம் ஏற்றினார்கள். சாமானிய சேவகர், அதிகாரிகள், தளபதிகள் தாரதம்மியமின்றி யாவரும் மகத்துவமுடையோர் ஆனார்கள். கஷ்டப்பட்டுப் பயின்றிருந்த சாமானிய சேவகர், பாலோடு அன்னம் புசித்துச் சுகித்த வாலிப ராணுவ உத்தியோகஸ்தர் பேதமின்றி இரு திறத்தாரும் ஆண்மையிற் சிறந்தோரென்று உலகறியக் காட்டி, சம கௌரவத்தோடு அர்த்தக் கோரயாதனை எனும் ஆழியினின்று கரையேறினார்கள். அங்கிலேய ஜாதிக்கும் அச்சாதியார் பயிலும் ஆண்டகைமையுள்ள பயிற்சிக்கும் சிக்ஷைக்கும் ஜன்ம இயற்கையாயுள்ள திண்மையும் வைரமும் அதற்குமுன் ஒருபொழுதும் அதிக பலமாய் வெளிவரவில்லை. ஈற்றந்தரத்தில் இங்கிலாந்தில் உள்ள ஆடவர்தாமே அங்கு உற்பத்தியாகும் அரும்பொருளென டில்லிச் சண்டையில் வலியுறுத்தி ஒப்பிக்கப்பட்டது. இத்தேச சரித்திரத்தில் விளங்கும் இந்தப் பிரபல ஜயம் பெறச் செலுத்திய சிரமத்தை நினைக்கத் திகில் எழுகின்றது. ஆனால் இக்கண்டம் தப்பிப் பிழைத்திருப்பவர்களும் பின்னேரும் இப்பாடத்தைப் படிக்கும் இதில் விளங்கிய வீரசூர சாமர்த்தியங்களை அனுசரித்தும் பயன் பெறுவார்களானால், இதற்குச் செலுத்திய சிரமம் மிகுதியென்று சொல்லப்போகாது.

ஆனால், சண்டையிலல்ல, அதிக சமாதானமும் உபகாரமுமான வேறு செய்தொழிற்றுறைகளில் இந்தியாவிலும்

கிழக்குப் பிரதேசங்களிலும் பற்பல ஜாதி மனுஷரால் விளங்கிய மனவலியும் தீரமும் மேற் குறித்தவைகளுக்குக் குறைந்தவைகளல்ல. வாளாண்மையுள்ள சூரரை வினையில் இருத்தி மதவைராக்கியமுள்ள வீரரை மறந்திடலாகாது. ஜாவியர் முதல் மார்ட்டின் - உவில்யம்ஸ் வரையும் குருத்தொழில் வல்லோரெனக் குறிக்கொள்ளப்பட்டவர்கள் வெகு பெயர் சொப்பிரயோஜனத்தை நாடாமல், இவ்வுலக கௌரவத்தைக் கிஞ்சித்தும் நினையாமல், கெட்டு நிலையழிந்துபோன மனுஷரைத் தேடிக் கண்டு ரக்ஷிக்கும் ஆசையே ஆசையாகி அதன் வசப்பட்டு உசித சிந்தையோடு உழைத்தார்கள். எதற்கும் இளைக்காத தீரமும் குன்றாத பொறையும் அவர்களைத் தாங்கியதனால் அவர்கள் எவ்வகைக் கஷ்ட நஷ்டங்களையும் பொறுத்து, அபாயத்தைச் சிறக்கணித்து, கொள்ளைரோகம் குடிகொள்ளும் இடத்தில் வழிநடந்து, சிரமம் அலைத்தும், இளைப்புத் தவிப்பும், யாதனையும் சகித்து, மனம் தளராமல் ஆனந்தம் கொண்டாடி, ரத்தசாக்ஷி மரணமும் தமக்குப் பெருஞ் செல்வமென்று பாராட்டித் தங்குதரிப்பின்றி வழிகொண்டார்கள். இவர்களில் நமிநாயகமாய் விளங்கிய சிரேஷ்டர் ப்ரான்ஸிஸ் ஜாவியர் (Francis Xavier). அவர் உயர் குலத்திற் பிறந்தவர். இன்ப சுகமும் அதிகாரமும் தனமும் அவருக்கு எட்டாதவைகளல்ல. இப்படி இருந்தும், குலத்திலும் உயர்ந்த பொருளும், பொன்னாசையிலும் உன்னதமான ஆசையும் உண்டென அவர் சதாசாரத்தால் மெய்ப்பித்தார். வினயத்திலும் சித்தத்திலும் அவர் தாம் உயர்ந்த குலமகன்; தைரியமும் கௌரவமும் உதாரமுமுள்ளவர்; எளிதில் பிறர் பின் செல்லும் இயற்கையுள்ளவர் - பிறரைத் தமது வழிப்படுத்தும் சாமர்த்தியமும் அவர்க்கு உண்டு; பிறர் நியாயம் சொல்லி அவர் மனதை எளிதில் திருப்பவுங் கூடும். அவர் பிறர் மனதைத் திருப்பவும் மாட்டுவார்; அவர் மிகு பொறையும் நிர்ணயமும் மனவலியுமுள்ளவர். இருபத்திரண்டு பரு

வத்தில் அவர் பரீஸ் சர்வகலாசாலையில் தத்துவநூல கற்பித்துத் தமது செலவிற்குத் தக்க திரவியம் சம்பாதித்தார். அங்கே அவர் லொயோலாவிற்குப் பிராணசிநேகரும் தோழரும் ஆனார். அதன்பின் சிறிது காலம் சென்று, நூதனமாகச் சமயத்திற் புகுந்து முதலிற் கூடிய சிறு கூட்டம் ஜனத்தை அவர் ரோமை நகரப் புண்ணிய யாத்திரைக்கு இட்டுக்கொண்டுபோனார்.

போர்த்துகல் தேசாதிபதி 3-வது ஜான் இந்தியாவில் தன் அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசங்களில் கிறிஸ்து சமயத்தை நாட்ட நிர்ணயித்தபொழுது, முதல் முதல் தெரிந்து நியதிசெய்த போதகர் போபெடில்லா; ஆனால் இவர் வியாதி கண்டு இம் முயற்சிக்கு அசக்தராய்ப் போனதனால், மற்றொருவரைத் தெரிவிட நேர்ந்தது. அவர் ஜாவியர். அவருக்கு வழிக்குப் பிரார்த்தனைப் புஸ்தகம் ஒன்றொழிய வேறு மூட்டை முடிச்சு இல்லை. கிழிந்துபோயிருந்த அங்கியைக் கந்தைபுரைத்து அவர் ஆலசியமின்றி லிஸ்போன் துறைக்குச் சென்று மரக்கலம் ஏறி இந்தியாவிற்குப் பிரயாணப்பட்டார். அவர் கோவைக்குப் பிரயாணப்பட்ட கப்பலில் கவர்னரும் அங்குள்ள கோட்டை ராணுவத்திற்குத் துணைப்படை வீரர் ஆயிரம் பெயரும் ஏறிப் போனார்கள். கலத்தில் ஜாவியருக்கு ஒரு அறை விட்டிருந்தது. இருந்தும், அந்தப் பிரயாண முடிவு பரியந்தம் அவர் படுத்து நித்திரைசெய்தது மேற்றட்டில் - அவருக்குத் தலையணை யடைச்சுருள் - அவர் போஜனம் செய்தது கடலோடிகளுடன். அவர் அவர்களுக்குப் பலவாறு தேக உதவி புரிந்து, பொழுது போம்படி நிகழ்ந்த வேடிக்கைகளை [illegible] செய்து, வியாதிஸ்தரை உபசரித்துக்கொண்டிருந்ததனால், அவர்களுக்கு அவர்பெயரில் முழு மனப்பற்று உண்டாயிற்று. அவர்கள் அவரை வணங்கி உபசரித்தார்கள்.

கோவையிற் சேர்ந்தபொழுது, அங்குள்ள வெள்ளை மனுஷர் சுதேசர் இருதிறத்தாரும் சீர்கெட்டிருப்பது கண்டு அவர் மனம் அதிர்ந்தது. நாகரிகம் உள்ள தேசங்களில் துர்வழக்கங்களும் அவைகளை அடக்கும் கட்டுப்பாடுகளும் உண்டே. அந்த வெள்ளை மனுஷர் துர்வழக்கங்களை மாத்திரம் அத்தேசத்திற் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். அவர்களைக் கண்டு கண்டு சுதேசரும் எளிதில் அத் துர்வழக்கங்களில் பயின்றார்கள். ஐயர் அக்கிரகார வீதிகள் தோறும் சென்று கைம்மணி அடித்துக் கும்பு கூட்டி, கல்வி கற்பிக்கும்படி உங்கள் பிள்ளைகளை நம்மிடத்திற்கு அனுப்புங்கள் என்று அவர்களைப் பிரார்த்தித்தார். சிறிது காலத்திற்குள் சேர்ந்த வித்தியார்த்திகள் தொகை பெருகியது. அவர்களுக்கு அவர் அநுதினமும் பக்குவமாய்க் கற்பித்துக்கொண்டுவந்தார். அன்றியும், அவரவர் துயரை ஆற்றிச் சத்திய நெறிக்கு அழைக்கும்பொருட்டு பிணியர், குஷ்டரோகிகள், நானா தரத்தோரிலும் நிர்ப்பந்தப்படுவோர் யாவரையும் அவர் போய்க் கண்டு பேசுவார். துன்புற்று வருந்துவோர் அழும் குரல் கேட்டு அவர் அதை அனாதரித்ததில்லை. மன்னூரில் முத்துக் குளிக்கும் ஜனங்களின் சீரழிவையும் நிர்ப்பந்தத்தையுங் குறித்துக் கேள்விப்பட்டு அவர்களைப் போய்க் காணப் புறப்பட்டார். மீளவும் அவர் மணி அடித்து மனக்கசிவுடன் மனுஷரை வரவழைத்து ஞானஸ்நான சமஸ்காரம் செய்து துவிபாஷிகள் மூலமாய்க் கல்வி கற்பித்தார். நேரே தாமாகக் கற்பிக்கச் சுதேசர் பாஷை அவருக்குத் தெரியாதே - அவர் அன்புற்றோர் குறைகளைத் தீர்த்து வேதனையைத் தவிர்க்கும் உபாயம் செய்வதே மிகுவாக்கு சாதுரிய போதனையாயிருந்தது.

அவர் தரிக்கணமுஞ் சென்றார். கன்னியாகுமரிக் கரையிலும் ஊர்களிலும் கிராமங்களிலும் தேவாலயங்களிலும் கடைத் தெருக்களிலும் கைம்மணி அடித்துக் கும்பு கூட்டி உபதேசித்தார். வேதவினாவிடை, அப்போஸ்தலர் விசுவா

சப் பிரமாணம், பத்துக் கற்பனை, கர்த்தர் விண்ணப்பம், திருச்சபையின் பக்தி விதிகள் சில இவைகளை அவர் மொழி பெயர்ப்பித்து மனப்பாடம் செய்து பிள்ளைகளுக்குச் சொல்லச் சொல்ல, அவர்கள் கேட்டுப் பாடம்பண்ணினார்கள். அதன்மேல், அவர் அவ்வார்த்தைகளைப் பிதா மாதாவிற்கும் அயலாருக்கும் போதிக்கும்படி அச்சிறுவரை அனுப்பினார். கன்னியாகுமரியில் அவர் நியமித்த போதகர் முப்பது பெயர். அவர்கள் அவர் அதிகார வசப்பட்டு முப்பது ஆலயத்தில் குரு உத்தியோகம் நிர்வகித்தார்கள். அவ்வாலயங்கள் சாமானிய கட்டடங்கள். அவற்றில் அனேகம் சிலுவைச் சின்னம் ஏற்றிய எளிய குடிசைகள். அங்கிருந்து அவர் திருவாங்கூருக்குப் போனார். போகு மார்க்கத்தில் கிராமங்கள் தோறும் மணி அடித்துக் கும்பு கூட்டிக் கை சலித்து விழுமளவும் ஞானஸ்நானம் கொடுத்து, குரல் அடைக்கிறவரையில் பத்தநிசளைச் சொல்லிக்கொண்டுவந்தார். தேவ ஊழியத்தில் அவர் அடைந்த சித்தி அவர் எண்ணிய அளவிற்கு மிஞ்சியதென்று அவர் வாக்கு மூலமாய்த் தெரியவந்தது. அவர் சென்ற இடந்தோறும் அவருடைய சுத்த பக்தியுள்ள சிறந்த ஒழுக்கத்தையும் எல்லாம் வெல்ல வல்ல செய்தொழிற் சாதுரியத்தையும் கண்டு கேட்டவர்கள் கிறிஸ்து சமயத்திற் சேர்ந்தார்கள். அவரைக் கண்டு அவர் சொற் கேட்டவர்களுக்கு அனு வேதனு பலத்தால் அவருக்குள்ள மகேசுவரத்திற் சிறிது தோன்றுவண்ணம் வந்தது.

"அறுப்பு மிகுதி அறுப்பவர் சிலர்" எனும் நினைவு இதயத்திற் பாரமாய் அழுத்த, ஐவியர் அன்பின் மலாக்காவிற்கும் ஜப்பானுக்கும் கப்பல் ஏறிப் போனார். போய் அங்கவர் கண்டவர்கள் எல்லாரும் வேறு ஜாதியார், வேறு பாஷை பேசுகிறவர்கள். அங்கு அவர் செய்யத் தக்கது எல்லாம் கூடிப் புலம்பிப் பிரார்த்திப்பது, தலையணையை ஒப்பஞ்செய்து, நோயுற்றோர் படுக்கையின் அருகிற் காத்

திருப்பது, சிறுபான்மை தமது அவயவமான கையுறையை நீரில் தோய்த்துப் பிழிந்து வீழும் துளியால் இறப்பவர்க்கு ஞானஸ்நானம் கொடுப்பது. நல்வரம் அனைத்தையும் விரும்பி ஒன்றுக்கும் அஞ்சாமல் சத்தியத்தின் வெற்றி சிறந்த இத்தொழும்பன் உள்ளளவும் விசுவாசத்தாலும் மனவலியாலும் சுமந்து கொண்டுபோகப்பட்டான். "எனக்கு எவ்வகை மரணம் யாதனை அடுத்திருக்கின்றதோ ஒரோயொரு ஆத்மாவை ரக்ஷிக்கும்பொருட்டு அதை ஒருமுறை அல்ல, பதினாயிரம் முறைபட்டு உத்தரிக்க வரினும் அதற்குச் சித்தமாயிருக்கிறேன்" என அவர் மொழிந்தார். அவர் பசி தாகம் கஷ்டம் நஷ்டம் நானாவகை நாசம் மோசம் இவற்றுடன்போராடி ஓயாது அலுப்பற்றுத் தாம் நினைந்துபோன அன்பின் கருமத்தைச் செய்துகொண்டேவந்தார். நாள் ஏறப் பதினொரு வருஷம் ஊழியம் செய்தபின், நலம் மிக்க இம்மஹாநுபாவர் சீனாவிற்குப் போக வழி காண வருந்தும்பொழுது ஸஞ்சியான் தீவில் ஜ்வரத்தில் அடிபட்டு மாய்ந்து மகிமை எனும் கிரீடம் பெற்றார். இவரினும் உத்தமராகிய வீரர், புனிதர், அகப்பற்று நீக்கியவர், திரமுடையோர் இம்மண்ணுலகில் எந்நாளும் அடி வைத்ததில்லைப்போலும்.

இந்தத் துறையில் ஜாவியருக்குப்பின் வேறு போதகர்களும் இறங்கினார்கள். அவர்கள் இந்தியாவில் ஸ்வார்த்ஸ் **(Schwartz)**, கேரி **(Carey)**, மார்ஷ்மன் **(Marshman)**; சீனாவில் கத்ஸ்லாப் **(Gutzlaff)**, மாரிஸன் **(Morrison)**; தென்கடற் தீவுகளில் உவில்யம்ஸ் **(Williams)**; ஆப்பிரிக்காவில் கம்பெல் **(Campbell)**, மப்பாத் **(Moffatt)**, லிவிங்ஸ்தோன் **(Livingstone)**. எரோமங்காவின் ரத்தசாக்ஷி ஆகிய ஜான் உவில்யம்ஸ் **(John Williams)** ஆதியில் இரும்புக் கருவிகள் செய்து விற்கும் ஒருவனிடத்தில் தொழில் பழக அமர்ந்தார். சிறு பருவத்தில் அவரை எல்லாரும் மந்தபுத்தியென்று எண்ணியிருந்தார்கள். ஆனாலும், பயின்ற தொழிலை

அவர் பணிக்காய்ச் செய்தார். அதில் அவர் மிகக் கைதேர்ந்ததனால், சற்று நாணயமாய்ச் செய்யவேண்டிய கருமார் வேலையை யஜமான் பெரும்பாலும் அவரைக்கொண்டு செய்விப்பான். மணி தூக்கல் முதலிய வேலைகளிலும் அவருக்கு இஷ்டம் உண்டு. ஆனதுபற்றி அடிக்கடி அவர் தொழிற்சாலையைவிட்டுத் தொலைதூரம் போகும்படி நேர்ந்தது. தற்செயலாக ஒரு சமயத்தில் அவர் கேட்ட பிரசங்கம் அவர் மனதிற் பயபக்தி உண்டாக்கிற்று. அதன்பின் அவர் ஓய்வுநாட் பாடசாலை உபாத்தியாயரானார். சங்கத்தார் கூடிய சில கூட்டங்களுக்கு அவர் போயிருக்கையில் கிறிஸ்த போதகரைப் புறத்தேசத்திற்கு அனுப்பும் முயற்சியைக்குறித்துப் பேசக் கேட்டு சிந்தித்து இத்தொழிலைச் சிரத்தையாகச் செய்துவரத் தீர்மானித்தார். லண்டன் மிஷன் சங்கத்தார் அவரைத் தங்கள் மிஷனிற் சேர்த்துக்கொள்ள உடன்பட்டார்கள். தொழில் பழக்கிய யஜமான் அவர் எழுதிக்கொடுத்த காலம் கழியுமுன் கருமான் தொழிற்சாலையைவிட்டு நீங்க அவருக்கு இடம் கொடுத்தான். முக்கியமாய் அவர் தேவ ஊழியம் செய்தது பஸிபிக் சமுத்திர தீவுகளில்—விசேஷமாய் தஹித்தியில் ஐமேயோ, ரயாத்தியா, ராரோதொங்கா. பூர்வ அப்போஸ்தலரைப் போல அவர் தமது கையால் கருமார்வேலை செய்தார், தோட்டம் வைத்துப் பயிரிட்டார், கப்பல் நிர்மாணித்தார். அன்றியும், தீவாருக்குச் சமய தத்துவங்களைப் போதித்ததுடன் நாகரிகர் செய்யும் தொழில் முறைகளையும் உணர்த்தப் பார்த்தார். அவர் இப்படி உழைத்துவரும் காலத்திலேயே எரொமங்கா தீவுக் கரையில் தீவாராற் சங்கரிக்கப்பட்டார்—[illegible] கூட அவரினும் அதிக பாத்திரர் [illegible].

லிவிங்ஸ்தொன் வேதசாஸ்திரியாருடைய (Dr. Livingstone) சரித்திரம் மற்றெதனிலும் மனதிற்கு மிக இதமானது. அவர் தமது சரித்திரத்தை அடக்கமாய் எழுதியிருக்கி

றார். அடக்கம் பணிவு இரண்டும் அவரிடத்தில் முக்கியமாய் விளங்கிய லக்ஷணங்களே. அவர் முன்னோராகிய மலைநாட்டார் ஏழைகளாயினும் யதார்த்தவாதிகள். அவர்களில் புத்தியும் விவேகமுமுள்ளவனென்று பேர் அறிந்த ஒருவன் சாக்காவாயில் தன் பிள்ளைகளை வரவழைத்து அவர்கள் அவனைச் சூழ்ந்து நிற்க, பின் வரும் வார்த்தைகளைச் சொன்னான். இச்சொற்களன்றி அவன் அவர்களுக்கு வேறு சொத்து வைக்கவில்லை:—"பிள்ளைகளே, என் கண்ணுக்கு அகப்பட்ட நமது குடும்ப சரித்திர சம்பிரதாயம் அனைத்தையும் என் நாளில் மிகக் கவனமாய் ஆராய்ந்து பார்த்தேன். நமது மூதாட்களில் ஒருவனாவது அசத்தியவந்தனாயிருந்ததை நான் ஒருபொழுதும் காணவில்லை. ஆனதுபற்றி, இனி உங்களில் எவனாவது, உங்கள் பிள்ளைகளில் எவனாவது சத்திய நெறி தவறி நடக்கச் சம்பவித்தால் அது உதிரப்பற்றாக நமது குலத்திற்கு உரியதென்று கொள்ளலாகாது. அது உங்கள் குணமல்ல. சத்தியவந்தராக இருங்கள் நான் உங்களுக்கு வைத்திட்டுப் போகும் கற்பனை இது". பத்து வயசில் லிவிங்ஸ்டன் க்ளாஸ்கோவின் சமீபத்தில் பருத்தி நூற் சவுளி நெய்தொழிற் சாலையில் பொத்தல் புனையும் தொழில் செய்ய அனுப்பப்பட்டார். முதல் வாரச் சம்பளத்தில் சிறிதுக்கு அவர் லத்தீன் இலக்கண புஸ்தகப் பிரதி ஒன்று வாங்கி அந்தப் பாஷை கற்க ஆரம்பித்து, இராப் பாடசாலை ஒன்றில் சிறிது வருஷகாலம் கற்றுக்கொண்டுவந்தார். காலையில் ஆறு மணிக்கு நெசவுத் தொழிற்சாலைக்கு வேலை செய்யப் போகவேண்டியதனால், தாயார் அவரை நாழிகை ஏறுமுன் படுத்து நித்திரைசெய்ய அனுப்பிவிடுவார். தாய் இப்படிச் செய்யத் தவறிய சமயங்களில் அவர் பன்னிரண்டு மணி வரையிலும் பின்னும் அதற்குச் செல்லுமளவும் விழித்திருந்து பாடம் படிப்பார். இந்தப் பிரகாரம் அவர் சிறிது சிறிதாக வெர்ஜில், ஹாரேஸ் இரண்டு புஸ்தகமும் படித்து முடித்தார். அன்றியும், கற்பித கதைகளன்றி மற்

ர்ப்படும் புஸ்தகம் அனைத்தையும் அவர் விஸ்தாரம் வாசிப்பார்; முக்கியமாய் அவர் வாசித்தவைகள் சாஸ்திர புஸ்தகங்களும் பிரயாண வரலாற்றுப் புஸ்தகங்களுமே. அவருக்கு அவகாசம் மெத்த இல்லை. உள்ள பொழுதெல்லாம் அயலிடங்களில் உலாவித்திரிந்து பூண்டு செடி கொடிகள் சேகரித்துத் தாவரவித்தை கற்றுவருவார். நெசவுயந்திரம் இயலும் இரைச்சலுக்குள்ளும் அவர் வாசித்துக்கொண்டுவருவார். நூல் நூற்கும் யந்திரத்தில் வசமாகப் புஸ்தகத்தைத் திறந்து வைத்துவிட்டுப் போம்பொழுது வரும்பொழுதெல்லாம் ஒவ்வொரு வாக்கியமாய்க் கண்மட்டத்திற்கு வாசிப்பார் - இவ்வாறு இடைப்பற்று முயன்ற அவ்வாலிபர் பயன்படத் தக்க கல்விப்பொருள் மெத்தவும் சம்பாதித்தார். பருவம் ஏற ஏற அந்நிய தேசத்திற் புறச்சமயவாதிகளுக்குப் போதகராகப் போகும் ஆசை எழும்பேய் அவரைப் பிடித்தது. இந்த அபிப்பிராயத்துடன், இத்தொழிற்குப் பின்னும் அதிக யோக்கியதைப்படி வைத்தியநூல் பயில முயன்றார். ஆகவே, அவர் வருஷந்தோறும் மாரிகாலத்தில் கிளாஸ்கோ வித்தியாசாலையில் வைத்திய வித்தியாவகுப்பிலும் கிரேக்கபாஷை கற்கும் வகுப்பிலும் சேர்ந்து கற்கவும் வைதிக வித்தியாபிரசங்கம் கேட்கவும் போதுமானதற்குச் செல்லும் செலவிற்கு வேனிற்காலத்தில் கஷ்டப்பட்டுப் பருத்திநூல் ஆலையிற் சம்பாதிக்கும் பணத்தை மிதச்செலவு செய்து மீத்துவைப்பார். வித்தியாசாலையிற் கல்விபயிலும் அவர் இவ்வளவாய்த் தம்மைக் காப்பாற்றி [illegible] பட்டுச் சம்பாதித்த பணத்தைக் கொண்டேயன்றி, மற்றொருவரிடத்தில் ஒருபொழுதும் ஒரு காசாவது உதவி பெற்றதில்லை. "அக்காலத்தில் கஷ்டப்பட்டு உழைத்ததை இவ்வேளை பின்னோக்கிப் பார்க்கும்பொழுது பாலியத்தில் நான் பயின்ற கல்வியின் முக்கியம் அந்தச் சிரமத்தானென்று உணர்ந்து என் உள்ளம் நன்றி சொல்லாதிரு

க்க முடியாது. சாத்தியப்படுமேயானால், மீளவும் அவவாறே ஏழைமையான ஸ்திதியில் இருக்கவும், இருந்து முன்போல வருத்தி உழைத்து வரவரச் சீர்ப்படவும் விரும்புகிறேன்", என்று அவர் கபடமற்று மொழிந்தார். அவர் வைத்திய சாஸ்திரபாடம் கற்று முடித்து லத்தின் பிரபந்தம் எழுதி ஒப்பித்து, குறித்த பரீக்ஷைகள் எல்லாம் கொடுத்துத் தெளிந்து, வைத்தியர் ரணவைத்தியர் தொழில் செய்ய அதிகாரம் பெற்றார். ஆரம்பத்தில் அவர் சீனாவிற்குப் போக நினைத்தும், அப்பொழுது, அங்கிலேயருக்கும் சீனருக்கும் சண்டை நடந்ததனால் நினைத்தவண்ணம் செய்யக் கூடாதேபோயிற்று. பின்பு லந்தன் மிஷன் சங்கத்தார் வசம் தேவ ஊழியம் செய்ய இடம் தரும்படி கேட்க, அவர்கள் அவரை ஆப்பிரிக்காவிற்கு அனுப்பினார்கள். அவர் அத்தேசத்திற் போயிறங்கியது 1840-ம் ஆண்டு. தாமாகப் பிரயத்தனம் செய்து சீனாவிற்குப் போவது அவருக்கு முன் உண்டாயிருந்த அபிப்பிராயம்; "தான் நினைந்தபடி செய்து நடந்து வழக்கப்பட்ட ஒருவனுக்கு ஒருவாறு பிறர் சொற் கேட்டு நடப்பது இதமாயிராது". ஆதலால், லந்தன் மிஷன் சங்கத்தார் சொல்லில் ஆப்பிரிக்காவிற்குப் போவது தமக்குச் சற்றே விசனமாயிருந்ததென்று அவர் சொல்லுகிறார். ஆப்பிரிக்காவிற் போய்ச் சேர்ந்து அவர் வெகு சிரத்தையோடு வேலை தொடங்கினார். தம் முயற்சியின்றிப் பிறர் வேலையிற் பிரவேசிப்பதை நினைக்க அவர் மனம் சகிக்கவில்லை. ஆனால் பிறரைச் சாராமல் தமது தலைப்பாடாக விஸ்தாரம் வேலைசெய்யக் கருதினார். கட்டடவேலை முதலிய கைவேலைகள் செய்து அவர் அதற்குப் பக்குவசாலியானார். இதனுடன், கல்வி கற்பிக்கவும் [illegible] வந்தார். பகலில் தொழில்செய்து [illegible] அதிக சோர்வும் களையும் மேலிட்டு இராத்திரிகாலத்தில் கல்வி கற்க முடியாதிருந்ததென்று அவர் சொல்லுகிறார். பருத்திஆலை [illegible] னர்க்கும் வேலையைப்போல இந்தத் தொழிலும் ஊக்கத்

தைக் குறைத்து உடலை மெலிவித்ததாம். பிக்வானர் வசிக்கும் இடத்தில் உழைத்துவரும்பொழுது அவர் கால்வாய் வெட்டுவார், வீடு கட்டுவார், கழனி திருத்திப் பயிரிடுவார், ஆடு மாடு வளர்ப்பார், மெய் வருந்தி உழைக்கவும் தெய்வம் தொழவும் சுதேசிகளுக்குப் போதிப்பார். அவர்களிற் சிலருடன் அவர் முதல் முதல் கால்நடையாய்க் [illegible] பிரயாணம்போகப் புறப்பட்டபொழுது, தம்முடைய தோற்றத்தையும் தேகபலத்தையும் குறித்து அவர்கள் பின் வருமாறு வார்த்தையாடியதை அவர் ஒட்டுக்கேட்டறிந்தார்:— "இவர் பலவானல்ல, ஒற்றை நாடி – அந்தப் பைகளுக்குள் (காற்சட்டை) நுழைந்திருப்பதனால் அவர் தேகம் பாரித்துத் தோன்றுகிறது. அவர் சீக்கிரம் களைத்து விழுந்து போவார்". இவ்வண்ணம் அவர்கள் தம்மைக் குறித்துச் சொன்னது கேட்டு, மலைநாட்டிற் பிறந்த அப்போதகருக்கு உதிரம் பொங்க, அவர் தமது கால்நடை வன்மையைக்குறித்து அவர்கள் சரியான அபிப்பிராயம் சொல்வது தமது செவியேறுந்தனையும் பல நாள்வரையில் அலுப்புப் பாராட்டாமல் அவர்களை மிகு விரைவாய் நடத்திக்கொண்டு போனார். ஆப்பிரிக்கா தேசத்தில் அவர் செய்தவைகள், உழைத்த வகை அனைத்தையும் 'மிஷன் போதகர் பிரயாணம்' எனும் பெயர் வகித்து அவர் இயற்றிய கிரந்தத்தால் அறியலாம். இதனையொத்த பிரசுரமான பிரயாண வரலாற்றுப் புஸ்தகங்களில் அது மிகச் சிறந்தது, எவர் மனதையும் கவரும் வனப்புள்ளது. அக் காலையில் அவர் செய்து உலகம் அறியப்பெற்ற [illegible] அவர் [illegible] ணத்தைத் தீர்ப்பாய்க் குறிப்பிடவேண்டுவது. அவர் [illegible] ஆப்பிரிக்காவிற்குக் [illegible] ஆபிக் கவும் உதவாதென [illegible], 2000 – மைலுக்கு மேற் பெருங் கலம் செய் [illegible] அனுப்பினார். தாம் இயற்றிய பிரசுரம்செய்த பிரயாண விளக்கப் புஸ்தகங்கள் விற்றுத் தேறும் லாபத்தைத் தம் பின்னைக்

ஆக்கு எழுதிவைத்தாரே. அதில் மேற்குறித்த 2000-பௌண்ட் எடுத்து [illegible] ஸ்தாபிக்க அவர் திட்டம் செய்தார். இவ்வளவைத் தெளிவாக எழுதி அனுப்பியது காரியத்துளவில் 'இக்குறையைப் பின்னவர் தாமே நிறைவித்துக் கொள்ளவேண்டும்' என்று அவர் வெளியிட்டது பெருமையே.

ஜான் ஹௌவர்ட் (John Howard) சரித்திரம் இவ்வாறே பகைப்பட்டிருந்து கருமம் முடிக்கும் மனவலிக்குச் சிந்தையில் நன்றாய்ப் படத்தக்க திருஷ்டாந்தமாம். செய்கடன் முடிக்கும் சாதனமென்று கண்டு எதனாயினும் ஒரு அபிப்பிராயத்தைச் சாதிக்கும் பொழுது நேரிடும் மலைபோலும் தடைகளைத் தேக பலத்தையும் முதலாய் விலக்க வல்லதென்று அவருடைய உயர்ந்த நற்குண நற்செய்கைகளால் ஒப்பிக்கப்பட்டது. சிறை இருப்பவர்களுடைய மிடியைத் தீர்க்கும் அபிப்பிராயம் ஒன்றிலேயே அவர் சிந்தனை எல்லாம் சென்றது. அந்த ஆசை அவரைப் பிடித்து ஆட்டியது, எவ்வகைப் பாடும் அபாயமும் தேகபீடையும் ஜீவன் உள்ளளவும் அவர் கைக்கொண்ட இப்பெருங் கருமத்தைச் சோரவிட்டு விலகும்படி செய்யமாட்டாதேபோயின. அவர் எதிலும் நிபுணரல்ல, அவர் சாமர்த்தியமும் மிதமே - ஆனாலும் அவர் இதய சுத்தியும் திட பக்குவமுள்ளவர். அவர் காலத்திலும் அவர் செய்து அடைந்த அருந்தொழிற் சித்தி வியக்கத்தகும் அளவினதாயிருக்கிறது; அவர் செல்வாக்கு அவருடன் ஒழிந்துபோகவில்லை - [illegible]; அதன் சக்தி நிலைபெற்று நின்று [illegible] நாகரிகம் அபிவிர்த்திக்கும் [illegible] சட்டதிட்டங்களை [illegible] கொண்டிருக்கின்றது.

செய்யக் குறித்திருக்கும் தொழிலை மனவலியுடன் செய்துமுடித்து, தம் ஒழுக்கத்தால் உலகத்தைச் சீர்ப்படுத்தி

யது ஒன்றொழிய வேறு ஞாபக முத்திரை யாதுமின்றி, நன்றி சொல்லி இளைப்பாறும் இடத்திற்குப் போவதே அங்கிலேயருக்கு ரம்மியம், அவர்கள் தற்கால ஸ்திதி இதே. இந்த ஸ்திதியைத் தோற்றுவித்த பொறுமையும் சலிப்பறக் கருமம் முடிக்கும் துணிவுமுள்ள பலரில் பின்னும் ஒருவர் ஜோனஸ் ஹானவே (Jonas Hunway). அவர் பிறந்தது 1712-ம் ஆண்டு, போர்ட்ஸ்மத்தில். அங்குள்ள மரக்கலம் செப்பனிடும் துறையில் உக்கிராண வேலை செய்த அவர் பிதா அகாலமரணம் அடைந்துபோக, அவர் சின்னஞ்சிறு பருவத்தில் அநாதரானார். அவர் தாயார் பிள்ளைகளுடன் அங்கிருந்து லந்தன் நகரத்திற்குப் போய் வாசஞ்செய்து அவர்களைப் பள்ளிக்கு வைப்பித்து, மானத்தைப் போக்கடிக்காமல் வளர்த்துவர வெகு அவஸ்தைப்பட்டார். பதினேழு பருவத்தில் வர்த்தகர் ஒருவரிடத்தில் தொழில் பழக ஜோனஸ் லிஸ்பனுக்கு அனுப்பப்பட்டார் அங்கு அவர் கருத்தைச் சிதற விடாமல் தொழிலிற் செலுத்திப் பொழுதோடு சென்று, கணமும் மனநிறையும் உடையவராக நடந்ததைக் கண்டறிந்தோர் அனைவராலும் அவருக்கு அபிமானமும் நன்குமதிப்பும் உண்டாயின. 1743-ம் ஆண்டு லந்தனுக்குத் திரும்பிப்போய் இருக்கையில், ஸேந்து பீற்றர்ஸ்பர்க்கில் வர்த்தகசாலை ஸ்தாபித்து காஸ்பியன் கடற்றுறையிற் சரக்கு ஏற்று இறக்குமதி செய்யத் தொடங்கியிருந்த அங்கிலேய வர்த்தகர் சிலர் அவரைப் பங்கு வர்த்தகராகக் கேட்டு உடன்படுத்தினார்கள். ஆகவே, அவர் வர்த்தகத்தை விர்த்திசெய்யும் பொருட்டு ருஷியாவிற்குப் போய் ராஜதானியிற் சேர்ந்து சிறிது காலத்தின் பின் இருபது வண்டிச்சுமை அளவிற்குச் சீமைச் சவுளிச் சிப்பம் கொண்டு பாரசீகத்திற்குப் புறப்பட்டார். ஆஸ்திரகான் துறையிற் சேர்ந்து, காஸ்பியன் கடலின் தென்கிழக்குக் கரையில் உள்ள அஸ்திராபாத்துக்குக் கப்பல் ஏறிப்போய், சவுளிச் சிப்பங்களைக் கரையில் இறக்கி முடியவும், ஷார்க்கலகம் உண்டாய்

அவர் சரக்கெல்லாம் பறிமுதலாக எடுத்துக்கொள்ளப்பட்டது. பிற்பாடு அதன் அதிக பாகத்தை அவர் மீட்டுக்கொண்டார்; ஆனாலும், அவர் செய்த பிரபல முயற்சியின் பயனை முக்காலேமுண்றுவீசம் இழந்துபோனார். அவரையும் அவர் கூட்டத்தாரையும் அகப்படுத்திக்கொள்ளச் சர்ப்பனை நடந்தது; ஆனது பற்றி, அவர் கப்பல் ஏறி; கடலில் வெகு அவஸ்தைப்பட்டு, கிலானில் க்ஷேமமாய்ப் போய்ச்சேர்ந்தார். இச்சமயத்தில் அவர் தப்பிப்பிழைக்கவும் "ஒரு பொழுதும் அயருறல் ஆகாது" எனும் நினைவு அவர் இதயத்தில் முதலில் உற்பத்தியாயிற்று. பிற்பாடு அவர் இவ்வாக்கியத்தைத் தாம் உள்ளளவும் நீதிவாக்கியமாய் அநுசரிக்கத் தொடங்கினார். பின்பு ஸெந்து பீற்றர்ஸ்பெர்க்கில் ஐந்து வருஷம் வசித்து வர்த்தகம் செய்து வர வர விர்த்தி அடைந்தார். இங்கிலாந்தில் பந்து ஒருவர் அவருக்குச் சிறிது சொத்து வைத்து இறந்துபோனதனாலும், அவர் கையில் அதிக திரவியம் இருந்ததனாலும், 1750-ம் வருஷம் அவர் ருஷியா தேசத்தினின்று திரும்பித் தமது ஜன்ம தேசத்திற் போய்ச்சேர்ந்தார். தாம் இங்கிலாந்திற்குத் திரும்பிய தாற்பரியம் மிகவும் குன்றிய தேக சௌக்கியத்தை விர்த்தி செய்வதும், தம்மால் இயன்றமாத்திரம் தமக்கும் பிறர்க்கும் நன்மை செய்வதுமே என்று அவர் வெளியிட்டார். பின்பு அவர் உள்ள நாள் எல்லாம் மனுஷருக்கு உபகாரமும் பிரயோஜனமுமான செய்கைகளைச் செய்துகொண்டுவந்தார். அவர் தமது வருமானத்தில் அதிக பாகத்தைத் தேசோபகாரமான கிரியைகளில் செலவிடும் பொருட்டுத் தாம் அடக்கமாயிருந்து மிதச்செலவு செய்துகொண்டுவந்தார். தேசோபகாரார்த்தம் அவர் முதல் முதற் சிரத்தையாய்ச் செய்தது லண்டன் நகரத்துப் பெருஞ்சாலைகளின் மராமத்து. அவர் இதிற் செய்த முயற்சி பெரும்பாலும் தெரிந்தது. 1755-ம் வருஷம் பிராஞ்சியர் தண்டெடுத்து வருவதாக வதந்தி பிறந்ததும்

உலாவியதனால், கடலோடிகளை எந்நாளைக்கும் குறையாமல் வைத்திருக்க உத்தம உபாயம் ஏதென்று மெஸ். ஹான்வே முக்கியமாய்ச் சிந்திக்கத் தொடங்கினார். அவர் ராஜவர்த்தகசாலையில் வர்த்தகரையும் கப்பற்காரரையும் சபைகூடிவர அழைத்து, ராஜாவின் கலங்களில் கடலோடும் சேவகம் செய்ய ஆடவரையும் வாலிபரையும் சேர்த்துக்கொள்ளும்படி ஒரு சங்கம் ஏற்படுவது உத்தமமென்று யுக்தி சொல்ல, அவர்கள் அந்த யுக்தியை ஆனந்தாவேசத்துடன் அங்கீகரித்தார்கள். சங்கம் ஒன்று ஏற்பட்டது. அதற்கு உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டார்கள். மெஸ். ஹான்வே அதன் சர்வ காரியகர்த்தரானார். இதன் பயனாக 1756-ம் ஆண்டு கடலோடிகள் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. இந்த ஸ்தாபனம் இங்கிலாந்திற்கு மிக அனுகூலமாய் முடிந்தது, அன்றியும் இன்றளவும் மிகப்பெருகப் பெரும்பயன் விளைவிக்கின்றது. சங்கம் உற்பத்தியாகி ஆறு வருஷத்திற்குள் தொழிலில் நன்றாகப் பண்பட்டுக் கடலோடிகள் வகுப்பிற் சேர்ந்த சிறுவர் 5451, ஆடவர் 4787-பெயர். காலதவணையில் இச்சங்கம் தவறாது நடந்தேறுகின்றது. கருத்தாய்க் கல்வி பயின்றதன்மேல் வருஷவாரி முக்கியமாய் வர்த்தகர் சேவகத்தில் கடலோடும் தொழில் பழகச் சேரும் ஏழைகளாகிய சிறுவர் முன்பின் 600-பெயர்.

இந்த முயற்சியில் கழிந்த காலம் போக, மிகுந்த காலத்தில் மெஸ். ஹான்வே சாதுர்யத்தில் வெகு ஜனோபகாரமான விசேஷ தர்மசாலைகளை ஏற்படுத்தியும் ஸ்தாபித்தும் வந்தார். அதற்கு அனேக வருஷத்திற்குமுன் தோமாஸ் கோராம் என்பவர் கைவிடப்பட்ட பிள்ளைகளை எடுத்து வைத்திருந்து வளர்க்கும்படி தர்மவைத்தியசாலையொன்றை ஸ்தாபித்திருந்தார். அந்த ஸ்தாபனத்தின் பெயரில் வெகு கஷ்டம் பிடித்துச் சிக்கலை உண்டாய்ப் மெஸ். ஹான்வே அதற்கு அனுகூலியாய் கைக்கொண்டார். இவ்வாறு தர்மசாலை ஒன்று ஆதரவாய்

ஏற்பட்டது கண்டு தாய் தந்தையர் வெகு பெயர் தர்மச்சாறு உண்டு பிழைக்குமென்று தம் பச்சைக்குழந்தைகளை வீதிகள் சந்துகளிற் போட்டுவிடத் தலைப்பட்டார். ஆகவே, அந்த தர்மசாலையால் புண்ணியத்திலும் பாவம் அதிகம் விளையுமெனத் தோன்றியது. அது கண்டு, மெசர். ஹான்வே வெள்ளம் வருமுன்னே அணை கட்டுவதுபோல், அந்த வினையைத் தலைப்படுமுன் தடுக்கும் உபாயம் செய்யத் தீர்மானித்து, அக்காலத்தில் ராஜீவதயையுள்ள பெரியவர்கள் சொல்லைப் பாராட்டி இளைத்துப்போகாமல் இம் முயற்சியிற் பிரவேசித்தார். நினைத்த கருமத்தைக் கடைப்பிடியாகக் கொண்டு, நாளடைவில் அந்தத் தர்மத்தை அதன் முறைமையான தாற்பரியம் பலிக்கும் துறையில் மீளவும் திருப்பிவிட்டார். அவர் செய்தது யுக்தமென்று காலமும் அநுபவமும் மெய்ப்பித்தன. இதன்றி, மாக்டலின் தர்மசாலையும் முக்கியமாய் அவருடைய பிரயத்தனமூலம் ஸ்தாபிக்கப்பட்டது. ஆனால் அவர் மிக வருந்தி உழைத்து இளைப்பறத் தொடுபிடியாகச் செய்த எத்தனம் எல்லாம் அக்கோவிற்பற்றில் உள்ள ஏழைக்குடிகளின் குழந்தைகளுக்காகத்தான். அக்காலத்தில் அங்குள்ள தரித்திரர் பிள்ளைகளுக்காக விசாரப்படுவோர் இல்லை. அவர்கள் நிலை நிர்ப்பந்தமாயிருந்தது. அவர்களில் இறந்தோர் தொகையை எண்ணிப் பார்ப்பவர்க்குத் திகில் பெருகாதிராது. ஆனால், காட்டுப்பிள்ளைகளைக் காப்பாற்ற முயன்றபடி, வறியோர் பிள்ளைகளைத் தாயர் தனித்து ஈடேற்றவோர் கூடி யாதும் முயற்சி அடியிட நினைக்கவில்லை. ஆனது பற்றி, ஜோனஸ் ஹான்வே இக்கருமத்தில் மனம் கனிந்து முயன்றார். ஆரம்பத்தில் தலைப்படும் வேலை இவ்வண்ணமென்று பிறர் உதவியின்றித் தாம் ஒருவரே அங்கங்கே போய் விசாரித்து அறிந்தார். லண்டன் நகரங்களிலுள்ள தரித்திரமுடையோர் வீடுதோறும் சென்று அங்குள்ள மர்மத்தைக் கண்டார். தரித்திரரின் பிணியுற்றோரை வைத்து உபசரிக்கும் வைத்தியசாலைகளையும் போய்ப் பார்த்து, எங்கணும்

அதன் சமீபத்திலும் உள்ள பிரதி தொழிற்சாலையும் நிர்வகிக்கப்படும் முறையை விவரணமாய் அறிந்தார். அதன்மேல் அவர் பிரான்சு தேசத்திற்கும் ஒலாந்து தேசத்திற்கும் போய், ஏழைகளை ஏற்று வைத்திருந்து உபசரிக்க ஏற்பட்டிருந்த வீடுகளைப் போய்ப் பார்த்து, இங்கிலாந்தில் நயம்பெற ஏதேது கைக்கொள்ளத் தகுமென அவர் சிந்தையிற்பட்டதோ அதை எல்லாம் குறிப்பித்து வைத்தார். அவர் இந்த நற்கருமத்தில் போக்கிய காலம் ஐந்து வருஷம்; அப்பால் இங்கிலாந்திற்குத் திரும்பிவந்து சேர்ந்தபின், தாம் கண்டறிந்த வரலாறு அனைத்தையும் அச்சிடுவித்துப் பிரசித்தம் செய்தார். அதன் சித்தியாகத் தொழிற்சாலைகள் அனேகம் சீர்கேடு விலக்கித் திருத்தப்பட்டன. 1761-ம் ஆண்டு லந்தன் கோவிற்பற்றுகள்தோறும் வரப்பெற்ற குழந்தைகள், மீண்டு அனுப்பிவிடப்பட்ட குழந்தைகள், இறந்துபோன குழந்தைகள் இத்தனை இத்தனை பெயரென்று வருஷவாரி வழுவறக் கணக்கு எழுதிவைக்க வேண்டுமென அவர் சர்க்காரால் சட்டம் ஒன்று பிறக்கும்படி செய்தார். இச்சட்டம் தவறாமல் நடக்கும்படி செய்யும்பொருட்டு அவர் தாமே அத்தியக்ஷராய் ஏற்பட்டு இளைப்பற விழித்திருந்து நிர்வகித்தார். அவர் காலையில் அங்கங்குள்ள தொழிற்சாலை அனைத்தையும் பார்வையிட்டுத் திரிவார். பிற்பகலில் பார்லிமெந்து சபையாரை ஒருவர் மாறி ஒருவராகப் போய்க் கண்டு பேசுவார். எவராவது தமது சொல்லை ஏற்காமல் தள்ளினால் அவர் அதை நினைந்து வருந்தாமல் தாங்கிக்கொள்வார்; ஆக்ஷேபித்தால் அதற்குச் செல்லும் உத்தரம் சொல்வார்; அவரவர் குணபேதத்தைக் கண்டு அதற்கு ஏற்க நடப்பார். அவர் இவ்வளவெல்லாம் அலுக்காது உழைத்தும் இசைந்தது நாலு நாள் பத்து நாள் என்னும் சொற்பகாலம் அல்ல, பல வருஷகாலம். கருமத்தில் இவரைப்போலக் கடைப்பிடியுள்ளவர்கள் இல்லையென்று சொல்லும்படி கொஞ்சம் குறையப் பத்து வருஷம் வருந்தி உழைத்தபின், அவர் முழுதும் தமது

முயற்சியால் மற்றொரு சட்டம் ஏற்படுத்துவித்தார் (III-வது ஜார்ஜ் 7 அதி. 39). மரண அறிக்கை நிபந்தனை ஏற்பட்டிருக்கும் கோவிற்பற்றுகளைச் சேர்ந்த குழந்தைகள் அனைத்தும் ஏழைகள் தொழிற்சாலைகளில் அல்ல, ஆறு பருவம் ஆமளவும் நகரத்திற்குச் சில மைல் தூரத்திற்கு அனுப்பி அங்கே மூன்று வருஷத்திற்கு ஒரு முறை தெரிந்து ஏற்படுத்தப்படும் பிரதிபாலனர் விசாரணையில் வைத்திருந்து வளர்க்கப்படவேண்டுமென்பது அந்தச் சட்டத்தின் தாற்பரியம். ஏழைஜனங்கள் இச்சட்டத்தை "குழந்தைகளைப் பிழைப்பிக்கும் சட்டம்" என்பார்கள். இச்சட்டம் ஏற்பட்ட வருஷத்திற்குப் பின்விட்ட வருஷங்களின் மரண அறிக்கைப் புஸ்தகங்களையும் முன்விட்ட வருஷங்களின் அறிக்கைப்புஸ்தகங்களையும் திறந்து கணக்கு ஒப்பு உயர்வுதாழ்வு பார்த்தபொழுது, மேற்குறித்த குணோத்தமராகிய விவேகி புத்தி பூர்வமாய் இவ்விஷயத்தில் தலையிட்டதனால் பல்லாயிரம் குழந்தைகள் தப்பிப் பிழைத்தனவென்று கண்டது.

மனுஷர் க்ஷேமத்திற்கு அனுகூலமான நற்கருமம் யாதாயினும் லண்டன் நகரத்தில் எங்கெங்கே நடந்தாலும் அங்கங்கெல்லாம் அதில் ஜோனஸ் ஹான்வே கைகலந்திருப்பார் என்பதற்கு ஐயம் இல்லை. ஜமாவித்தன பெருக்குவோருடைய குழந்தைகளைக் காக்கும்படி முதலில் ஏற்பட்ட சட்டங்களில் ஒன்று அவர் தன்னையாற் பிறந்தது. மன்ட்ரீலிலும் பார்படோஸைச் சேர்ந்த பிரிட்ஜ் தௌனிலும் அக்கினிகண்டத்தால் அதிக சேதம் சேர்ந்தபொழுது, அவர் கஷ்டப்பட்டவர்களுக்குச் சகாயம் அளிக்க உதவும்படி கையொப்ப ரூபமாகத் திரவியம் சேர்த்தார். சமாட்டவினைப் பத்திரம் அனைத்திலும் அவர் பெயர் பதிந்திருந்தது. அவர் சொப்பிரயோஜனத்தில் நாட்டமற்ற லிஷ்கபடியென்று சமஸ்தரும் ஒப்புக்கொண்டனர். ஆனால், அவர் சொந்த ஸ்வல்பம் அதை அவர் தீர்ப்பாய்ப் பிறருக்கு இறைத்து

விட்டு வெறுங் கையராவதைப் பார்க்கச் சிலருக்குக் கண் சகிக்கவில்லை. லந்தன் நகரவாசிகளின் தலைவர் ஐந்து பெயர் மெஸ். ஹோர் எனும் காரியவர்த்தரைத் தமக்குத் தலைவராக ஏற்படுத்தி, அப்பொழுது பிரதம மந்திரியாயிருந்த பியூத் பிரபுவை ஒரு கூட்டமாய்ப் போய்க் கண்டு நகரப்பதியோர் எல்லாரும் கேட்பதுபோல, அந்தச் சற்பாத்திரர் தமது சுகத்தைப் பாராட்டாமல் தந் தேசத்திற்காகச் செய்துவரும் மகோபகாரங்களைச் சிறிது கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அவர்கள் விண்ணப்பம் வியர்த்தமாய்ப் போகவில்லை. அடுத்து விரைவில் அவ்வுத்தமர் கப்பல் இராணுவத்திற்குப் போஜன பதார்த்தம் சேகரிப்பித்துக் கொடுக்கும் கமிஷனர்களில் ஒருவராக நியமிபெற்றார்.

மெஸ். ஹான்வே வாழ்நாள் அறுதியிட்டியிருக்கும் காலத்தில் மிகவும் பலக்ஷயப்பட்டார். போஜன பதார்த்தம் சேகரிப்பித்துக் கொடுக்கும் சபையில் உத்தியோகம் கைவிடுவது ஆவசியகமென்று கண்டு விட்டுவிட்டார். விட்டும், ஏதும் முயற்சி செய்யாதிருக்க அவரால் முடியவில்லை; ஞாயிற்றுக்கிழமைப் பாடசாலைகள் ஸ்தாபிக்கவும், ராஜதானி வீதிகளில் அகதிகளாய்த் திரிந்த திரளான கிரோவருக்கு உதவி புரியவும், தேவாரின்றித் திக்கற்றிருந்த சிலருடைய அயனை ஆற்றவும் அவர் வருந்தி உழைத்தார். ஞாயிற்றுக் கிழமைப் பாடசாலை ஸ்தாபிக்கும் முயற்சி அக்காலத்திலேயே உற்பத்தியாயிற்று. அவர் காருண்யமான துன்பம் துயரையும் கண்டு பயின்றிருந்தும், தாமே உல்லாசமாயிருப்பார். உலகம் இவ்வாறிருக்குமாறும், இத்தனை செய்ய தேடி ஆகிய அவர் தாமே வலிய வருந்திக்கொண்ட திரளான வேலையைச் செய்து முடிக்கத் தாள்வாரா - தனைார். வினை ஒழிந்திருக்க அவர் மெத்தவும் பயந்தவர். அவர் மற்றொன்றுக்கும் இத்தனை பய

ப்படவில்லை. தேக வலி குன்றியும், அவர் தைரியசாலி, முயற்சியில் சோர்பில்லாதவர். பிறர் நிந்தை சொல்வார்களென்பதை அவர் இருமையும் பொருள் செய்யவில்லை. அவருக்குமுன் பெரிய மனிதர் குடை பிடித்துக்கொண்டு லண்டன் நகரத்து வீதிகள் தோறும் கால்நடையாய்த் திரியக் கண்டதில்லை. இப்படிச் சொல்வது கேட்டுச் சிலர் இதென்ன அற்ப காரியந்தானேயென்று எண்ணினாலும் எண்ணுவார்; ஆனால் இது அற்பமல்ல. இக்காலத்தில் லண்டன் வர்த்தகர் எவராவது குடைபோல முன்புறம் கவிந்த குல்லா தரித்துக்கொண்டு காரின்றியில் வீதியிற் செல்வாரானால், நாலு பெயரும் கவனித்துக் கேலியாய் ஏதும் சொல்வதைச் சகித்துக்கொண்டு போவது சற்றுச் சங்கடமென்று காண்பார். மெஸ். ஹான்வே முப்பது வருஷகாலம் குடைபிடித்துக் கால்நடையாய்ப் போக வரத் துணிப்பட்டது கண்ட பிற்பாடுதான் குடை பெருக வழங்கத் தொடங்கியது.

ஹானவே தளர்வில்லா மானமும் உண்மையும் மனத்தையுமுள்ளவர்; அவர் சொல்லும் சொல் அனைத்தையும் நம்பலாம். சத்தியம் தவறாத வர்த்தகர்பெயரில் அவருக்கு அபிமானம் மிகுதி. அவ்வபிமானம் முக்காலே மூன்றுவீசம் மாதா பிதா குரு வணக்கத்திற்கு ஒப்பாயிருந்தது. இந்தக் காரணத்தினாலேயே, எதையும் புகழாதிருந்த அவர் இவ் விஷயம் ஒன்றைப் புகழ்ந்து கொண்டாடும்படி ஆயிற்று. அவர் வாக்குப் பிரகாரம் தவறாமற் செய்துவந்தார். வர்த்தகராயிருந்தபொழுதும் சரி, பின்பு கப்பல் ராணுவத்திற்குப் போஜன பதார்த்தம் சேகரித்துக் கொடுக்கும் கமிஷனராயிருந்தபொழுதும் சரி, அவர் ஒழுக்கத்தில் மாசு மறு ஒன்றும் இல்லாதிருந்தது. ஒப்பந்தக்காரரிடத்தில் ஸ்வல்பத்தில் ஸ்வல்ப உபகாரமெனினும் கைநீட்டி வாங்க அவர் மனம் ஒப்பாது. போஜனபதார்த்தம் சேகரித்துக் கொடுக்கும் உத்தியோக சாலையில் இருக்கையில் யதாவி

னும் உபகாரம் அனுப்பப் படும்பொழுது, "இவ்வுத்தியோக சாலையைச் சேர்ந்த எவரிடத்திலும் யாதொரு வஸ்து ஏற்றுக்கொள்வது இல்லையென்று நியமம் செய்திருக்கிறேன்" என்று சொல்லி மரியாதையோடு அதைத் திருப்பி அனுப்பிவிடுவார். தமக்குப் பலம் ஒடுங்குவது கண்டபொழுது, அவர் நாட்டகத்திற்குப் பிரயாணம்போக எத்தனிக்கும் வண்ணம் அத்தனை உல்லாசமாய் மரணத்திற்கு எத்தனித்தார். வியாபாரிகள் யாவருக்கும் செல்லுமதியான தொகையைக் கொடுத்தனுப்பி, இஷ்டரிடத்தில் செலவுபெற்று, தமது காரியங்களை ஒரமப்படுத்தி, சுத்த வஸ்திரம் உடுத்துவித்து நீண்டு நிமிர்ந்து படுத்து, 74 - பருவத்தில் கலக்கமற்றுச் சாந்த மனதோடு தேகவியோகமானார். அவர் சொத்து ஆகக்கூடி இரண்டாயிரம் பௌண்ட் காணும். அதில் நாட்டமுள்ள பந்துகள் எவரும் இல்லை. ஆனதுபற்றி, அவர் அதைப் பல அனாதர்களுக்கும் தாம் இருக்கும்பொழுது அன்பாய் ஆதரித்துக்கொண்டுவந்த வறிஞருக்கும விபாகித்துக் கொடுத்தார். எக்காலத்திலானாலும் நேர்மையும், மனவலியும், வருந்தி உழைக்கும் பிரகிர்தியும், சுத்த இதயமும் உள்ளவரென்று உடம்படுத்த எவர்க்கும் இளைக்காத ஜோனஸ் ஹான்வே என்பவருடைய சிறந்த சரித்திரச்சுருக்கம் இதே.

ஒருவனுடைய மனோற்சாகத்தின் பலத்திற்குப் பின்னும் ஒரு வியக்கத் தகும் திருஷ்டாந்தம் கிரான்வில் ஷார்ப் (Granville Sharp) சரித்திரம். அம் மனோற்சாகபலம் பிற்காலத்தில் சிறை நீக்கி வியவகாரத்தில் உழைத்த உத்தமர் கூட்டத்தில் பாய்ந்தது. அவர்களில் பிரதானிகள் கிளார்க்ஸன் (Clarkson), உவில்பர்போர்ஸ் (Wilberforce), பக்ஸ்டன் (Buxton), ப்ரௌகம் (Brougham). சிறைநீக்கு வியவகாரத்தில் இவர்கள் எவ்வளவுமேல் – ஆனாலும், கருமத்தைப்பிடி, மனவலி, நெஞ்சகத்துணிவு எனும் இந்தக் குணங்களில் கிரான்வில் ஷார்ப் சிரேஷ்டர் : மேற்சொல்லி

யவர்கள் எல்லாரினும் பெரியவராகவும் ஆவார். அவர் ஆதியில் தௌஅர் ஹில்லில் சணநூல் யந்திர செய்வான் ஒருவனிடத்தில் தொழில் பழகினர். தொழில் பயின்று தெளியக் குறித்த காலம் கழிந்தபின் அவர் அத்தொழிலை விட்டு, பீரங்கிச்சாலையில் சிறிதராக அமர்ந்தார். அவர் ஒழிவு கண்டு கிரேயவனைச் சிறை சேர்க்கும் முயற்சி செய்தது இவ்வெளிய தொழிலில் ஏற்பட்டிருக்கும் காலத்திலேதான். தொழில் பழகிவரும் காலத்திலும், ஏதாயினும் நற்கருமத்திற்காக எவ்வளவும் தம் இஷ்டமாய் உழைக்க எப்பொழுதும் சித்தமாயிருந்தார். இதற்கு ஒரு திருஷ்டாந்தம்,— சணநூல் நெசவுத்தொழில் பயின்றுவரும்பொழுது அவருடன் தொழில் பயின்று அவர் வீட்டில் இருந்த அத்வைதவாதி ஒருவன் சமய விஷயங்களில் அடிக்கடி அவரைத் தர்க்கத்தில் இழுத்துவிடுவான். க்ராவிலுக்கு க்ரீக் பாஷை தெரியாததனாலேயே திரியேகேச்சுரவாதி ஆகிய அவர் சில வேதவாக்கியங்களுக்குத் தப்பர்த்தம் பண்ணும்படி நேர்ந்ததென்று அவ்வாலிபன் வலியுறுத்தி மொழிவான். அது கேட்டவுடன் சாயரக்ஷைவேளையில் க்ரீக் பாஷை கற்கத் தொடங்கிச் சிறிது காலத்திற்குள் அதில் அதிக விற்பத்தி அடைந்தார். அன்றியும், அவரோடு தொழில் பயின்ற மற்றொரு வாலிபன் யூதன். தீர்க்கதரிசனங்களுக்கு அர்த்தம் பண்ணுவதைப்பற்றி அவனுக்கும் அவருக்கும் விவாதம் உண்டாக, அவர் ஹீப்ரு பாஷையையும் தடையறக் கற்றுத் தேறும்படியாயிற்று.

ஆனால், அவர் காலத்தில் முக்கியமாய் உழைத்த உழைப்பிற்கு அவர் மனதைத் திருப்பி வழிகாட்டிவிட்ட காரணத்திற்குப் பிறப்பிடம் அவர்க்குள்ள தயவும் தன்னளியுமே. [illegible] வைத்தியம் செய்த அவர் சகோதரர் உவில்லியம் [illegible] புத்திசொல்வார். வைத்தியசாலையில் அவரைக் கண்டு கைபுதவி ஏதும் செய்யக் கேட்பவர்கள் வெகு பெயர். அவர்களில் ஒருவன் ஆம்பி

ரிக்கா தேசத்தான்—ஏழை. அவன் பெயர் ஜானதன் ஸ்ட்ராங் (Jonathan Strong). அப்பொழுது லண்டனில் இறங்கியிருந்த பார்படோஸ் வியாபாரி ஆகிய அவன் எசமான் அவனை இரக்கமற்று வருத்தியதுமன்றி, அவன் கால் முடமாகிக் கண்ணொளி குன்றி உழைக்க அசக்தனென்று தெரியவந்தது. இனி அவனை அடிமைகொண்டு கஷ்டமே தவிர நயம் இல்லையென்று எசமான் எள்ளளவும் இரக்கமின்றி நடுத்தெருவிற் பட்டினியால் வருந்த அநாதியாக விட்டுவிட்டான். வியாதி பல திரண்டு உடம்பெடுத்த இவ்வேழைமனுஷன் சிறிது காலம் இரந்து உதரபோஷணம் செய்துகொண்டு வருகையில் ஒரு நாள் உவில்லியம் ஷார்ப்பிடத்திற் போனான். அவர் ஏதோ மருந்து கொடுத்து, சில தினம் சென்றதன்மேல் ஸெந்து பர்த்தலமியூ வைத்தியசாலையில் அவனைச் சேர்ப்பித்துவிட்டார். அங்கு அவன் சொஸ்தமடைந்தான். பிற்பாடு வைத்தியசாலையினின்று திரும்பி வரும் அந்த நிக்ரோவனைத் தெருவில் அலைந்து திரியவிடாமல் மேற்சொல்லிய சகோதரர் இருவரும் ஆதரித்துக்கொண்டுவந்தார்கள். அவனைத் தொட்டு வழக்கிட வரும் பாத்தியஸ்தர் எவரேனும் உண்டென அவர்கள் இறையும் எண்ணவில்லை. இம்மாத்திரமல்ல, மருந்து விற்கும் ஒருவரிடத்தில் அவர்கள் அவனுக்குச் சேவகமும் அமர்த்திக் கொடுத்தார்கள். அவன் அந்தச் சேவகத்தில் இரண்டு வருஷம் இருந்தான். ஒரு நாள் எசமான் மனைவி ஸவாரிபோன குதிரைவண்டிப்புறத்தில் அவன் ஏறிப்போகும் மார்க்கத்தில் முன்தின எசமான் ஆகிய பார்படோஸ் வியாபாரி அவனைக் கண்டு தன அடிமையென்று அறிந்து, வியாதி நீங்கி வேலைக்கு யோக்கியனுகச் சுகதேகியாய் விட்டதனால் மீளவும் [illegible]க்கிக்கொள்ள நிச்சயித்தான். வாரண்ட் பேரில் சேவகரைக்கொண்டு அந்த வியாபாரி அடிமையைக் கைதுசெய்வித்து, மேற்கு இந்திய தீவுகளுக்குக் கப்பலில் ஏற்றி அனுப்பச் சமயம் வரும்வரை சிறையில் வைப்பித்தான். அந்த நிக்ரோவன்

சிறையிருக்கும்பொழுது சில வருஷத்திற்குமுன் ஆபத்துக் காலத்தில் கிரான்வில் ஷார்ப்பு தனக்குப் பரிவுகூர்ந்து செய்த உபகாரத்தை நினைந்து, இவ்வேளைக்கு உதவவேண்டுமென்று அவருக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பினான். ஷார்ப்பிற்கு அவன் பெயர் மறதியாய்ப் போய்விட்டது. அவனைக் குறித்து விசாரித்து வரும்படி அவர் சேவகன் ஒருவனை அனுப்ப, அந்தச் சேவகன் தங்கள் வசம் ஸ்திராங் எனும் பெயர்வழிக்காரன் இல்லையென்று சிறைச்சாலைக் காவற்காரர் மறுத்தனரெனத் திரும்பி வந்து சொன்னான். ஷார்ப்பிற்குச் சமுசயம் பிறந்தது. அந்தக்ஷணமே சிறைச்சாலைக்குப்போய் ஜானதன் ஸ்திராங்கைக் காணவேண்டுமென்று அவர் ஒரு மொழியாய்க் கேட்டார். காவற்காரர் உட்செல்ல இடங்கொடுத்தார்கள். அடிமையென்று மீளவும் பிடித்துச் சிறைச்சாலையிற் போட்டிருந்த ஏழை நீக்ரோவனைக் கண்டு இன்னானென்று தெரிந்துகொண்டார். லார்ட் மேயர் சன்னிதியிற் கொண்டுபோய் விடுமுன் ஸ்ராங்கை எவர் வசமாவது ஒப்பிப்பாயானால் உனக்கு மோசம் வருமென்று ஷார்ப் சிறைச்சாலைத் தலைவனுக்குத் திட்டமாய்ச் சொல்லிவிட்டு, தாம் உடனே லார்ட் மேயரிடத்திற்குச் சென்று, வாரண்டு இல்லாமல் ஸ்திராங்கைப் பிடித்துச் சிறையிருத்தினவர்கள் பெயரில் முறையிட்டுக் கட்டளை வாங்கினார். பிறந்த கட்டளைப்படி அந்தப் பெயர்வழிகாரர் லார்ட் மேயர் அதிகாரி முன்னிலையில் ஆசரானார்கள். ஸ்ராங்கை முன் அடிமைகொண்ட எசமான் மற்றொருவனுக்கு விற்றுப்போட்டதாக நடந்த விவகார வித்தாரங்களால் தெரியவந்தது. பிந்தின எசமான் விக்கிரய பத்திரத்தைக் காட்டி, தன் சொத்தென்று அந்த நீக்ரோவனை பெயரில் தாவா செய்தான். ஸ்ராங்பெயரில் குற்றம் ஒன்றும் பாரிக்கப்படாததனாலும், ஸ்திராங் ஸ்வாதீனனோ அடிமையோ என்னும் விவகாரத்தைக் கேட்டுத் தீர்க்கத் தமக்கு அதிகாரம் இல்லாததனாலும், லார்ட் மேயர் அதிகாரி அவனைச் சிறையினி

விட்டார். கோர்ட்டினின்று அவ்வடிமை தன் உபகாரி பின்னே போனான். அவனைத் தீண்ட ஒருவரும் துணியவில்லை. அவனுடைய எசமான் [illegible] அடிமையைத் தன் ஸ்வாதீனத்தில் திருப்பிக்கொள்ளும்பொருட்டு வியாச்சியம் தொடர இருப்பதாக அவன் [illegible] ஷார்ப்புக்கு அறிக்கைசெய்தான்.

சுமார் முன்பின் அக்காலத்தில் (1767) இங்கிலாந்தில் அவனவன் தன்வீட்டில் ஸ்வாதீனமுள்ளவனென்று யாவரும் கற்பனாரூபமாகப் பாவித்தும் அதை வெகு அலக்ஷியமாய் மீறினார்கள். பிரபுக்களும் அதைக் கடந்தார்கள். கடலோடும் தொழிலுக்கு அனுப்ப அடிக்கடி மனுஷரை அமுக்கிப் பிடித்தார்கள். கூட்டம் கூட்டமாய்ப் போய் மனுஷரை அமுக்கிப் பிடித்ததுந்தவிர, லண்டனிலும் மற்றுள்ள பெருநகர் அனைத்திலும் இராணுவ மனுஷர் கூடிக் கூடித் திரிந்து, ஈஸ்ட் இந்திய கம்பெனியார் சேவகத்திற்கு அனுப்ப சரசோரம் செய்தார்கள். இந்தியாவில் வேண்டும் அளவிற்கு மனுஷர் சேர்க்க அப்பால் வேண்டுவதில்லை என்றால், அகப்பட்டவர்களைக் கப்பல் ஏற்றி அமெரிக்காவைச் சேர்ந்த புதுக்குடியேற்றத் தோட்டம் செய்விக்கும் வியாபாரிகளிடத்திற்கு அனுப்புவார்கள். அடிமைகளாகிய நீக்ரோவரின் ஏல விக்கிரயத்தைப்பற்றி [illegible] சமாசார பத்திரிகைகளில் விளம்பரங்கள் பிறந்தன. தப்பி ஓடின அடிமைகளைப் [illegible] ஆற்றில் [illegible] வெகுமதி கொடுப்பதாக விளம்பரம் செய்யப்பட்டது.

இங்கிலாந்தில் [illegible] வரையறையின்றிச் [illegible] சபைகளிற் பிறந்த தீர்ப்புகள் [illegible] இவ்வாறிருந்தன. அவைகளுக்குத் தீர்க்க சட்ட ஆதாரம் ஒன்றும் இல்லாதிருந்தது. இங்கிலாந்தில் அடிமைகள் இருக்க இடம்

பெறுவது அசாத்தியம் என்பது லோக அபிப்பிராயம்.
ஆனால், சிறந்த தர்ம வித்தியா நிபுணர்கள் சிலர் நேர் விபரீ
இதற்கு எதிரான அபிப்பிராயம் சொன்னார்கள். ஜானதன்
ஸ்திராங்கைப் பற்றித் தமது பெயரில் தொடர்ந்த வழக்கில்
பிரதிவாதிக்கு மெளண ஷார்ப் [illegible] விட்டுப் போயிருந்த
நியாயவாதிகளிற் பெரும்பாலார்க்கு இந்த அபிப்பிராயம்
சம்மதமாயிருந்தது. தர்ம வித்தியா நிபுணருக்கெல்லாம்
விசிஷ்டரான மான்ஸ்பீல்ட் எனும் பிரதம நியாயாதிபதியும்
பிரதான நியாயதுரந்தரர் அனைவரும் அடிமை ஆனவன்
இங்கிலாந்திற்கு வருவதனால் ஸ்வாதீனன் ஆகான், அவனை
மீளவும் வேலை செய்யும் தோட்டத்திற்குப் பலாத்கரித்
தனுப்பச் சட்டம் உண்டு என்று தீர்த்த அறுதி அபிப்பிரா
யம் சொன்னார்களென்று ஜானதன் ஸ்திராங் உடைய எச
மான் ஷார்ப்புக்குத் தெரிவித்தார். தைரியத்திலும் கருமம்
முடிக்கும் துணிவிலும் கிரான்வில் ஷார்ப்புக்கு இளைத்த
ஒருவன் இவ்வழக்கைக் கேட்பானாயின் ஏங்கி ஏமாறிப்போ
வான். ஷார்ப்போ அந்தப் பிரகிருதியுள்ளவரல்ல. அதம
பக்ஷம் இங்கிலாந்திலாவது நீகிரோவனுடைய ஸ்வாதீனத்
தைப் பற்றித் தெரிவிக்க வழக்கு எனும் போரை இளைக்
காமற் பொருது [illegible] அவருக்கு
முன் உள்ள விரோதம் பின்னும் ஒரு பங்கு அதிகம் வேகமு
டைத்தாயிற்று. இதைச் சுட்டி அவர் எழுதியது:— "நியா
யவாதிகள் [illegible] விவகாரத்தில்
முறைமையாக உதவி புரிவார் [illegible] இலாமையால்,
வாய்த்தாலும் [illegible] சரி என்று
எண்ணி [illegible] கொண்டேன்.
வேறு [illegible] பிரதிய
தும் செய்து [illegible] நியாயாதார
ங்களை எவ்வாறு [illegible] சாலையில் எ
வேத புஸ்தகம் [illegible] தர்ம சாஸ்திர புஸ்
கம் எதையும் ஒருபொழுதும் திறந்து பார்த்தவனுமல்லை

பின்பு எனக்குப் புஸ்தகம் விற்கும் கடைக்காரன் கிரயத் திற்கு வாங்கி வைத்திருக்கும் தர்ம சாஸ்திர புஸ்தகங்களின் பொருள் அட்டவணையில் [illegible] சோதித் துப் பார்க்க ஆரம்பித்தேன்.

அவருக்குப் [illegible] உத்தி யோகம். அது மிகவும் கடுமையான வேலை. பகலில் அவர் காலம் எல்லாம் அதிலேயே செல்லும்; ஆனதுபற்றி ஞாதனமாய் வாசிக்க ஏற்பட்ட புஸ்தகங்களை இராத்திரி நாழிகை ஏறுமளவும், அல்லது அதிகாலையிலும் வாசிக்கும் படி நேர்ந்தது. வேறு அவகாசம் இல்லையே. [illegible] தா மும் ஓர் அடிமையானதாக அவர் [illegible] பிறந்தது, தமக்குக் கடிதம் அனுப்பிய இங்கிலாந்து தேசிகர் ஒருவ ருக்கு மறுமொழி எழுதத் தாமதித்த பிழையை க்ஷமிக்கும் படி அவர் எழுதிய கடிதத்தில் "வித்தியா விஷயங்களைப் பற்றி அட்டியின்றி உத்தர பிரதி யுத்தரம் எழுதிக் கொண்டு வரச் சற்றுவது என்னால் முடியாது. இராத்திரியிலும் அதி காலையிலும் தான் சித்தினையை நெருக்கிப் பிடித்த காலம் ஸ்வல்பம். அந்த ஸ்வல்ப காலத்தில் சில தர்ம நூட்டங்களை ஆராய்ந்துவரும்படி நேரிட்டது. இதில் எவ்வளவும் ஆலசி யம் ஏற்காது. அன்றியும் இவ்விஷயம் சாமானியமல்ல - மிகு ஜாக்கிரதையாய் அமைந்து ஆராய்ந்து பரிசோதனை செய்ய அறிய[illegible]

அந்த இ[illegible] லாக ஒழிந்த [illegible] ஸ்தானத்தைப் பற்றிச் சொல்லும் [illegible] மனம் குவிந்து ஆராய்ந்[illegible] வெள்ளா மனும் மனி[illegible] கல்வியைக் குறித்துச் சொல்[illegible] அடிப்பற வாசித்துத் தெரிந்த[illegible] பார்லிமெந்தா ரால் ஏற்பட்ட முக்கியமான சட்டம் அனைத்தையும், தர்ம

சபைகளிற் பிறந்த தீர்ப்புகளையும், தர்ம நூற்றுறையிற் சிறந்த விற்பத்தியுள்ள நியாயவாதிகள் சொல்லிய அபிப்பிராயங்களையும் பார்வையிட்டுக் குறிப்பு எழுதினார். இவ்வாராய்ச்சி மிகவும் அருமையாயிருந்தது. கொஞ்சத்தில் முடியாமல் வெகுநாள் பிடித்தது. இதில் அவருக்கு உபாத்தியாயர் இல்லை, சகாயர் இல்லை, புத்திசொல்வோர் இல்லை. அவர் கண்டு பேசிய நியாயவாதிகளில் ஒருவராவது அவர் காரியசித்திக்கு அனுகூலமான அபிப்பிராயம் சொல்லவில்லை. ஆனாலும், அவர் விஷய ஆராய்ச்சி செய்து கண்ட சித்தி அவர் மனதிற்கு இன்பமாகவும் தமதெதிரிகளுக்கு ஆச்சரியமாகவும் இருந்தது. "தெய்வத்திற்கு நன்றி சொல்லுகிறேன். அங்கிலேய சட்டதிட்டம் எதிலாவது பிறனை அடிமைகொள்வது நியாயமென்று சொல்லும் உறுப்பு ஒன்றும் இல்லை — நான் ஒன்றையும் காணவில்லை" என அவர் எழுதினார். அவர் உறுதியாய் அடி வைத்து நின்றார். அப்பால் அவருக்குச் சந்தேகம் ஒன்றும் இல்லை. ஆராய்ந்து கண்ட சித்தாந்தங்களை அவர் தொகுத்து எழுதினார். அவர் கண்டதெல்லாம் சந்தேகமறத் தெளிய விளங்க எழுதியிருந்தார். அப்புஸ்தகத்திற்கு 'இங்கிலாந்தில் அடிமையாட்சிக்கு இடம் கொடுக்கும் அநியாயம்' என அவர் பெயர் வகுத்தார். அநேகம் பிரதிகள் அவர் தமது கையெழுத்தாய் எழுதி அக்காலத்தில் பிரபல நிபுணராயிருந்த நியாயவாதிகளுக்கு அனுப்பிவைத்தார். [illegible]குடைய எசமானென்று வழக்குத் தொடுத்த வாதி பிரதிவாதியை அகாரணமென்று கண்டு, வழக்கைத் தாமதிப்பிக்கும்படி எத்தனையோ உபாயங்கள் செய்தான். அப்பால் இராஜியாக் கேட்டான். பிரதிவாதி அவன் பிரசனைக்கு இணங்கவில்லை. அவர் தமது எழுதிய நியாயத்தின் பிரதிகளை நியாயவாதிகளுக்கு அனுப்பிக்கொண்டிருந்தார். வாதி பக்கத்து நியாயவாதிகள் தங்கள் வாதம் பலிக்காதென்று பின் இடைந்து நின்றுவிட்டார்கள். பின்பு [illegible]

என்னவெனில், வழக்கை நடத்திக்கொண்டுவராமல் தளர விட்டதற்காக வாதி கேட்டுக்கொண்ட செலவு மும்மடங்கு செலுத்தவேண்டுமென்று தீர்ப்புப் பிறந்தது. பின்பு மேற் குறித்த சிறு புஸ்தகம் 1769-ம் ஆண்டு அச்சிடப்பட்டது.

இதன் மத்தியில், லண்டனில் நீக்ரோவரைப் பிடித்து மேற்கு இந்திய தீவுகளில் விக்கிரயம் செய்யக் கப்பலில் ஏற்றி அனுப்பிக்கொண்டுவந்தார்கள். இப்படிச் செய்வதைக் கண்ட இடமெல்லாம் ஷார்ப் அந்தக்கணமே நீக்ரோவரை விடுவிக்க வியாஜ்யம் தொடர்ந்தார். இதற்கு ஒரு திருஷ்டாந்தம்,—ஆப்பிரிக்கனாகிய ஹைலாஸ் என்பவனுடைய மனைவியைப் பிடித்து பார்படோஸுக்கு அனுப்பினார்கள். அனுப்ப, ஷார்ப் அவ் வதிக்கிரமம் செய்தவன்பெயரில் ஹைலாஸிற்காக வழக்குத் தொடர்ந்து நடத்திக்கொண்டு வந்தார். மான நஷ்டத்தோடு அவர் பக்ஷம் தீர்ப்புப் பிறந்தது. ஹைலாஸ் மனைவி சிறை நீங்கி மீளவும் இங்கிலாந்திற்குக் கொண்டுவரப்பட்டாள்.

1770-ம் ஆண்டு ஒரு நீக்ரோவனைப் பலாத்காரமாய்ப் பிடித்து மெத்தவும் குரூரம் செய்தார்கள். அவ்வதிக்கிர [illegible] ஷார்ப் உடனே அடி பிடித்துத் தொடர்ந்தார். ஒருவன் ல்யூஇஸ் எனும் ஆப்பிரிக்கன் ஒருவனைத் தன் அடிமையென்று ஓட்டக்காரர் இருவரை அனுப்பிப் பிடித்துவரச் சொல்ல, அவர்கள் இருட்டிலே பிடித்து இழுத்துக்கொண்டு போய் ஆற்றில் [illegible] போட்டுப் பேசவிடாமல் வாய் அடைத்து கைகால் கட்டித் தண்டு வலித்துப்போய் [illegible] பிரயாணப்பட இருந்த கலம் ஒன்றில் ஏற்றினார்கள் [illegible] சேர்ந்து தன்மேல் [illegible] முதலில் [illegible] நீக்ரோவன் [illegible] சேட்டு வெகு [illegible] உண்டாயிற்று. அவர்களில் ஒருவன் அப்பொழுது

[illegible]ரோவர் தேசமொன்று [illegible] ஆதியப் பெற்ற மெஸ். இரா ன்லிஸ் ஷார்ப்பை அங்கிருந்து [illegible] சரஸகரணம் செய்யா மல் நேரே போய்க் கண்டு, அவ்வநியாயத்தை அறிக்கை செய்தான். அது கேட்டு ஷார்ப் அக்கனவான் மேல் ஹேபியஸ்கார்பஸ் [illegible] திருப்பிக் கொண்டுவரும்படி வாரண்டு பத்திரம் கேட்டு வாங்கி [illegible] போனார். அன்று அவர் போய்ச் சேருமுன் [illegible] வெள்ளைக்குப் புறப்பட்டுப் போய் விட்டது. பின்பு அவர் [illegible] கட்டளைப் பத்திரம் பெ ற்று ஸ்பிட்ஹெட் [illegible] அனுப்பினார். அந்தக் கலம் இங் கிலாந்தின் கரையைவிட்டு நீங்குமுன், மேற்குறித்த கட் டளை ஒப்பிக்கப்பட்டது. அவ்வடிமையைக் காலிற் சங் கிலி இட்டுப் பெரும் பாய்மரத்திற் கட்டியிருந்தது. அழு தழுது அவன் அங்கம் எல்லாம் கண்ணீர் புரண்டிருந்தது. பலாத்காரமாய்த் தன்னை நீங்கிக் கொண்டுபோக இருக்கும் தேசத்தின் கரையைத் துக்கித்துப் பார்த்துக்கொண்டிரு ருந்தான். உடனே அவன் விலவித்து [illegible] வந்தன் நகரத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டான். அவனுக்கு இந்த [illegible] செய்தவன் பெயரில் வாரண்டு கட்டளை பிறந்தது. இந்தக் காரியத்தில் ஷார்ப்புடைத்தில் சமயத் தில் [illegible] விருப்பத்திற்கும் தேகசிர மத்திற்கும் [illegible] அரிதெனினும் தாமசம் செய்யேனென்று அவர் [illegible] நோக்கினார். இந்த விவகாரம் விசாரித்துத் தீர்த்த [illegible] மான்ஸ் பீல்ட். அடிமை [illegible] வெளியிட்ட அபிப்பிராயம் [illegible] அபிப்பிராயத் திற்குச் [illegible] தப்பித்தோ மே. அவன் [illegible] இந்த விவகா ரத்தைத் [illegible] வைத [illegible] நிலைமையைத் தெரி ட்டுத் தாற்பரியம் [illegible] சொல்லாமலும் உபாயமாய் விலகினார். [illegible] ஸ்டிரோவனுடைய ஸ்யூஇங் பெயரளவிலாவது

தன் சொத்தென்று பிரதிவாதி ஒப்பனை பண்ணுததனுல் நீதியதிபர் ஸ்பூனிஉணை [illegible] விட்டுவிட்டார்.

ஆனதுபற்றி, [illegible] இருமிக்கார்தில் [illegible]வாதீனம் உண்டோ [illegible] விசாரம் இன்னும் தீராதிருந்தது. திருநெல்வேலியில் மெஸ். ஹோர்ப் பரோபகாரார்த்தம் தாம் கைக்கொண்ட கருமத்தைத் தளர்ச்சியின்றித் நடத்தி வந்தார். அனேகம் அனுப்பமுயன்று செய்வதைச் சமயத்தில் முறை தவறாமற் செய்து பின்னும் அனேகரைச் சிறை மீட்டனர். கடைசியில் [illegible] ஸாமர்ஸெத்தைக் குறித்துள்ள பிரதான விவகாரம் விசாரணைக்கு வந்தது. அதில் உள்ள முக்கியமான தர்ம சங்கையை முறைமையாகத் தெளியத் தீர்க்கும்பொருட்டு ஸார்ட் மான்ஸபீல்ட், மெஸ். ஹோர்ப இருவரும் மனம் பொருந்தி விரும்பியதுபற்றி அவ்விவகாரம் விசாரணைக்குத் தெரிந்துகொள்ளபட்டதாம். ஸாமர்ஸெத்தை எசமான் இங்கிலாந்திற் கொண்டுவந்து விட்டிருந்தார். பிற்பாடு அவர் அவனைப் பிடித்து விற்பனைக்காக ஜமெய்க்காவிற்கு அனுப்ப எண்ணம் பார்த்தார். வழக்கப்பிரகாரம் மெஸ். ஹோர்ப் அந்த்கிரோவன் விவகாரத்தைக் கைக்கொண்டு அவன் பட்சத்தில் நியாயவாதியை அமர்த்தினர். இவ் விவகாரம் [illegible] தீர்க்கத் தக்கதானவன் [illegible] நீதியதிபரை அனேகரிடத்திலும் அவரவர் [illegible] விருப்பமுள்ளதாக மான்ஸ்பீல்ட் நீதியதிபர் [illegible]. தாம் [illegible] பக்ஷத்திற்கு எதிராக [illegible] போராடவேண்டுமெனை [illegible]. ஆனாலும், அவனுடைய [illegible] குன்றவில்லை. இந்த [illegible] செய்த பிரயத்தனங்களின் [illegible] அவர் அதிர்ஷ்டத்தான். [illegible] இவ் விவகாரத்தில் சித்தி பெற்றது. நியாயவாதிகளாகிய நிபு

ணர்கள் பலர் தாமும் அவர் பக்ஷத்தில் சேர்வதாகப் பகிர
ங்கமாய் உறுதி சொன்னார்கள்.

அவனவனுக்குத் தன்மட்டில் சுதந்தரம் உண்டு இல்லை
எனும் விவகாரம் சந்தேகத்திற்கு இடமாயிருந்ததே. அந்த
இங்கிலாந்தில் சட்டத்தை மீறிப் பேசுவதுக்காவிடில் பிரதி
மனுஷனுக்கும் தேகசுதந்தரம் உண்டென்றும் முக்கிய தர்ம
சுதந்தரத்தைப்பற்றிய சாதாரண தத்துவத்தை ஆதார
மாய்க்கொண்டு மூன்று நீதியதிபர்கள் அல்லாமல் லார்ட்
மான்ஸ்பீல்ட் நீதியதிபர் பக்ஷபாதமின்றி விசாரித்தார். இப்
பெருவழக்கு வரலாறுகளை இங்கே விரித்துரைக்க நிமித்தம்
இல்லை; வாத பிரதிவாதம் மிக நீடித்தது. விசாரணை ஒரு
கால வகுப்பில் தீரவில்லை-மறு காலவகுப்பிலும் எட்டியது.
இரண்டொரு தவணை நிறுத்திவிடப்பட்டது. ஏறு கடை
யில் லார்ட் மான்ஸ்பீல்டால் தீர்ப்பு பிறந்தது. நியாயவா
திகள் வாக்குவாதமாய்ப் பிறந்த வாத பிரதி வாதங்களைக்
கேட்டுக் கேட்டு விவேகபலம் மெத்தவும் மிகுந்த அவர் அபிப்
பிராயம் வரவர மாறியது. இம்மாறுதலுக்கு முக்கிய ஆதா
ரம் மௌன், ஷார்ப் எழுதிய ஒரு சாஸ்திரமே. இவ்விவகாரத்
தில் சேர்ப்பட்ட நீதியதிபர்கள் அபிப்பிராயம் நன்றாகத் தெ
ளிந்து ஏகோபித்திருப்பதனால் நீதியதிபர்கள் பன்னிருவரி
டத்திற்கு இதை அனுப்பி அபிப்பிராயம் கேட்க நிமித்தம்
இல்லையென்று அவர் உறுதிமொழி சொன்னார். பின்பு,
அடிமை வழக்குகளுக்கு பிரயோசனமாயில்லையென்றும், வாதி
தாவர செய்யும் அடிமைப்பட்டி அநியாயம். இங்கிலாந்தில்
ஒரு பொழுதும் வழக்கமில்லையென்றும், தர்மநூல் அதை
அங்கீகரிக்கவில்லையென்றும் அவர் வெளியிட்டு, ஆனபடி
யால் ஜேம்ஸ் ஸாமர்செட்டை விடுதலை செய்வது தர்
மம் எனத் தீர்த்தார். ஆங்கிலேயர் இத்தீர்ப்புப்
பிறப்பித்ததனால், பூமியில் பகிரங்கமாய் நடந்து
வந்த அடிமை வியாபாரம் முற்றும் ஒழிந்தது. அன்றியும், அடி
மைப்பட்ட எவனும் இங்கிலாந்தில் அடி வைக்கும் நிமிஷமே

ஸ்வாதீனன் ஆவான் எனும் மகத்தான பிரதிக்ஞைப்பிரமாணம் அவராலேயே உறுதியாக ஸ்தாபிக்கப்பட்டது. ஸாரிட் மான்ஸ்பீல்ட் நீதிபதியால் இந்தத் தீர்ப்பு பிறந்தது முக்கியமாய் [illegible] இவ்வுண்மை மனவுறுதியோடு நிர்ணயம் செய்யப்படுவதற்கு ஏதுவாக ஆகியோர் அந்தம் நடத்திக்கொண்டுவந்தது ஷார்ப்தான். இதற்கு ஐயம் இல்லை.

கிரான்வில் ஷார்ப் சரித்திரத்தைப் பின்னும் சொல்லிக் கொண்டுவர நியதி இல்லை. அவர் சமஸ்த கருமங்களிலும் இன்பமுற உழைத்துக்கொண்டுவந்தார். சிறை நீங்கிய காப்பிரிகளுக்கு ஸியெரா லியோன் எனும் புதுக்குடியேற்ற ஸ்தலம் அடைக்கலமாக ஏற்பட்டதற்கும் துணைக்காரணர் அவரே. அமெரிக்காவிற் குடியேறிய இடங்களிலும் சுதேச இந்தியரை சட்டத்தில் சேர்த்து அவர் உழைத்தார். ஆங்கிலேய பிரஜைகளுக்கு அரசாட்சி சம்பந்தமுள்ள சுதந்தரங்களைப் பெருக்கி விர்த்தி செய்யும் எத்தனத்தை அவர் தூண்டிவிட்டார்; கப்பலோட்டிகளை அமுக்கிப் பிடிக்கும் வழக்கத்தை அடியோடு தொலைக்க வகை செய்தார். அவர் கொள்கை இது:—ஆப்பிரிக்க காப்பிரியைப் போலப் பிரித்தானிய கடலோடியும் சட்டத்தின் ஆதரவு பெறச் சுதந்தரமுள்ளவன். அவன் கடலோடிப் பிழைக்கும் தொழிலைத் தெரிந்துகொண்டதனாலே ஆங்கிலேய பிரஜையாகிய அவனுக்கு உரிய சுதந்தரம் சிறிதேனும் குறைந்திருக்க நியாயம் இல்லை. அந்தச் சுதந்தர [illegible] சுதந்தரம் — அன்றியும், இங்கிலாந்துக்கும் [illegible] அமெரிக்காவிற்போய்க் குடியேறியவர்களுக்கும் [illegible] சமாதானம் உண்டாக்க [illegible] பட்டார் ஆனால் அந்தப் [illegible]. அந்தச் சகோதரராகிய [illegible] பரிவர்த்தனை யுத்தம் செய்யும் [illegible] பொழுது அவருடைய மனச்சாட்சிக்கு அது ஒப்பவில்லை. அவ்வாறே ஜன்ம இயற்கைக்கு விரோதமான அந்தக் காமத்தின் காம எல்

விதத்திலும் சேர்வதில்லையென்று தீர்மானித்து, அவர் பிர ஙகி உத்தியோகசாலையில் [illegible] வேண்டாமென்று விட்டார்.

இவ்வுலகில் அவருக்கு [illegible] அபிப்பிராயம் அடிமையாட்டி விலக்குவதே. இவ்வபிப்பிராயத்தை அவர் சாமனவும் [illegible] இந்த நற்கிரியை நடத்திவந்து, [illegible] பெரும் இவ்விஷயத்தில் [illegible] முயலும்படி செய்யும்பொருட்டு அடிமை ஆட்டி விலக்குஞ் சங்கம் என்று ஒரு சங்கம் ஏற்பட்டது. [illegible] முன்மாதிரியையும் சிரத்தையையும் கண்டு [illegible] ஞாதனமாகச் சிலர் அவருக்கு உதவும்படி வேகமாய் முற்சென்றனர். அவர் மனவலி அவர்கள் மனவலி ஆயது. நெடுநாள் வரையில் சொந்தக் காரியத்தில் சிந்தை வைக்காமல் இந்தக் கருமத்தில் தனிக்கையாய் உழைக்கும்படி [illegible] ஆண்டிக்கொண்டுவந்த சிரத்தை வரவரப் பெருகி அவர் தேசத்தார் யாவர் மனதிலும் செறிந்தது. அவர் தரித்த ஏசாசம [illegible] கிலார்க்ஸன், உவில்பர்போர்ஸ், [illegible], பக்ஸ்தன் என்பவர்கள் தோன்றலாயினர். அவர்கள் அவரைப்போல் அந்தரீன [illegible] உழைத்த வரவர [illegible] பிரித்தானிய ராச்சியத்தில் எங்கும் இல்லாதொழிந்தது. [illegible] பெயர்வழ [illegible] யாராலேயே [illegible] என்று அடிக்கடி சொல்லுவது [illegible] இந்த நரகருமம் செய்த [illegible] கொண்டவர் க்ரான்வில் [illegible] இக்கருமம் தொடங்கியபொழுது [illegible] கொண்டாடித் [illegible] தன்னைத் தனியே நின்று, [illegible] அபிப்பிராயத்திலும் அக்காலத்தில் வேர் ஊடி ஆழ்ந்து உரங்கொண்ட [illegible] திகளுக்கும் விரோதியானார். இங்கிலாந்தின் சட்டத்திற்கா [illegible]

வும் பிரித்தானிய பிரஜைகளின் சுதந்தரங்களுக்காகவும் எக்காளும் மறவாது [illegible] தரும் பெருஞ்சண்டையை அவர் [illegible] தம் பொருளைச் செலவிட்டுச் செய்து வந்தார். அதைக்குறித்து இக்காலம் [illegible]. [illegible] முக்கியமாய் ஷார்ப்புக்கு உள்ள [illegible] பயன். அவர் கொளுத்திய பந்தம் பிறர் மனதில் பற்றியது. அப்பந்தம் எங்கும் [illegible] கை கடந்து போனது.

க்ராண்வில் ஷார்ப் இறக்குமுன் க்ளார்க்ஸனுடைய மனம் காப்பிரிகளைச் சிறை மீட்கும் விஷயத்திற் சென்றது. வித்தியாசாலையில் அவர் வகுப்பார் பிரபந்தம் எழுதியபொழுது, அவர் தமது பிரபந்தத்திற்கு இவ்விஷயத்தையே முகவுரையாய்த் தெரிந்துகொண்டார். அது அவர் மனதில் அழுந்தி நிலைப்பட்டதனால் அதை உள்ளத்தினின்று விலக்கக் கூடாதிருந்தது. கேம்பிரிட்ஜ் [illegible] அவர் ஒரு நாள் குதிரை ஏறிப் போகும்பொழுது இறங்கி ஆறுதலாய் ரோட்டு சாலைப்பக்கத்தில் புல்லின்மேல் உட்கார்ந்து, நெடு நேரம் தியானித்து, [illegible] விடுக்கும் முயற்சியிலேயே தம் காலத்தைச் செலவிட நிச்சயித்தார். அவர் லத்தீனில் எழுதிய பிரபந்தத்தை இங்கிலீஷ் மொழி பெயர்த்து, சற்றுப் பொருள் [illegible] அச்சிடுவித்துப் பிரசித்தப்[illegible] [illegible] உழைக்க முன் [illegible]. அடிமை வியாபாரத்தை [illegible] ஏற்பட்டிருந்தது. அது [illegible] பொழுது அவர் [illegible] பொருட்டு அவர் தம் [illegible]. உவில்பர் போர்ஸ் பார்லிமெண்டில் [illegible] தெரிந்து கொள்ளப்பட்டார். ஆனால் அடிமைப்பட்டவர் விலகுவதற்குக் காரியமாக ஏற்பட்ட [illegible] சபையைச் சேர்த்துச்

கிரமப்படுத்தினவர் முக்கியமாய் க்லார்க்ஸன்தாம். தொடர்ந்த மிருகத்தை வேட்டைநாய் பிடிக்காது விடுவதில்லை. இதற்குக் கவனிக்கத் தகும் திருஷ்டாந்தம் ஒன்று எடுத்துக் காட்டலாம். அடிமையாட்சி வாதிகள் தங்கள் பக்ஷத்திற்குப் பலம் கட்டிக்கொண்டு வரும்பொழுது, சண்டையிற் கைதிகளாய் அகப்படும் காப்பிரிகள் மாத்திரம் அடிமைகளாய் விற்கப்படுவார்களென்றும், விற்கப்படாதிருந்தால் தங்கள் தேசத்தில் பின்னும் அதிக பயங்கரமான தீர்ப்புப் பெறும்படி நிறுத்தப் படுவார்களென்றும் வாதித்தார்கள். அவர்கள் வாதம் அபத்தம். அடிமை வியாபாரிகள் மனுஷரைத் தொடர்ந்து பிடித்து விற்பது க்லார்க்ஸனுக்குத் தெரியும். தெரிந்தாலும் அதை ஒப்பிக்கச் சாட்சி இல்லை. சாட்சி அகப்படுவது எங்கே! ஒரு பிரயாணத்தில் அவருக்கு வழியில் எதிர்ப்பட்ட துரைமகன் ஒருவர் கடலோடும் வாலிபன் ஒருவனை அறிவேன். முன் ஒரு வருஷகாலவரையில் நான் அவனோடு இருந்தேன். அடிமைகளைத் தேடி அகப்படுத்துவதே அவன் வேலையாயிருந்தது என்று தற்செயலாக அவருக்கு அறிக்கை செய்தார். அத்துரைமகனுக்கு அவன் பெயர் தெரியாது. அவன் அங்கம் அடையாளத்தைப் பற்றித் திட்பமாய் அவர் ஒன்றும் சொல்லவில்லை. அவன் இருப்பிடமும் அவர் அறியார். அவன் சண்டைக்கப்பல் ஒன்றைச் சேர்ந்தவன் என்பதற்கு மிஞ்ச அவர் ஒன்றும் அறியார். அவன் கப்பல் நிற்கும் துறை இன்னதென்று அவருக்குத் தெரியவில்லை. ஒரு விவரமும் தெளியாமல் மயக்கமாயிருக்கின்ற இந்த அறிக்கையைச் சார்ந்து க்லார்க்ஸன் அந்த வாலிபனைச் சாக்ஷியாகத் தேடிப் பிடித்து வரத் தீர்மானித்தார். ராஜரீக சண்டைக் கப்பல்கள் நிற்கும் துறை அடுத்த நகரம் அனைத்திற்கும் போய் ஒவ்வொரு கப்பலிலும் ஏறிச் சோதனை செய்தார். தேடிய வாலிபனை ஒன்றிலும் காணவில்லை. கடைசியாய் அவர் போய்ப் பார்த்த துறையில் தேடிய பந்தயப்பொருள் அகப்பட்

டது. அவர் அதுவரையில் சோதியாதிருந்த கப்பல் ஒன்றே ஒன்று. அந்தக் கலத்தில் வாலிபனைக் கண்டு பிடித்தார்.

அவ்வாலிபன் அவர் பக்ஷத்துச் சாக்ஷிகளில் முக்கியமான சாட்சி ஆனான். அவன் வாக்குமூலத்தால் அவர் கருமம் சாய்ந்தது.

சில வருஷகாலம் கிலார்க்ஸன் இந்தக் காரியத்தின் பெயரில் கடிதப் போக்குவரவு செய்தவர்கள் நானூறு பேருக்கு அதிகம். அக்காலத்தில் அவர் சாக்ஷியம் தேடி விசாரித்து அறியப் பிரயாணம் செய்த தூரம் முப்பத்தையாயிரம் மயிலுக்கு அதிகம். இடைவிடாமல் எப்பொழுதும் இதன்பொருட்டு உழைத்த மணியமாயிருந்ததனால், நாள் ஏற அவர் இளைத்து அசக்தரானார். ஆனாலும் அவர் இந்தத் துறையினின்று இளைப்புற்று விலகுவதற்குள் அவருடைய சிரத்தையைக் கண்டு ஊருக்கெல்லாம் இதில் அதிக ஊக்கம் உண்டாயிற்று. நல்லோர் அனைவரும் அடிமைகள் படும் துயரை நினைந்து நெஞ்சுருகிப் பரிதபித்தனர்.

வெகு வருஷகாலம் விடாமல் உழைத்து உழன்றபின அடிமை வியாபாரம் தள்ளிவிடப்பட்டது. ஆனால் அதன் பின்னும் வேறொரு அருந்தொழில் நிறைவேறாதிருந்தது.— அது பிரித்தானிய ராச்சியம் எங்கும் அடிமையாட்சி விலக்குவதே. இக்கருமத்திலும் [illegible] கூடிய மன வலியே ஜயம் பெற்றது. இந்தக் காரியத்தில் முந்தி நின்றவர்களில் [illegible] சிறந்தோர் இல்லை. அவர் ஜனப் பிரதிநிதி சபையில் முன்பு உவில்பர்போர்ஸ் நின்ற இடத்தில் வந்தனர். சிறு பருவத்தில் பக்ஸ்தன் மந்தபுத்தியும் சோம்பலும் [illegible]. அவர் சற்று வது இளகாத பிடிவாதமுள்ளவரென்பது யாவருக்கும் தெரியும். உக்கிரம் கொண்டு பிறரை [illegible] தலையாகி ஒட்டாரம் செய்தவந்ததனால் இந்தக் குணம் முதல் முதல் வெளிப்பட்டது. குழந்தையாயிருக்கும்

பொழுது அவர் தந்தை இறந்துபோனார்; தந்தை இறந்தும் தாய் புத்திசாலியாயிருந்தது அவர் அதிர்ஷ்டந்தான். அந்தத் தாயே அவருடைய இந்த நிர்ணயத்தை வெகு பக்குவமாய்ப் படிவித்தார். சொற்கேட்டு நடக்கும்படி அவர் தம்மகனை நெருக்கினார். அவரை நம்பிவிடத்தக்க காரியங்களில் தீர்ப்பளிக்காமல் மனம்படி நிர்ணயிக்கவும், நிர்ணயித்தவாறு செய்து வழக்கப்படவும் விட்டுவிடார். தகுதியான கருமங்களிற் செலுத்தும் சித்தசக்தி முறைமையாய்ச் செலுத்தப்படுமானால் மிக அரிய புருஷகுணமாகுமென்று அவர் தாயாருக்கு நம்பிக்கை உண்டாயிருந்தது. ஆனதுபற்றி அவர் அவ்வாறே செய்துகொண்டு வந்தார். சிறுவனுடைய முஷ்கரத்தைப்பற்றி ஷெ தாயாருக்குப் பிறர் ஏதும் சொல்லும்பொழுது அவர் மகனைக் கண்டிக்காமல், 'அக்கறை இல்லை—அவன் இப்பொழுது முஷ்கரனாயிருக்கிறான் — இந்தக் குணம் அறிவில் அனுகூலத்திற்கு வரும். இதை நீங்களே இருந்து பார்க்கப்போகிறீர்கள்' என்று அவர்களுக்குச் சொல்வார். பக்ஸ்டன் பள்ளியிற் கல்வி கட்டோடே கற்கவில்லை, அவனை எல்லாரும் முட்டாளென்றும் சோம்பனென்றும் எண்ணியிருந்தார்கள். அவன் பாடத்தைப் பிறரை எழுதிவைக்கச் சொல்லிவிட்டுத் தான் ஆடித்திரிவான். அவன் பதினைந்து பருவத்தில் பள்ளி விட்டு வீட்டுக்குத் திரும்பியபொழுது பாரித்து வளர்ந்திருந்தான். அவனிடத்தில் யோக்கியதை கிடையாது. சிற்றோடம் செலுத்துவது, துப்பாக்கிப் பரீக்ஷை, குதிரையேற்றம், வேட்டை இவ்வகை விநோதங்களிலேயே அவனுக்கு மனமாயிருந்தது. அவன் காலம் முக்கியமாய் வேட்டை விலங்குக் காவற்காரனுடன் கழியும். அந்தக் காவற்காரன் நல்ல மனமுள்ளவன்—எழுத வாசிக்கத் தெரியாவிடினும், அவன் இயற்கையுள்ள இன்னவை யாவையும் புத்திபூர்வமாய்க் கண்டு கவனித்து வருவான். பக்ஸ்டன் புத்தி உத்கிருஷ்டமானது, ஆனால் அது பண்படவில்லை, அவனை

மனதைத் திருத்திப் படிவித்து விருத்திப்பிக்காததே குறை. அவன் சேரும் இனத்தின் வண்ணம் நற்பழக்கமோ துர்ப் பழக்கமோ பயிலும் பருவத்தில் கெர்னி குடும்பத்தில் போய்ச் சேர்ந்தது அவன் பாக்கியந்தான். அக்குடும்பத்தார் கல்விப் பயிற்சியிலும் தர்மசிந்தையோடு கூடிய பூததயையிலுமன்றி, அறிந்தோரை விநயமாய் உபசரித்துக் கொண்டாடுவதிலும் சமமாய்க் குறிக்கொள்ளத் தக்கவர்கள். கெர்னி குடும்பத்தாரோடு இவ்வாறு கூடாடிப் பயின்ற பயிற்சியைப் போலத் தமது ஒழுக்கம் அமைந்ததென்று அவர் பின்னாளில் சொல்லிவருவார். அறிவு திருந்தும் முயற்சி செய்துவர அவர்கள் அவரைத் தூண்டி விட்டார்கள். பின்பு அவர் டப்ளின் சர்வகலாசாலைக்குப் போய்க் கலை பயின்று தெளிந்து உயர்ந்த கௌரவம் பெற்றபொழுது, அவர்கள் என்னைத் தூண்டிவிட்டுப் பக்குவப்படுத்தி என்னைக் கொண்டு செலுத்திய பந்துப்பொருளை அவர்களிடத்திற் கொண்டுபோய்ச் சேர்ப்பதே எனக்குப் பிராணபதமான ஆசையாயிருந்ததென்று அவர் மொழிந்தார். அந்தக் குடும்பத்தில் ஒரு பெண்ணை அவர் மணம்புரிந்து குடித்தனம் செய்யத் தொடங்கினார். முதலில் அவர் லந்தனில் சாராயம் வடித்து விற்கும் தமது மாமன்மாரிடத்தில் லிகிதராய் அமர்ந்தார். இளமையில் பிடிவாதியாய் இருந்ததனால் அவருடன் காலங்கழிப்பது வெகு கஷ்டமாயிருந்ததே. அந்தப் பிடிவாதமே பின்பு அவர் ஒழுக்கத்தின் முதுகெலும்பாகி, செய்யத் தொடங்கிய எந்தக் கருமத்திலும் இடைவிடா ஊக்கம் அவரை வலியுடையோர் ஆக்கியது. அவர் தமது சர்வபக்ஷத்தையும் பருமத்தையும் தமது வேலையில் அதிகாரம் பொறுப்பித்திருந்தார்—அவர் உயரம் ஆறு அடி நாலு அங்குலம், ஆனையைப்போல் அவரை "யானைபக்ஷ்தன்" என்று சொல்லுவார்கள். அவர் மிகு மனவலியும் பல தொழிற்சித்தியும் உடையவரானார் "நான் ஒரு மணிநேரம் பானீயம் வடித்து, மறு மணிக்கு கணிதபாடம்

படித்து, அப்பால் மணிக்குத் துப்பாக்கிப் பிரயோகம் செய்வேன்—இவை யாவையும் முழுமனதுடன்" என்று அவர் மொழிந்தார். அவர் ஏதேது செய்தாலும் அதில் இளைக்கா மனவலியும் கிரமமும் இருந்தன. பக்ஸ்து வர்த்தகராகச் சேர்ந்து அவர் அக்கிரமத்தைப் பிரயத்தனத்தோடு நிர்வகித்துவந்தார். அவர் நடத்திய வேலை மிகுதி. அதன் உறுப்பு அனைத்திலும் அவர் எத்தனம் ஏறியிருந்தது. வேலை முன்னிலும் மிக அதிகமாய்ச் செழித்தது. வேலை அதிகரித்ததுபற்றி அவர் தம்மறிவைப் பயிற்சியற்றிருக்க விடவில்லை. இராத்திரிகாலத்தில் அவர் ஜாக்கிரதையாய்க் கல்வியறிவைப் பயிற்சிசெய்து வந்தார். பிலாக்ஸ்தோன், மக்கிஸ்க்யு என்பவர்களுடைய கிரந்தங்களையும், அங்கிலேய தர்மநூல் வியாக்கியான புஸ்தகங்களில் ஆணித்தரமானவைகளையும் வாசித்துச் சிந்தித்துக்கொண்டுவந்தார். நூல் வாசிப்பதைப்பற்றி அவர் கைக்கொண்ட விதிகள் இவை:— "வாசிக்கத் தொடங்கும் நூலை முற்றமுடிய வாசியாது விடாதே"; "நூற்பொருளைத் திட்பநுட்பமாய்க் கிரகித்துக்கொள்ளுகிறவரையில் அது வாசித்து முடிந்ததென்று ஒருபொழுதும் எண்ணாதே"; "ஒவ்வொன்றையும் முழுமனதுடன் வாசித்தறி".

மெத்தவல்ல, முப்பத்திரண்டு பருவத்தில் பக்ஸ்தன் பார்லிமெந்து சபையிற் சேர்ந்தார். உலகத்தில் சிரேஷ்டதரமான குலமக்கள் கூடும் அந்தச்சபையில் சேரும் மேன்மையும் கிரமத்திற் கண்ணும் கல்வித் தெளிவுமுள்ள எவரொவர்க்கும் தடையற அமையும் [illegible] எனும் பதவி அவருக்குச் சபையிற் சேர்ந்த அன்றே அமைந்தது. அவர் தமது விரதமாய்க் கைக்கொண்ட முக்கிய விஷயம் பிரித்தானியர் குடியேறிய சீமைகளில் அடிமைமுறையின்றிச் சிறைமீட்சி உண்டாக்குவதுதான். முதல்முதல் இந்த விவகாரத்தில் தமக்கு அத்தனை காதலும் கருத்தும் உண்டானது

ப்ரிஸில்லா கென்னி எனும் ஸ்திரியால் என்று அவர் தாமே சொல்லி வருவார். அந்த ஸ்திரீ ஏர்ல்ஹாம் குடும்பத்தைச் சேர்ந்தவர், புத்தியிற் சிறந்தவர், அன்பு பெருகும் இதயமுள்ளவர், மாட்சிமையான சகுண சரித்திரங்கள் நிறைந்துள்ளவர். 1821-ம் ஆண்டு அவர் இடைப்பட்டுச் சாங்காலம் கிட்டியிருக்கையில் அதேதருத்து பக்ஸ்தனை வரவழைப்பித்து, 'இருக்குமளவும் அடிமை விவகாரத்தை முக்கியமாய்த் தலைமேற்கொண்டு நடத்திவரவேண்டுமென்று தூண்டிவிட்டார். அவர் சாக்ரவாயில் பயபக்தியாய் இப்புத்தியை மீளவும் ஒருமுறை வற்புறுத்திச் சொல்ல உன்னியும் முடியவில்லை, அதற்குள்ளே பிராணன் போய்விட்டது. அம்மாது சிரோமணி சொன்ன புத்தியை பக்ஸ்தன் ஒருபொழுதும் மறந்திடவில்லை. அவளை நினைத்துக்கொள்ளும் பொருட்டு பக்ஸ்தன் தம் புத்திரிகளில் ஒருத்திக்கு அவருடைய பெயரை வைத்தார். அந்தப் புத்திரி ஒருவருக்கு வாழ்க்கைப்பட்டுப் பிதா வீடு விட்டுப் போனதும் காப்பிரிகள் சிறைமீட்சி அடைந்ததும் ஏக தினம். அது 1834-ம் ஆண்டு ஆகஸ்டுமீ 1உ. தம் மகள் ப்ரிஸில்லா தமது பணிவிடையினின்று நீங்கிப் பிதா வீடு விட்டுக் கணவனுடன் போனபின், பக்ஸ்தன் உட்கார்ந்து இஷ்டர் ஒருவருக்கு எழுதிய வாக்கியம் இது:—"மணமகள் இதோ போய்விட்டாள்; யாவும் சம்பிரமமாய் நடந்தன; பிரித்தானியர் குடியேறிய நாடுகளில் சிறையிருப்பார் ஒருவரும் இல்லை.!"

பக்ஸ்தன் கவிவாணன் அல்ல—மஹாவித்துவான் அல்ல, அந்தரங்க நுட்பங்களைக் கண்டறிந்தவருமல்ல, ஆனால் முக்கியமாய் சிரத்தையும், சாஹஸமும், சித்த நிர்ணயமும், மனவலியுமுள்ளவர். அவர் குணம் ஆதி எல்லாம் அவர் வாய்ப் பிறப்பில் வற்புறுத்தி வெளியிடப்பட்டிருக்கின்றதே: "மனுஷருக்கும் மனுஷருக்கும், மெலியாருக்கும் வலியாருக்கும், பெரியோருக்கும் சிறியோருக்கும் முக்கியமாயுள்ள பேதம் என்ன—என்னவெனில், மனவலி, இளைக்காத நிர்ணயம்—